Teyvapparitcai

1846

தெய்வப்பரிட்சை.

பிரசித்தபத்திரிகை.

புதுவையில்ச்சிற்பதிப்பித்துவெளிப்படுத்தின புஸ்தகங்களாவன்.

	ரூ	அணா
வேத விளக்கம், பேதகமறுத்தல், லுத்தேரினத்தியல்பு. (வீரமாமுனிவர் செய்த விம்மூன்றுதர்க்கபிரபந்தமுமொன்றுகச்சேர்த்தது. தோர கட்டிடம்.	க	அ
ஞானமிர்த தடாகமென்கிற பெரியசெபப்புஸ்தகம். —	க	அ
ஞானமிர்தமென்கிறசெபப்புஸ்தகம. —		ம
வேதப்புரட்டலைநீக்குஞ்சஞ்சீவி. —	க	
சத்தியவேதப்பரிட்சை. —	க	ச
Grammatica Latino-Tamulica —	உ	
ஞானமுயற்சி. அரைக்கட்டிடம்.		அ
ஞானவுணர்த்துதல். —		ச
நன்றுய்நினை. —		அ
சிலுவைப்பாதை. —		அ
தெய்வப்பரிட்சை. —		ச
பிராஞ்சிலக்கணநூற்சுருக்கம். —		மஉ
இலக்கணச்சுருக்கம். —		அ
இலத்தீனிலக்கணநூற்சுருக்கம். —	க	
பெரியகுறிப்பிடமுதவிய நற்பொருளுள்ளவாலர்பொக்கிஷம். —		ச
வாலர்துணை. —		ரு
சாதாரணம்... கடுதாசிக்கட்டிடம்.		க
வேதப்புரட்டலைமறுத்தல். —		உ
நெடுநாட்பஞ்சாங்கம. —		உ
சத்தியவேதாற்புதங்களின்சுருக்கம. —		க
சத்தியசபைப்பரிட்சை. —		க
லுத்தேரினத்தியல்பு. —		க
ஆதிச்சுவடி —		உ
ஆதிசுவடிபரமார்த்தகுருவின்கதை. —		ச
பரமார்த்தகுருவின்கதை. —		உ
இலத்தீனிலுந்தமிழிலும்ஷெகதை. —		ச
பிராஞ்சு நெடுங்கணக்கு... —		உ

இலத்தீன்-பிராஞ்சு-தமிழ் அகாதி, இருநூறுபக்கமுள்ளபங்குப்பங்காகவெளிப்படுத்தப்படுகின்றது. அதினிலை உரூபாயொன்றும்.

Teyvapparitcai

தெய்வப்பரிட்சை.

இஃது

புதுவையிலெழுந்தருளியிருக்கும்

மகாகனம்பொருந்திய ஆண்டவராகிய

கிளெமேன்சுபொனாந்

துரிசிப்பாரென்னும

நாமதேயங்கொண்டிருக்கிற

மேற்றிராணியாரவர்கள் நுமதியில்

உரோமாபுரியினின்றுவந்த

உத்தாரத்தின்படியே



1846

௲௮௱௪௰௬ ௵

புதுவையிற் சன்மவிராக்கினிமாதா கோயிலைச்சேர்ந்த

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

தெய்வப்பரிட்சை.

ஏகோதேவசர்வபூதேசுகூட ஃ
சர்வவியாபி சர்வபூதாந்தராத்ம
கர்மாதியக்ஷ சர்வபூதாதிவாச ஃ
சாக்ஷாத்காரங்கேவலோநிர்குணச்ச - என்பது,

ஏகதேவன் சகலபூதங்களிலுமறைந்தவரும், சர்வவியாபியும், சர்வபூதங்களிலுநிறைந்த ஆன்மாவும், ஆத்துமத்திற் கர்மத்திறுதிமூலமும், எல்லாபூதங்களிலுமுள்ள ஆதிகாரணமும், கருவிகரணுதிகட்கெல்லாஞ்சாட்சியும், ஒருவரும், நிர்க்குணருமாமென்றவாறு.

ஓர்தெய்வமுண்டென்கிற
திஷ்டாந்தம்.

மனுஷசஞ்சாரமில்லாக்காட்டிலேபிறந்து வளர்ந்து ஒருவித்தைசாஸ்திரப்படிப்புமில்லாமல் துஷ்டமிருகங்களோடே மிருகமாய்த்திரிகிறவேடன்முதலாய்ப் பரலோகபூலோகத்தை யாராய்ந்துபார்க்கும்போது ஒருதெய்வமுண்டென்று தானுயறிந்துகொள்ளலாம். அதெப்படியெனில்வனிந்தப்பிரமாண்டத்திலே சர்வத்துககும் பிரயோசனமாகப் பொருந்திக்கொண்டிருக்கிற பஞ்சபூதங்களேயுஞ் சந்திரசூரிய நட்சத்திரகிரகங்களின் அதிசயகிரம

முள்ளநடையையும் பூவுலகத்திலடங்கிய நானாவித
வஸ்துக்களையுஞ் சகலமுமுறையாயுற்பவித்து விளை
ந்துவளர்ந்து காப்பாற்றப்படுகிறசாதாரணபரிபா
லனத்தையு மந்தந்தவஸ்துக்களுக்குள்ள விச்சித்தி
ரமான வடிவிலக்ஷணகுணங்களையு மிவைமுதலா
னபற்பலநேத்தியானவிசேஷங்களையுங்கண்டு ஆச்
சரியப்படாம லிருக்கக்கூடுமோ? பின்னும் இத்த
னைவிச்சித்திரமானபொருட்களெல்லாந் தானாயுண்
டாகமாட்டாதென்றும் இதெல்லாத்துக்கு மாதிகா
ரணமாகிய பரமவஸ்து வேறேயுண்டென்றுந் தன்
னுடையசுயபுத்தியினாலே கண்டுபிடிப்பா னல்ல
வோ? இப்படிசர்வத்துக்கும் ஆதிகாரணமாகியபர
மவஸ்துதான் தெய்வமென்றும், பராபரனென்று
ம், ஏகர்த்தனென்றும், சுவாமியென்று நிச்சயித்
துக்கொள்வான். ஆதலா லவனால் விக்கினமில்லாதா
கில் அவர்மேலே பயபத்தி விசுவாசநம்பிக்கை யவ
னிடத்திற் பிறக்கும். பின்னுஞ் சுவாமியைநேசித்து
ச் சேவிப்பதற்கு மனச்சுதந்தரமுள்ளவிருதய ம
வனுக்குண்டென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இம்
மாத்திரஞானத்தைச் சுயபுத்தியினாலே கிரகித்துக்
கொள்ளக் காட்டுமனுஷனுக்குஅவகாசமுண்டாயி
ருக்கச்செய்தேஅந்தஞானமானது பட்டணவாசிக
ள்முதலானபேர்களுக்கில்லாமற் போகிறதென்ன?
பாவமயக்கமே அதற்குக்காரணமொழியவேறல்ல.

தெய்வமில்லையென்கிற
குருட்டாட்டம்.

எழுத்துவாசனை படித்தவர்களானசிலருந் துரா
சாபாசங்களினால் மதிமயங்கிச் சர்வமுநித்தியமெ
ன்றும் பிரபஞ்ச மொருமாயையென்றும் பாவ

புண்ணிய நரகமோக்ஷமில்லையென்றுந் தெய்வத்தைக்கண்டதாரென்றும்பிதற்றுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களாத்துமத்தைப்பாவாக்கிரமத்துக்கு விற்றவர்களுமாய்ப் பட்டப்பகலிலுந்தடவுகிற அந்தகார குருடருமாய்ப்போய், இலவலேசமாகிலும் ஞானவெளிச்சந் தங்களிருதயத்திலேபிரகாசிக்கவொட்டாமற் சத்தியத்தைப் பிறக்கணிக்கிறார்கள். சரீரசுகபோகங்களைமாத்திரம்பேக்ஷிக்கிற மிருகங்களாய்நடந்து தெய்வத்தையும்ஆத்துமத்துக்குவரத்தக்கநற்கதி துர்க்கதியையுநினையாமற்போகிறார்கள். சற்றேஞானக்கண்ணைத் திறந்துபார்த்து யோசிப்பார்களேயாகில் தங்களுக்குள்ள சீவாத்துமத்தைப்போலக் கண்ணுக்கெட்டாத ஞானசுரூபமாகிய வஸ்துக்களுண்டென்றுங் காணப்பட்டவஸ்துக்களெல்லாம் அழியுமென்றுங் காணப்படாதவஸ்து அழியாதென்று மறியக்கூடாதோவென்ன? ஆனால் வர்கள் தங்களுக்குச்சீவாத்துமமேயில்லையென்றும் தைக்கண்டதாரென்றுஞ்சொல்லுவார்களாக்கும். நல்லது. தங்களுக்குமுப்பாட்ட னிருக்கவில்லையென்றும் அவனைக்கண்டதாரென்றுஞ்சொன்னா லொத்துக்கொள்பவர்களுண்டோ? இல்லையே. அவர்களிருக்கையில் அவர்களுடையமுப்பாட்டனொரு மகத்தியமாயிருந்தது நிச்சயமல்லவோ? இப்பிரகாரமே காரியச்சுரூபமாகியவிப்பிரபஞ்சமிருக்கக்கொள்ள அதினுடைய சிஷ்டி ஸ்திதி இலயத்துக்குக் காரணகர்த்தரான சுவாமியுமுண்டென்று மவர்தான் நரகமோக்ஷத்திற் பாவபுண்ணியத்துக்குத் தக்கசம்பாவனையைக்கட்டளையிடுவாரென்று நிச்சயித்துக்கொள்ளலாமே. இந்தப் பரம நீதிநியாயங்களின்பேரி

லே சந்தேகப்படுகிறபாவிகள் தாங்களே யாதோர் ஆபத்துநேரிடுகிறவேளையில் ஐயோதெய்வமே நீயேகதியல்லாமல்வேறேகதியில்லையென்றுபெருமூச்சிட்டுமுறையிடுகிறார்கள். அப்படியிருக்கத்தெய்வந்தான்தங்கள்பாவங்களைப்பொறுத்துத் தயைசெய்து தங்களைக்காப்பாற்றி யிரட்சிக்கத்தக்கதென்று மற்றச்சமயங்களிலே நினையாமற்போகிறதென்ன? அவர்கள்மனந் திரும்பாதேபோனால் நரகத்திலேவிழுந்து மட்டில்லாதவாக்கினையை யநுபவிப்பார்களென்பதற்குச்சந்தேகமில்லை. அப்போதாக்கு மிந்தச் சத்தியங்களைக் கண்டுபிடித் தொத்துக்கொள்ளுவார்கள். ஆனாலப்போது அவர்களுடையநிர்ப்பாக்கியகேடுதிரும்பாது. ஆகையால் தெய்வமில்லையென்பது பெரியபைத்தியமு மட்டில்லாக்கேடுள்ளதுரோகமுமென்று இப்போதுதானுணர்ந்துகொள்ளக்கடவார்கள்.

பலதேவாகளுண்டென்கிற அஞ்ஞானம்.

மெய்யானதேவனைமறந்துவிட்டுத் தெய்வமல்லாதவஸ்துக்களைத்தெய்வமென்றுவணங்குகிறதும் துகளுக்குப்பலிபூசை யாராதனைசெய்கிறதும் மேற்சொல்லியதைப்போலே மட்டில்லாததோஷமுள்ளபாவாக்கிரமதுரோகமென்பது குன்றாதசத்தியமாமே. இந்தஅக்கியானஞ் சிந்திராச்சியத்தாருக்குள்ளே விசேஷமாய் வெகுவிஸ்தாரமாய் நடந்துவருகின்றது. அதெப்படியெனிற் காசி இராமேசுரத்துக்குட்பட்ட தேசங்களெல்லாமடங்கிய சிந்திராச்சியமானது கொஞ்சந்தானென்பதற்குச் சந்தே

கமில்லை. அது எம்மாத்திரமென்றால் அரசிலைக்கு அதினுனியெம்மாத்திரமோ பூவுலகத்துக்குச் சிந்திராச்சியமாதியந்தம் அம்மாத்திரந்தானென்னத் தகும், அல்லது இவ்வுலகத்திலே நூற்றுநாற்பது பங்கிலொருபங்காம். ஆயினு மித்தனைகொஞ்சமாகிய சிந்திராச்சியத்திலே யநேககோடிதேவர்களை யேற்படுத்திப் பஞ்சபூதமுதலிய அந்தந்தவஸ்துக்களையுந் தெய்வமென்றெண்ணிஅதுகளுக்குப்பூசை நமஸ்காரஞ்செய்கிறார்கள். சேவகர்தங்களாயுதங்களையுங் கணக்கவெழுத்தாணிகளையுஞ் சாஸ்திரிகள்புஸ்தகங்களையுநெசவுக்காரர்தறிகளையும்வண்ணார்வெள்ளாவிப்பானையையு மிப்படியந்தந்தத்தொழிலாளிகள் தங்கள்தங்களாயுதங்களையு நமஸ்கரிக்கிறார்கள். ஸ்திரீகள்முதலாய் முறங் கூடை குடஞ்சட்டிபானை சுடுவைமுதலானதுகளுக்குப் பூசைநமஸ்காரநடத்துகிறதுமுண்டு. மீளவுந் துளசி அரசுவேம்பு இவைமுதலானசெடிமரங்களைச்சுற்றிவந்துதண்டனிடுகிறார்கள். பசு, எருது, குதிரை, யானை, குரங்கு, பருந்து, பாம்புமுதலான அற்பசீவசெந்துக்களையும் வணங்குகிறார்கள். இப்படிநீசமுமற்பமுமாகிய சிஷ்டிகளுக்காராதனைசெய்கிறது எவ்வளவோபுத்தியீனமாயிராது?

அந்தப்புத்தியீனத்துக்குக் குருட்டுநியாயமாகஅவர்கள்சொல்லுகிறதேதெனில் தெய்வஞ்சர்வாந்தரியாமியாகையால்எங்கும்வியாபகமாய்நிறைந்திருக்கின்றதென்றும், ஆதலால் அந்தந்தவஸ்துக்களுக்குச்செய்கிறபூசைநமஸ்காரந் தெய்வத்துக்குச்செல்லுமென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியெந்தெந்தவஸ்துக்களுக்குஞ் செய்யுஞ்சங்கையானது

தெய்வத்துக்குச்செல்லுமேயாகில்துகளுக்குச்செய்யப்படுகிற அவசங்கை அவமானநிஷ்டூரமுந் தெய்வத்துக்குச்செல்லுமென்றுசொல்லவேண்டியதாமே. ஆகையால்மரங்களை வெட்டுகிறவெட்டுக்களும், எருதுபசுக்களையடிக்கிறஅடிகளும், குதிரைகளைக்காலாலுதைக்கிறவுதைகளுஞ்சவுக்கால்டிக்கிறவடிகளுந்தெய்வத்துக்குப்படுமென்றல்லவோசொல்லவேண்டும். ஆனவிப்படிசொல்வது முழுப்பைத்தியமாகையால் அந்தநீசவஸ்துக்களுக்குச் செய்கிற சங்கை தெய்வத்துக்குச்செல்லாதென்றெல்லாரும் ஒத்துக்கொள்ளக்கடவார்கள்.

ஆனால்ப்படிப்பட்ட மூடத்தனமான அக்கியானத்துக்குக்காரணமேதென்றால் அநேகசனங்கள் நித்தியபேரின்பபாக்கியங்களை நினைத்தபேட்சியாமல் இப்பிரபஞ்சப்பொருட்களைமாத்திர மிச்சித்துநாடுகிறபிரமையாமே. இதுகள்தான் தங்களுக்குக்கதியென் றபத்தமாய்நினைத்து இதுகளைப்பெழுதாயெண்ணுகிறார்கள். இந்தவஸ்துக்களையெல்லாமுண்டாக்கினவராரொன்றும்எதுக்கு இதுகளையுண்டாக்கினாரொன்று நினையாமல்ஞானக்கண்மூடிக்கொண்டு தெய்வத்தைமறந்து தங்கள்துரிச்சைகளுக்குப்பொருந்திய பொய்த்தேவர்களையேற்படுத்தி நமஸ்கரித்து நரகத்திலேவிழுகிறார்கள். இப்படிமனுஷனுக்குபகாரமாகக் கர்த்தர்சிஷ்டித்தருளிய பிரபஞ்சவஸ்துக்களைத் தெய்வமாக வாராதிப்பது மிகவு மதிகேடானதுரோகமென்று யாவருங்கண்டுகொள்ளும்பொருட்டு இதை யொரு உவமையாலேவெளிப்படுத்துவோம். ஒரு இராசாவானவன் ஒருசேவகன்பேரிலேதயவுவைத்து நல்லநல்ல ஆ

டையாபரணங்களையுந் திரளானதிரவியங்களையும் பலசுவாஸ்தியங்களையுங் குதிரை குடை பல்லக்குமுதலானசகலவெகுமானங்களையுங் கட்டளையிட்டருளினான். ஆனாலித்தனை பாக்கிய நன்மைகளைக் கைக்கொண்டசேவகனந்தவிராசாவைப் புகழாமலுங் கொண்டாடாமலும்போய்த் தனக்குவந்தபொருட்களைப்பார்த்து நீங்களே யெனக்கு இராசா, நீங்களே எனக்குக்கதி, உங்களுக்கேதோத்திரமென்றுசொன்னாலப்படிக்கொத்தவனை யென்னென்றுசொல்லுவார்கள்? அற்பனென்றும் புத்தியீனனென்றும் நன்றியறியாதவனென்றுஞ் சொல்லப்படுவானல்லோ? மீளவுமிதனாலிராசாவின்மனமுறிந்துசினங்கொள்ளவே அவன்பெற்ற சகலநன்மைபாக்கியங்களையுமிழந்துபோவானென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அப்படியே பரலோகபூலோகமெல்லாஞ்சிஷ்டித்த அநந்ததயையுள்ளசுவாமியை நினையாமலுந் துதியாமலுந் தங்களுக்குதவியாக அவராற்கொடுக்கப்பட்ட வஸ்துக்களைத்தான் தெய்வமென்றுந் தங்களுக்குக்கதியென்றுநினைத்தாராதிக்கிறார்கள். இவ்வண்ணமே சிஷ்டகராகியபரமகர்த்தாவுக்குத்துரோகமாய் அற்பவஸ்துக்களானசிஷ்டிகளைத்தெய்வமாகவேற்படுத்துகிறதினாற் சகலநன்மைகளையுமிழந்து நரகத்திலே யெத்தனையோகஸ்தியாக்கினைகளுக்கு ஆட்களாய்ப் போகிறார்களென்றுசொல்லவுங்கருதவுங்கூடாது.

விக்கிரகங்கள்.

இப்போதுசொல்லப்பட்டவக்கிரமங்களையுமல்லாமலிதுகளிலுமதிகமூடத்தனமானவேறோர் அக்கிரமத்தையுஞ்செய்கிறார்கள். அதேதென்றால் ம

ணிதர்க் குதவியாகக்கர்த்தரா லுண்டாக்கப்பட்டவ
ஸ்துக்களைத் தெய்வமென்றாராதிக்கிறதுந்தவிர,தா
ங்களே தங்கள் மனசின்படி செய்வித்த பற்பல
விக்கிரகங்களையுந் தெய்வமென்றெண்ணி, அதுக
ளுக்குப்பலவிதமாய்ப் பூசைநமஸ்காரஞ்செய்து
கொண்டுவருகிறார்கள். இதிலுள்ளபுத்தியீனத்தை
ப்பாருங்கள். பஞ்சலோகங்களில் யாதொன்றாகி
லு மரக்கட்டையாகிலுங் கருங்கல்லாகிலுங் கம்
மாளருக்குக்கொடுப்பார்கள். இவர்க ளதுகளையுரு
வாக்கத்தங்கள்காலினாலேமிதித்து,அநேகமுறைவெ
ட்டிச் செதுக்கித் தங்களுக்கிஷ்டமானகோலமா
க்குவார்கள். அப்படி தொழிலாளிகையாற் செய்ய
ப்பட்ட உயிரற்றசிலைகளுக்குத்தான் செத்தவர்களி
ன்பேரிட்டு அதுகளைத்தெய்வமென்கிறார்கள். † இ
தைவிட அக்கியானமும்மைத்தியமுமுண்டோ? இ
ப்படிப்பட்ட அக்கியானங் காசி இராமேசுரத்துக்
குள்ளாகிய தேசங்களில்மிகுதியாய்நடந்துகொண்
டுவருகின்றது. அப்படிக்கொத்தசிலைகளை அரமனை
வீடு தெருவீதி வழிக்கரை பறுவதத் தோப்பு நீர்த்
துறை மரத்தடி திண்ணைகள் முதலியவிடங்களிலே

---

† விபரம். இந்தக்கண்டனமானது சத்தியவேதத்தில்வழங்கிய
திருச்சுரூபங்களைச்சேராது. ஏனெனிற்சத்திய திருச்சபையந்தச்சு
ரூபங்களைத் தெய்வமென்றாராதிக்கிறதுமில்லை, அதுகளில்தேவக
லையுண்டென்றுநினைக்கிறதுமில்லை. அத்திருச்சுரூபங்கள் அவதரி
த்தகர்த்தருக்கு மவருக்குப்பிரியமானபரிசுத்தவான்களுக்கு நினை
ப்படையாளமாகவிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அதுகளுக்கு
முன்பாகச்செய்யப்படுகிறவணக்கமெல்லா மதுகளாற்குறிக்கப்ப
ட்டகர்த்தருக்கும் அர்ச்சியசிஷ்டர்களுக்குஞ் செலுத்தப்படுகிற
தாமே. இதைக்குறித்துவேதவிளக்கத்து-௬-ம். அதிகாரத்திலும்,
வேதப்புரட்டலைநீக்குஞ்சஞ்சீவியின்-௩-ம். காண்டத்து-௪-ம். அ
திகாரத்திலுமுள்ளஉத்தமநியாயங்களைக்காண்க.

ஸ்தாபித்திருக்கிறூர்கள். மீளவு மந்தவிக்கிரகங்களு க்குக்கோயில் குளங்கட்டுவித்து அதுகளைச்சிறப் பான ஆடையாபரணங்களினுலேயலங்கரித்து மே ளவாத்திய பலஸ்திரீகளினுடல்பாடல் தூபதீபறை வேத்தியவபிஷேகமுதலானவாடம்பரத்தோடு தே ர்திருநாளைக்கொண்டாடுவார்கள். பாவத்தி லமிழ் ந்தின மனுஷிருரூபமாகவும் பொய்த்தெய்வமாக வுமுண்டாக்கினசிலைகளுக் கித்தனையாரவாரம்நட ப்பிக்கிற தென்னபுத்தியென் று விசாரிக்கிறவர்களி ல்லை. மெய்ஞ்ஞானங்கேட்டுயோசிப்பார்களேயா கில் இதெல்லாம் வீணென் றும் புத்தியீனமென் று ம்பாவமென் றுஞ் சகலர்க்கும்வெளியரங்கமாமே.

அக்கியானிகளி லதிகமூர்க்கமுள்ளசிலர் தங்கள் விக்கிரகங்களை யாதொருவன்மரமென் றுங்கல்லெ ன் றுஞ் சொல்லுகிறதைக்கேட்கும்போது மகாஉ ரோசத்தோடேகோபித்துக்கொண்டு எங்கள்தெ ய்வத்தை மரமென் றுங் கல்லென் றுஞ்சொல்லலா மோ? எந்தவிக்கிரகத்தையும் ஸ்தாபிக்கிறபோது வேதபிராமணன்வந்து மந்திரவல்லமையால் அது க்குத்தேவகலையையுஞ்சத்தியையுங்கொடுக்கவே அ துமெய்யானதேவனுயிற்றென்பார்கள். ஆனுற் பி ராமணனுக்கு இப்படிக்கொத்தவல்லமைசாமர்த்தி யமிருந்தால்தானுகிலுந் தன் னுடைய பெண்சாதி பிள்ளையானுலுஞ் சாகிறபோதுதனக்கு மவர்களுக் குஞ்சீவனையொருநாழிகையாவது நிறுத்துகிறதுக் குச்சாமர்த்தியவல்லபமில்லாமற் போகிறதென்ன? தனக்கே இம்மாத்திரங்கொஞ்சசகாயம்பண்ணிக் கொள்ள வல்லமையில்லாதவன் தேவகலைசத்தியை க்கல்லுக்கு மரத்துக்கு மெங்கேயிருந்துகொண்டு

வந்துகொடுப்பான்? அதைக்கொடுத்ததற்கடையாள மென்ன? அந்தவிக்கிரகஙகளுக்குத் தான்படைத்த சோற்றிலே ஒருபருககையாகிலுந் தின்கிறதுககு வாயுண்டோ? மேளவாத்தியங்களுடையதொனியை யும் பிராமணர்சொல்லுகிற சுலோகங்களையுங் கே ட்கிறதுக்குச்செவியுண்டோ? தனக்குச்செய்யப்ப டுகிற வெகுமானமு மவமானமும் றியுமோ? யாதா மொருவன் அந்தவிக்கிரகங்களுடைய கண்காதுமூ க்குமுதலான அவையவங்களை வெட்டியுடைத்துப் பொடியாக்கிப்போட்டா லதெல்லாமறுபடி பொ ருந்திக்கொள்ளுகிறதுக்குத்தான் திராணியுண்டோ? அந்தப்பிராமணன்கொடுத்ததேவகலையுந் தேவசத் தியுமென்னமாய்ப்பாழ்த்துப்போச்சுது?

பூருவகாலத்திலோரிடையன் இராசபாதைக்கடுத் த ஒருதோப்பிலிருந்து தன்ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அந்தவழியாகவொருபிராமண ன்வெயிலி லடிபட்டு அத்தோப்பினிழலைப்பற்றி யந்த இடையன்கிட்டவந்தான். இடையன்பிராம ணனைக்கண்டவுடனே கைகுவித்துத் தண்டன்பண் ணி யிந்தவெயிலிலே யெங்கேயெழுந்தருளுகிறீரொ ன்று கேட்க, பிராமணன்சொல்லுவான்: இதற்குச் சற்றுத்தூரத்துக்கப்பாலே ஓர்கிராமத்திற்புதுவிக் கிரகத்தைத்தீர்த்தார்கள். இன்றுஇருபத்தெட்டுநா ழிகைக்குமேல் நல்லமுகூர்த்தமாதலா லந்தவிக்கிர கத்துக்கு மந்திரச்சத்தியினாலே தேவகலையைக் கொடுக்கப்போகிறேன், நீ யிந்தத்தர்மகாரியத்து க்கேதாகிலுந் தானங்கொடுப்பாயானாற் புதுத்தே வன் நீகேட்டவரமெல்லாங்கொடுப்பானென்றான். இடையனிந்தவார்த்தையைக்கேட்டு விக்கிரகத்துக்

குத் தெய்வகல்லைகொடுக்கிறவல்லமை யுங்களிடத்தி
லிருக்கிறதினாலேயாக்கும் உங்களைத் தேவபிராமண
ரென்றுசொல்லுகிறார்கள். ஆனாலடியேனும்மைஒ
ருமன்றாட்டுக்கேட்கிறேன். இதைச்செய்தருளவே
ணுஞ்சுவாமீ: கொஞ்சநாளைக்குமுன்னே என்மந்
தையில்அநேகம் ஆடுகள்வியாதிப்பட்டுச்செத்துப்
போச்சுது. தேவரீருத்தாரங்கொடுத்தால் மண்ணால்
அத்தனையாடுகளை யுண்டுபண்ணிவைக்கிறேன், நீர்த
யைசெய்து அதுகளுக்கு ஆட்டுக்கல்லையைக்கொ
டுத்தா லெனக்குப்பெரியபாக்கியமாமே. கல்லுக்
குத் தேவகல்லையைக்கொடுக்கிறதிலு மண்ணுக்கு
அற்பசீவனாகுகிற ஆட்டுக்கல்லையைக் கொடுக்கிறது
மிகவுமெளிது. அப்படியே யதுக ளாட்டுக்கல்லைய
டைந்து குதித்து நடந்து புல்லுதின்றால் வெகு அ
திசயமுமாயிருக்கும். உமக்குநல்லகீர்த்தியுமாமே.
நானு மும்முடையபேரைச்சொல்லிப் பிழைப்
பேன். இந்தப்புது ஆடுகள்கறக்கும்பாலையெல்லா
முமக்கேகொடுப்பேன். இம்மாத்திர முதவிபண்
ணவேணுமையாவென்று மன்றாடினான். அதற்கு
ப்பிராமணன்வெட்கப்பட்டுச் சீக்கிரமாயெழுந்
திருந்து இடையனை நிந்தித்து விலகிப்போனான்.

ஒரிராசதானிபட்டணத்தி லோரேழைப்பிராம
ணன் கோமட்டிகளுடையகடையிலேபோ யவர்க
ளுக்கேற்றபடி முகவிச்சகமுந் தோத்திரபிரியமு
ஞ்சொல்லி யாசகம்பண்ணிக்கொண்டுவருவான்.
அதினாலவனுக்கு ஏழைமைநீங்கிக் குறையில்லாம
ல்ஏவஸ்திரத்துக்குஅவகாசமுண்டானதுந்தவிர,
கையிலேபத்துப்பணமுஞ்சேர்ந்தது. இப்படியிரு
க்கையிலே யண்டைவீட்டுப்பிராமண னெந்நேர

ம்பார்த்தாலு மவனுக்குச் சொல்லும்புத்தியேதெ
ன்றால்: நீபெரியவனானாய், பத்துப்பணமுன்கையி
ற்சேர்ந்திருக்கின்றது. ஆனாலுன்வீட்டிலொருதெ
ய்வமுமில்லை, சமணரைப்போலிருக்கிறாய். நமது
மரியாதைதப்பலாகாது, வீட்டிலேதேவபூசைநட
ந்தாற்சகலகாரியமுஞ்செயமாமே, பாக்கியமுமே
ன்மேலும்வரும், புத்திரசந்தானமுமுண்டாகும்.
இதுவுமல்லாமல் தேவபூசையின் பேரைச்சொ
ல்லிச்சூத்திர அறுதவிமக்கள்கையிலேதாகிலுஞ்ச
ம்பாதிக்கலாமென் றிதுமுதலானபுத்திகளைச்சொ
ல்லிக்கொண்டுவருவான். இதையெல்லாம் அந்தப்
பிராமணன்கேட்டுஅதிகவெகுமானபாக்கியத்தின்
மேலாசைப்பட்டுவிக்கிரகங்களைச்சம்பாதிக்கிறது
க்குப் பிரயத்தனம்பண்ணினான். பிராமணர்செல
வுக்குமுற்றுகையானல்வீட்டிலுள்ளவிக்கிரகங்களை
விற்பார்களென்றறிந்து அப்படிப்பட்டசமயம்பா
ர்த்துப்பித்தளைச்சிலை செப்புச்சிலை சின்னதும்பெ
ரிதுமாய் வேண்டியவிக்கிரகங்களையெல்லாம் விலை
தீர்த்துக்கொண்டான். அதுகள் வீட்டிற்சேர்ந்தவு
டனே வெகு ஆடம்பரமாய்ப் பூசைநைவேத்திய
ஞ்செய்யவேணுமென்றுயோசித்துத்தன்வீட்டை
மெழுகித்தீற்றிச் சுத்தம்பண்ணிச் சினேகிதர்கிட்
டப்போய்ப் பட்டு பட்டாவளி மேற்கட்டி யெ
ழுத்துப்பிடவைகளை யிரவலாய்வாங்கிவந்தான். அ
துகளைக்கொண்டு வீடெல்லாஞ் சிங்காரித்தபிறகு
ஒருமேடையின்மேலே வரிசைவரிசையாய்விக்கிர
கங்களையெல்லாம்ஸ்தாபித்து வழங்கியமுறையின்
படியே தூபதீபநைவேத்தியமுதலியசடங்குகளை
யெல்லாநிறைவேற்றிச் சங்கீதமேளவாத்தியங்கள்

முழங்க, சோறு கறிபதார்த்தங்களையுந் தோசைவ
டை அதிரசமுதலான நானாவிதபண்ணிகாரங்களையு
ம்விக்கிரகங்களுக்குப்படைத்தான். பின்னும் பிரா
மணரெல்லாரும் பந்திபந்தியாயுட்கார்ந்து சாப்பி
ட்டுக் கைகழுவித் தாம்பூலம்வாங்கிக்கொண்டு அந்
தவீட்டுப்பிராமணனுக் குபசாரஞ்சொல்லியனுப்
பிவிட்டுக்கொண்டு தங்கள்தங்கள்வீட்டுக்குப்போ
னார்கள். சாப்பிடவந்தவர்களுக்குள்ளே கள்ளப்பி
ராமணனொருவன் விக்கிரகங்களிருக்கிற அறையிலு
ள்ளதெல்லாங் குறிப்பறியப்பார்த்துக்கொண்டு க
தவுதிறப்பதற் குபாயமும்பண்ணி ஓட்டுப்போட்டு
க்கொண்டான். பாதிராவிலே வீட்டிலுள்ளவர்க
ளெல்லாருஞ் சோற்றுமயக்கத்தினலேசோர்ந்துகு
றட்டைவாங்கி யசந்தநித்திரைபண்ணுகிறசமயத்தி
லேஅவன்விக்கிரகங்களிருக்கிறஅறையைத்திருட்டா
ட்டமாய்த்திறந்து அதிலுள்ள புடைவைசீலைவிக்கி
ரகங்களெல்லாமெடுத்துமூட்டையாகக்கட்டித்தோ
ள்மேலே மாராப்புப்போட்டுக்கொண்டான். ஆ
னல்அத்தோடோடிப்போகவெளியிலேவருகிறபோ
து அந்தவீட்டின் எச்சில்களைத்தின்று வயிற்றைவ
ளர்க்கு மொருநொண்டிநாய் அந்தக்கள்ளப்பிரா
மணனைக்கண்டு குலைத்து மேல்விழுந்து புறங்காலை
க்கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு விடாததினலே
திருடனுக்குவெகுசஞ்சலமுண்டாயிற்று. மூட்டை
யின்பாரமொன்று, நாய்க்கடியினுபத்திரியமொன்
று, மனுஷர்விழித்துக்கொண்டு எங்கேபார்க்கிறார்க
ளோவென்கிறபயமொன்று இந்தவிதமாக மிகவுந்
திகிலடைந்து வாய்பேசாமல் நாயோடேமல்லா
டுகிறபோது தன்பிறகேயிருக்கிறபாழுங்கிணற்றெ

ரியாமல்திணையிடறிவிழுந்து கழுத்தொடிந்துசெத்
தான். விடிந்தபிறகுவீட்டெசமானெழுந்திருந்து வி
க்கிரக அறைக்கதவுதிறந்திருக்கிறதையுந் தட்டுமுட்
டுக்களொன்றுமில்லாததையுங்கண்டு வாயிலேநீரில்
லாம லுள்ளேயெங்கும்போய்ப்பார்த்து ஒன்றும்
கப்படாமையாற்சரீரமரத்துப்போய்ப்பேரிடிதலை
யில்விழுந்தாற்போலேபுத்திகலங்கி யேங்கிவிழுந்து
வெகுதுயரத்துடனே ஐயையோதெய்வமேயெந்த
விதிவசமென்னைச்சுற்றிக்கொண்டது? இன்றோடே
யென்வார்த்தைசரி, இந்தவல்லக்காட்டுத்தேவர்களை
யெப்போதென்வீட்டுக்குக்கொண்டுவந்தேனோ அ
ப்போதே அநர்த்தம்வந்துவிளைந்தது. விக்கிரகங்க
ள்தான்போனாற்போகட்டும், ஆனாஊராருடைமை
யையெங்கேயிருந் துத்தரிக்கப்போகிறேனென்றங்
கலாய்ப்பான். அச்சமயத்திலே அந்தநொண்டிநா
ய்வாலைக்குழைத்துக்கொண்டு பாழுங்கிணறுமட்டு
ம்போய் வீட்டுவாசற்படிமட்டும் வந்து இப்படிய
நேகவிசை சாடைகாட்டுகிறமேனையாய்த் திரியும்.
இதைக்கண்டுபிராமணன் சந்தேகப்பட்டு ஒருநா
ளுமிப்படிசெய்யாதநா யின்றைக் கிவ்விதமாய்ப்
போய்வருகிறதேது, இதற்குமுகாந்தரமென்ன, அ
திசயமென்னவென்று பாழுங்கிணற்றின்கிட்டப்
போய்உற்றுப்பார்த்தான். அதிலேசெத்துக்கிடக்கி
றமனுஷனையு மூட்டையையுங்கண்டு அகமகிழ்ந்து
சீக்கிரத்துடனே வீட்டுமனுஷரையெல்லாமழைப்
பித்து அந்தமூட்டையை யெடுப்பித் தவிழ்த்துப்பா
ர்த்தான். உடைமையெல்லாஞ் சரியாயிருக்கிறதைக்
கண்டுமிகுதியுஞ்சந்தோஷப்பட்டு, இந்தநாயின்பு
ண்ணியத்தினாலே இன்றைக்குப்பிழைத்தேன். எ

ன்குடும்பத்தைநிலைநிறுத்தினது இந்தநாய்தானே. நான்கொண்டதேவர்களைப்பார்க்கவிதுவேயெனக்குக்குலதெய்வமென்று வீட்டுக்குப்போனான். இதைக்கேட்ட மற்றப்பிராமணருமிந்தவார்த்தையையொத்துக்கொண்டார்கள்.

யோசியாமை அஞ்ஞானக் காரணம்.

மனுஷனுடையசீவாத்துமமானது புத்திஞானமுள்ளதுமாய்ப் பிரபஞ்சசகலவஸ்துக்களிலு மேலானவஸ்துவுமாய் அழியாதஞானச்சுரூபமுமா யிருக்க அழிந்துபோகிறவஸ்துக்களைத் தெய்வமென்றெப்படியெண்ணக்கூடும்? அதினால்மனிதன் தன்சொந்தச்சுபாவமேன்மைமகிமையைமறந்துவிட்டுமெத்தவு மீனமானவஸ்துக்களுக்கும்பசாசுக்குமடிமையாய்ப்போகிறானென்பது பிரத்தியக்ஷமாமே. மீளவு மெய்யானசர்வேசுரன் நித்தியநன்மைச்சுரூபியாயிருக்கையில் அவரைவணங்காமற்பிறப்புமிறப்புமுள்ளவர்களாகிப்பாவத்தில்மிழ்ந்தினவர்களைத்தெய்வமென்றுவணங்குகிறது எல்லா அக்கிரமத்திலு மக்கிரமமல்லவோ? இப்படிக்கொத்த வக்கியானமித்தேசத்தி லிவ்வளவுவிஸ்தாரமாய்ப்பரம்பினதுக்குக்காரணமேதென்றாற் சத்தியத்தைவிசாரித்துயோசியாத அசட்டைத்தனமாமே. மனுஷன்தன்சுயபுத்தியினாலுந் தேவஅநுக்கிரகத்தினாலு மெய்யானதேவனொன்று மவருடைய இலக்ஷணங்களேதென்றும் நிச்சயித்துக்கொள்ளக்கூடுமானாலுந்தெய்வத்தையும் ஆத்துமத்தையுஞ்சேர்ந்தகாரியங்களைக்கவனியாமலும் யோசியாமலுஞ்சட்டையாயி

ருக்கிறபடியினாலே யிப்படிக்கொத்தஅக்கியானத்தி லே முழுகிப்போகிறான். அநித்தியகாரியங்களின்ம ட்டிலேயோவெனில் மிகவுஞ்சாக்கிரதைவிவேகமு ண்டு. வட்டிக்குக்கொடுக்கிறவன்சீட்டுஞ்சாட்சியுமி ல்லாமற்பணங்கொடான். பத்துப்பணச்சம்பளத் துக்குச்சேவிக்கிறவன் கைம்முதலில்லாதவன்கிட்ட ப்போய்ச்சேவியாமல்ஆஸ்திநற்குணமுடையவனை விசாரித்துத்தேடிச்சேவிப்பான். தான்சேவிக்கவே ண்டியபரமதேவனொன்றுந்தன்னையிரட்சிக்கத்தக் கவராயொன்றுஞ்செய்தபாவபுண்ணியத்துக்குத்தக் கது நரகமோக்ஷங்கட்டளையிடுகிறகர்த்தராயொன்று நிதானிக்கிறதுக்குமாத்திரம் யோசனைவிவேகமில் லாமற்போகிறதென்ன! இந்தப்பரமகாரியங்களின் பேரிலொருவருக்கும்விசாரமில்லை.

சனமருள் சாஸ்திரமருள்.

இத்தேசத்தார் வேதகாரியங்கள்மட்டி லொருவ ரொருவரைப்பார்த்துநடக்கிறதொழியமற்றப்படிய ல்ல. வழக்கமேயவர்களுக்குப் போக்கல்லாமல் வே றொருநியாயமுமில்லை.மேலுமந்தந்தவழக்கம் ஆதி துவக்கியிருக்கிறதோமுந்தியிருந்தநியாயமுள்ளமு றைமைக்குவிரோதமாய் நடுவாந்தரத்திலுண்டான தோவென்றுபாராமலநுசரிக்கிறார்கள். இலிங்கதா ரியை நீயேனிலிங்கங்கட்டிக்கொண்டிருக்கிறாயெ ன்றுகேட்டா லென்னுறவின்முறையாருமுன்னோ ரு மிப்படிநடந்ததினாலே நானுமிப்படிசெய்கிறே னென்பான். விஷ்ணுமதத்திலே யேனிருக்கிறாயெ ன்று வைஷ்ணவனைக்கேட்டா ல்நேகதலைமுறையா யெங்கள் பிதாக்கள் விஷ்ணுமதத்திலேயிருந்தபடி

யினாலே நாங்களும்மதைய நுசரிக்கிறோமென்றுசொ
ல்லுவான். பின்னு நடுவீட்டு நாச்சியாரையு மின்னி
ன்னகுலதெய்வத்தையும்என் கும்பிடுகிறீர்களென்று
அவரவர்களைக்கேட்டா லதுவே எங்கள்பெரியோ
ர்களுக்குப்பூர்வகாலத்தில் தெய்வமாயிருந்தமையா
லே எங்களுக்குந்தெய்வமென்பார்கள். இந்தவைவா
கப்புத்திந்யாயத்தோடே சத்தியநெறியைத்தேடா
மலு நலம்பொலம்பாராமலும் பூர்வீகத்திற் சகல
ருமாராதித்தஏகதேவனைவிட்டு நடுவாந்தரத்தில்வன்
வன் தன் தன் குலதெய்வமாகப்பற்றிக்கொண்டபொ
ய்த்தெய்வம் நாள்வட்டத்திலே மெய்யானதெய்வ
மாகமாட்டாதென்று யோசியாமலும் வேதகாரிய
த்தைக்கோத்திர நடத்தையாகவுங் குலாசாரமாகவு
மெண்ணிக்கொண்டு தவறுகிறார்கள். அவ்வண்ண
மேசத்தியத்தின்மேல் யோசனையின்றி அநேகர்தே
ர்திருநாள் கொண்டாடுகிறதுங் காசிராமேசுரஞ்
சீரங்கங் காஞ்சிபுரந் திருப்பதியிதுமுதலானவிட
ங்கள் புண்ணியஸ்தலங்களென்று அங்கங்கேதீர்த்த
யாத்திரையாய்ப்போய்த்தீர்த்தமாடுகிறதுஞ்சேவிக்
கிறதுந் தலைமழுங்கச்சிரைக்கிறது மூத்திரைத்தான
ம்பெறுகிறதும் பெருமகிமையென்றும் மகாபல
னென்றும் நினைக்கிறார்கள். ஆனாலந்தமுறைமைகளி
னபிப்பிராயமென்ன அஸ்திவாரமென்னவென்று
அவர்களைக்கேட்டால் எல்லாரும்ப்படி செய்கிறபடி
யினாலே நாங்களுஞ்செய்கிறோமென்பார்கள். ஒரு
ஆடுமுன்னோடினால் மற்ற ஆடுகளுங்கூடவோடும்.
அது வொருவாய்க்காலைத் தட்டித்தடுமாறித் தாண்டி
னால்மற்றஆடுகளும்ப்படியே தாண்டிப்போம். இத்
தேசத்தாருடைய நடக்கையிதுவே. இதற்கொத்ததா
ய்முன்னடந்தவர்த்தமானத்தைக்கேளுங்கள்.

கிருஷ்ணராயன் சிந்திராச்சியம் ஆளுகிறபோது அவன்கிட்ட அப்பாச்சியென்கிறமந்திரியொருவனிருந்தான். அவனும் நந்தபுத்தியோசனையுமிகுந்தசாமர்த்தியமுமுள்ளவனானபடியினாற்கிருஷ்ணராயன் வன்மேல் மெத்தவும்பக்ஷம்வைத்து எந்த ஆலோசனைக்கும் அப்பாச்சியுடையவார்த்தையைக்கேட்டு நடப்பான். இப்படியிருக்கையிலொருநாளிராயன் அப்பாச்சியைப்பார்த்துச் சனமருள் சாஸ்திரமருள்என்கிறவார்த்தைக்கு அர்த்தமென்னவென்றுகேட்டான். அதற்கு அப்பாச்சி யோசனைபண்ணிச்சொல்லுகிறேனென்று கொலுதீர்ந்தபிறகு வீட்டுக்குவந்து இராயன்கேட்டதின் அர்த்தம்வெளியாகும்பொருட்டு ஓருபாயம்பண்ணினான். அதேதெனில் தன்கிட்டவிருக்கிற சம்பளக்கார இடையருக்குள்ளே மந்தபுத்தியுமாய்ச் சரீரமுழுதும் உரோமக்காடுமாயிருக்கிற குறும்பனொருவனை யழைப்பித்துத் தான்நடத்தப்போகிறகாரியத்துக்குப்பொருளாசையினாலேயும் பயத்தினாலேயு மவனைச்சம்மதப்படுத்தி அவனுடையதலைமயி ரெல்லாஞ் சடைசடையாகப்பண்ணிச் சரீரமாதியந்தஞ் சாம்பலைப்பூசி மான்றோலைக்கையிலேகொடுத்துச் சந்நியாசிவேஷமாக்கினான். பின்னுமவனைநோக்கி, அடா, குறும்பா, நீ விடியுமுன்னெழுந்திருந்து ஒருவருமறியாமலிந்தவேஷத்துடனே போய்ப்பட்டணத்துக்குவடக்கேயிருக்கிறமலைக்கெபியிலே இந்த மான்றோலைவிரித்துப்போட்டு அதிலே யுட்கார்ந்துகொண்டு யோகஞ்சாதிக்கிறப்போலேயிரு, ஆர்வந்து பேசினாலும்பேசாதே, என்னவுபத்திரவமுமகிமையுமுனக்குச்செய்யப்பட்டாலும் பரிச்சேதம்கை

யாமலிரு, அல்லவென்றுபேசினுயானு ன்னைவெட்டியெறிந்துபோடுவேன், நான்சொன்னதுபோலேசரியாய்ச்செய்வாயோவெனி லுனக்கநேகவெகுமானம் பண்ணுவேனென்று வெகுபத்திரமாய்ச்சொல்லியனுப்ப, இடையன்போய்அந்தப்படியே செய்துகொண்டான். பொழுதுவிடிந்துசாமத்துக்குப் பிறகு அப்பாச்சி இராயன்கிட்டப்போயித்தினச்செய்தியெல்லாஞ்சொன்னபின்இராயனைநோக்கித்தேவரீர்செய்தபுண்ணியத்தினுலே யின்றுபெரியதோர் ஆச்சரியமுண்டாயிற்று. வடக்குமலையிலொருதிவ்வியபுருஷரொழுந்தருளியிருக்கிருர். அவர்தேவலோகத்திலிருந்துவந்திருக்கிறவரோபூலோகத்தில்வசிக்கிறவரோதெரியாது. உலகசிந்தனையவரிடத்திலேபரிச்சேதமுமில்லை, மனுஷரோடேவாய்திறந்துபேசுகிறதுமில்லை, இடைவிடாமல்யோகஞ்சாதித்துக்கொண்டுகெபியிலேயிருக்கிருராம். இப்படிக்கொத்த இரிஷீசுரருடைய தரிசனங்கிடைக்கிறதுமகாபிரயாசம். பூர்வஇராசாக்களுஞ் சக்கரவர்த்திகளும் இப்படிப்பட்டமகாத்துமாக்களுடைய ஆசீர்வாதத்தைப்பெற்றதினுலே அவர்களுடைய இராச்சியமுஞ்செழித்து அவர்களுமீடேறி மோக்ஷபதவியையடைந்தார்கள். நாமுமிந்தஇரிஷீசுரருடையபாதஞ்சேவித்தோமேயானால் யுராரோக்கியமுஞ்சகலபாக்கியமும்வருமென்றப்பாச்சிசொன்னுன். இதைஇராயன்கேட்டுச்சந்தோஷிப்பட்டுடனேபறைமுறையறைவித்து நிசாணுவங்களையாயத்தப்படுத்திச்சகலசம்பிரமத்துடனேபுறப்பட்டான். இராயனெப்போது புறப்பட்டானே கொல்லெனறிந்தச்செய்தியெங்கும்பரம்ப, பட்டணத்திலும்பட்டிக்

காடுகளிலுமுள்ள ஆண்பெண்குஞ்சுகுழந்தைகள் சமஸ்தமானபேரு மந்தமலையை நோக்கிப்புறப்பட்டார்கள். இராயன்கெபியின்கிட்டச்சேர்ந்திறங்கிக்கெபிக்குள்ளேபார்த்தான். அப்போதுகுறும்பன் பெரியமரத்துண்டுபோலேகதலமெதலாமல் தலைகுனிந்துமூக்கைப்பிடித்துக்கொண்டு தரையைப்பார்த்தவண்ணமாய் யோகஞ்சாதிக்கிறதைக்கண் டிராயன்பயபத்தியோடேமெள்ளமெள்ளக் கிட்டிப்போய் மூன்றுவிசை சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணிக்கைகட்டிவாய்புதைத்துக்கொண்டு சற்றுதூரத்தில்நின்று திவ்வியமுனிவரே நான்சீவித்தசகலநாட்களிலேயு மின்றைக்குநல்லநாளாகவே உம்முடையபாதார விந்தத்தைச்சேவித்துப் பரிசுத்தனானேன். தேவரீரடியேனுக்குத்தயைபண்ணிக்காப்பாற்றியிரட்சிக்கிறதே யும்முடையபாரமென்று இராயன்சொல்ல, குறும்பன் வாய்பேசாமலுங்கண்ணெடுத்துப்பார்க்காமலுமிருந்தான். சனங்களெல்லாருமதிசயப்பட்டு இத்தனைபெரியஇராயன்சொல்லுகிறவார்த்தையைச் சட்டைபண்ணாதிருக்கிறபோதேயிவர்மகாபெரியவர், இவருடையசரீரமாத்திரம் பூலோகத்திலிருக்கிறதல்லாமல் ஆத்துமம்பரலோகசஞ்சாரமாயிருக்குமென்று நிச்சயித்துக்கொண்டார்கள். அப்பாச்சியோவெனிவித்தமகாத்துமாவினுடையதிவ்வியசரீரத்தின்டையாளமேதாகிலு நம்மிடத்தி விருந்தா லுத்தமமென்று மகாபயபத்தியுடனேகுறும்பன்கிட்டப்போய்ச்சாஷ்டாங்கமாகநமஸ்காரம்பண்ணிச் சுவாமீ யும்முடையபிரசாதங்கட்டளையிடுமென்று அவனுடைய புறங்கால் மயிரிலொருமயிர்பிடுங்கிப் பொன்தாயித்திலேவைத்துக்

கட்டிக்கொண்டான். அதினால் இரிஷீசுரன்சற்றுமசையாமற் சும்மாவிருந்ததைக்கண்டுஇராயன்தானுந்துணிந்து மிகுந்தவணக்கத்துடனே அவன்பாதத்தையண்டி ஒருஉரோமத்தைப்பிடுங்கி முத்தமிட்டு அதைமகாபிரசாதமாகவிலையேறப்பெற்ற தாயித்திலேவைத்துக்கொண்டான். இராயன்பாவனையாகமந்திரிகள் சேனாபதிகள் சேர்வைக்காரர்முதலானவர்கள் தங்கள்தங்கள்வரிசையாகவந்து மிகுந்தவணக்கத்துடனே ஒவ்வொருவரொவ்வொரு உரோமத்தைப்பிடுங்கினார்கள். அவ்வண்ணமே இராசபரிவாரமாகவந்தசகலஇராணுவத்தாரும் எண்ணிக்கையில்லாதசனங்களும் போட்டியாக ஆளுக்கோர்மயிரைப்பிடுங்கிக்கொண்டமையாற் சற்றுநேரத்திற்கள்ளமுனிவர்சரீரமாதியந்தஞ்சவரஞ்செய்யப்பட்டதுபோலாயிற்று. எசமான்பயத்தாற் குறும்பன் இந்தவுபத்திரமெல்லாம் பொறுத்துக்கொண்டு முறைப்பாடாமலும் அசையாமலுங்கண்ணிமிராமலுமிருந்தான். இதனாற்சகலரும்திகமாய்மயங்கி அவனை மேன்மேலுமுக்கியமா யெண்ணித்துதித்தார்கள். இராயன்தன்னரமனைக்குத்திரும்பினபிறகு தன்தேவிமுதலிய இராசஸ்திரீகளுக்கு இந்தப்பரமஇரிஷீசுரனுடைய சேதியெல்லாஞ்சொல்லிப்பிடுங்கிக்கொண்டஅவனுரோமத்தைக்காட்ட அவர்களெல்லாரும் அதைவணக்கத்துடனேவாங்கிமுத்தமிட்டுக்கண்ணோடொட்டி அந்த அதிசயமானமுனிவனைத்தாங்களுந்தரிசித்துநமஸ்கரிக்கவேணுமென்றுகேட்டார்கள். ஆனால் தங்களுக்குரிய மேனாயொழுக்கத்தைப்பற்றித்தாங்கள்வெளியிற்போகக்கூடாமையால் அவனை அரமனைக்குக்கொண்டுவரக் கட்டளை

விடும்பொருட்டு இராயனை மிகவுமன்றாடினார்க
ள். அவர்கள் மன்றாட்டைத் தள்ளக்கூடாமையினா
லும் இப்படிக்கொத்தமகாத்துமாவானவர் அரம
னையிற்பாதம்வைத்தால் மெத்தவும்பாக்கியமென்று
சிலர்சொன்னதைப்பற்றியும் இராயன்தன்சேனைக
ளெல்லாவற்றோடே மந்திரிபிரதானிமுதலிய பெரு
முத்தியோகஸ்தரையனுப்பி இரிஷீசுரனைமகா ஆட
ம்பரவணக்கத்துடனே சிறப்பானபல்லக்கிலேகொ
ண்டுவரக்கட்டளையிட்டான். அப்படியவர்கள்போ
ய் இரிஷியினுரோமங்களை இன்னம்பிடுங்கிக்கொ
ண்டிருக்கிறதிரளானசனத்தை விலக்கித் தாங்களனு
ப்பப்பட்ட முகாந்தரத்தைத்தாழ்ச்சியுடனேயவன்
பாதத்திலேசொல்லிப்பிரதானமானநாலுபேர்பூச்
சியமாயவனையெடுத்துப்பல்லக்கிலேவைத்தார்கள்.
அவனோவெனில் முன்னிருந்தபிரகாரமாய்மூக்கை
ப்பிடித்து ஒன்றும்பாராமல்யோகஞ்சாதித்தவனாக
விருந்தான். அப்படிமந்திரிகளும்படைமுதலிய ப
ரிவாரங்களும்புடைசூழ, திரளானசனங்கள் முன்
னும்பின்னுங்கொக்கரித்துப்புகழ்ச்சிகளைக்கூற, ப
ட்டணத்துத்தெருவீதிகள்வழியாக மிகுந்த ஆடம்ப
ரத்தோடெழுந்தேற்றமாய்க் கொண்டுபோகப்ப
ட்டான். அதற்குள்ளாக, பட்டினியினாலுந்தன்சரீர
உரோமங்களெல்லாம்பிடுங்கப்பட்டநோயினாலுமி
கவுங்கிலேசமானகுறும்பன் இத்தனைமகிமையினா
லேசலித்துத்தன்மனதில்யோசிப்பதாவது: எனக்கு
த்தகாத்துமித்தனைகஸ்திக்கேதுவாகிய இந்தவேஷ
த்தைநான்தரிப்பானேன், இந்தமதியற்றசனங்கொ
க்கரிக்கிறவாழ்த்தொலியைக்கேட்கிறதைவிட என்ம
ந்தையிலடவியிற் புலிகளின் கர்ச்சிப்பைக்கேட்பதே

ஆயிரம்விசைதாவிளை,என்றுடுகளின்ண்டையில்இந்
நேரத்திலேயிரண்டுவேளைசாப்பட்டிருப்பேன்.இ
ந்தவேஷத்தோடேயோவெனி விரண்டுநாளும்பட
டினியாய்க்கிடக்கிறதுமன்றி இந்தப்பைத்தியமெல்
லாம் எப்போது எப்படி முடியுமோவறியேனென்
றுசஞ்சலமாய்யோசிப்பான். அவனிதெல்லாந்தன்
புத்தியிற்கருதுகிறபோது அரமனையிலெழுந்தேற்ற
ஞ்சேர்ந்தது. குறும்பன் அலங்காரமான வோர்
சாலையில் மகாபூச்சியத்துடனிறக்கப்பட்டான். சற்
றுநேரத்திற்குப்பின் இராக்கினியு மற்றஇராசஸ்தி
ரீகளுமுறைமுறையாய்வந்து அவன்பாதத்தை நம
ஸ்காரம்பண்ணினார்கள். அவனைச் சிலநேரமாச்ச
ரியத்துடனேநோக்கினபிறகு தாங்களும்பிரசாதமா
க அவனுரோமங்களி லொன்றைக் கொண்டிருக்க
வேணுமென்று எங்குந்தேடி அவனுடையபரும்
படியானதோல்திரைகளற் சனங்கள்கைக்குத்தப்பி
ப்போனசிலதுகளைப்பிடுங்கிக்கொண்டார்கள். அத
ன்பின் இரிஷீசுரனுக்குவேண்டிய இளைப்பாற்றிகி
டைக்கும்படிக்கு இராக்காலத்தில் அவனைத்தனியே
விட்டுச் சகலரும் போகவேணுமென்று இராயன்
கட்டளையிட்டான். அப்படி யெல்லோரும்போன
பிறகு இரவினந்தகாரத்தில் அப்பாச்சி கள்ளஇரி
ஷிகட்ட இரகசியமாய்வந்து குறும்பா நான்சொ
ன்னபடி சரியாய்ச்செய்தாயே, நியமித்த சம்பாவ
னையுனக்குத்தருவேன். இப்போதுசீக்கிரதழுவி யி
ந்தவேஷம்விட்டுச் சாப்பட்டுநித்திரைசெய்துநா
ளைக்கு எப்போதும்போல என்மந்தையைமேய்
க்கப்போவென் றனுப்பிவிட்டான். பொழுதுவிடி
ந்தமாத்திரத்தில் இராயன்தன்சனுக்களோடே இ

ரிஷீசுரனை நமஸ்கரிக்கவந்தபோது அவனைக்காணு த்தினால் அவன் மனுரூபமாய்த்தோன்றின ஒருதே வனென்றும் இராக்காலத்தில்மறைந்து பரலோக த்திற்சேர்ந்தானென்றுஞ் சகலரு மெண்ணிக்கொ ண்டார்கள். சிலநாள்பொறுத்து இராயன் சனம ருள் சாஸ்திரமருளென்கிறமொழிக்கு அர்த்தங்கட் பட்டதோவென்றுகேட்க, தேவரீர்கோபித்துக்கொ ள்ளவேண்டாமென்று அப்பாச்சி மனுக்கேட்டு மேற்சொல்லியமொழியி னர்த்தந்திஷ்டாந்தமாய் விளங்கும்பொருட்டுத் தான் நடத்தினகாரியமெல் லாம்வெளியாக்கினான். அதிலேதானொருவன் சொ ன்னதைநம்பி இராயனுமிராயனைப்பார்த்துச் சன முஞ் சனத்தோடே சாஸ்திரிகளும் ஒரு யோசனை யுமின்றி ஒன்றுக்குமுதவாத மடையனைகுறும்ப னை இரிஷீசுரனென்று ந்தெய்வமென்றுநினைத்து ந மஸ்கரித்ததையு மிப்படிசனமருள்ச் சாஸ்திரமும ருளுகிறதையுங்காட்டினான். இராயனுந்தெளிந்தொ த்துக்கொண்டான்.

சனமருள்சாஸ்திரமருளென்கிறவாக்கிய மித்தே சத்தேவர்களி னாராதனைக்குச்சரியாய்ப் பொருந் துமென்று சற்றுயோசனையினாலேவிளங்கும். அ தெப்படியெனிவித்தேசத்தார் பிரதானமாய்ப்பிர மாவிஷ்ணு சிவ னிம்மூவரையு முக்கியப்படுத்திச் சிஷ்டி ஸ்திதிசங்காரமென்கிற முத்தொழிலுக்குக் கர்த்தாக்களாகவெண்ணித் தெய்வமாக வணங்குகி றார்கள். ஆனாலிந்தத் திரிமூர்த்திகளுக்குத் தெய்வ த்துவமுண்டோ இல்லையோவென்று விசாரிக்கிறார் களோ! பரிச்சேதமில்லை. ஆயினுமோசம்போகாத படிக்கு நன்றாய்ப்பரிசோதித்துத் தெய்வமாகவிள ங்குவதைமாத்திர மாராதிககலாமொழியவேறல்ல.

தெய்வத்தை யறிந்து கொள்ளும்வகை.

யாதோர்வஸ்துவை யின்னதென்று நிச்சயமாயறியவேணுமானால்தின் சுபாவதன்மை குணவிலக்ஷணங்களைக்கண்டு இப்படிக்கொத்தவஸ்துவென்று நிச்சயித்துக்கொள்ளுவார்கள். ஒருகொசுவை யானையென்றும், ஒருகாக்கையைக் குதிரையென்றுஞ் சொன்னால்தை ஒருவருமொத்துக்கொள்ள மாட்டார்களல்லவோ? ஏனெனிற்கொசுகாக்கையுடையஇலக்ஷணங்களுங் குணங்களும்வேறே, ஆனைகுதிரையுடையஇலக்ஷணங்களுங்குணங்களும்வேறே, அப்படி பஞ்சபூதமிருகபக்ஷி சர்ப்ப மனிதன்முதலியபடைப்புண்டவஸ்துக்களைத் தெய்வமென்றுசொன்னால் எற்றுக்கொள்ளலாகாது. ஏனெனில்துகளின் சுபாவகுணவிலக்ஷணங்களும்வேறே,தெய்வத்தின் சுபாவகுணவிலக்ஷணங்களும்வேறே.கொசுவானது ஆனையாகாத்துபோலே அற்பவஸ்துவாகியமனிதன் பரிச்சேதந்தேவனாகமாட்டான்.

இத்தேசத்துச் சாஸ்திரங்களைக்கொண்டு தெய்வ இலக்ஷணங்களைச் சரியாயறியக்கூடாது. ஏனெனில்லச்சாஸ்திரங்களில்தெய்வத்தினுடையபெருஞ்சில்லறைவாக்கியங்களுமாத்திரந் தக்கபடிசொல்லியிருக்கிறதல்லாதேதெய்வீகத்தினிலக்ஷணங்களுஞ்சுபாவதன்மையு நடத்தைசரித்திரங்களு மத்திருநாமத்துக்கும் புத்திஞானத்துக்கும் விரோதமாய்ச் சொல்லியிருக்கிறதாமே.அதுஎப்படிப்போலிருக்கின்றதென்றால் ஒருதுளியமிர்தத்தை விஷநிறைந்தகுடத்திலேகலந்தாற்போலேயாம். ஆதலால் மெய்யா

னதேவ இலக்ஷணங்களையறியும்பொருட்டுமெய்ஞ் ஞானத்தையுஞ் சர்வேசுரன்தாமே திருவுளம்பற் றின சத்தியவேதவாக்கியங்களையுங் கேட்டாராய வேண்டும்.

தெய்வ இலட்சணங்கள்.

இப்போதுசர்வேசுரனுடைய பிரதான இலக்ஷ ணங்களைச் சுருக்கத்திலே சொல்லிக்காட்டுவோம். அதுகள்டங்கிய சத்தியசுலோகமாவது: சுயம்பனு தியசரீரிசமஸ்தசுபசுரூபிசர்வவியாபி சர்வேஷாநி தானமெனபதாம். இதற்கர்த்தமேதெனில்.

ക-வது. சுயம்பென்பதுதாமாயிருக்கிறவனென் றர்த்தமாகும். அதேதெனிற்சர்வேசுரன்தாய்தகப்ப னும்உற்பவசன்மமும்பிறகாரணமுமினறித் தம்மி லேதாமாயிருக்கலாமேயொழிய மற்றப்படியல்ல.

உ-வது. அநாதியென்பது தேவனுக்காதியாரம் பமில்லையென் றர்த்தமாம். அவர் காலநடுவாந்தரத் திலேவந்தவரல்ல. இறந்தகாலமெதிர்கால நிகழ்கா ல மிம்மூன்று ம்வருக் கேகமாயிருக்கின்றது. இப் போதுமெப்போது மட்டில்லாதகாலமுஞ் சுயஞ் சீவியராய் ஆதியந்தமில்லாதவராயிருக்கறுர். அவர் ந டுவாந்தரத்திலேவந்தவராகு லவருககுப்பிறகாரண மும் பிறப்புமிறப்புமிவைமுதலிய குறைபாடுகளு முண்டாயிருக்குமேயல்லாமல் தெய்வமென்கிறபே ரவருக்குச்செல்லமாட்டாது.

ங-வது. அசரீரியென்பது சர்வேசுரனுக்குச்ச ரீரமில்லையென்றும். சரீரத்தன்மையானவஸ்து பஞ் சபூதங்கள்சேர்ந்த பொருத்ததினு லுண்டானது மா யிவையவங்களைக்கொண்டிருக்கிறதுமாய்ப் பி

றப்புபிறப்பும் மட்டும்பிரமாணமு முள்ளதுமாயி ருக்கும். ஆனு லப்படிக்கொத்தகுறைபாடுகள் மெ ய்யானதெய்வத்துக் கொத்திராததினுற் சர்வேசுர ன்சரீரமில்லாமலிருக்கிறுரொன்பதேநிச்சயம்.

ச-வது.சமஸ்தசுபசுரூபியென்பதுஅளவில்லாத சகலநன்மைச்சுரூபியாயிருக்கிறவ ரொன்பதாமே. அதேதெனிற் சர்வேசுரன் மட்டில்லாதஞானமட் டில்லாதவல்லமை மட்டில்லாதநீதி மட்டில்லாத்த யை மட்டில்லாதமகிமை மட்டில்லாதபரிசுத்ததன மட்டில்லாதவாநந்தபாக்கிய மிதுமுதலான அளவி ல்லாதசகலநன்மைச்சுரூபியாயிருக்கிறுர்.

ரு - வது. சர்வவியாபியென்பது எங்கும் வியா பகமாயிருக்கிறவரொன் றர்த்தங்கொள்ளும். சர்வே சுரனிங்கேயிருக்கிறு ரங்கேயில்லை, அங்கேயிருக்கி று ரிங்கேயில்லையென்றுசொல்லாம லெங்கும் வி யாபித்திருக்கிறுரொன்று சொல்லவேண்டும். ஆ யினு முருபமுள்ள வஸ்துக்களைப்போலே யந்த ந்தஸ்தலத்திலே யடங்கியிருக்கிறுரொன்று சொல்ல க்கூடாது. அவர் தமது மட்டில்லாதசுபாவத்தினு லெங்கு நிறைந்து தம்முடையமட்டற்றஞானத்தி னுலேயும்வல்லபத்தினுலேயும்எல்லாத்தையும்பிந்து நடத்தியிரட்சித்துக்காப்பாற்றிக்கொண்டுவருகிறுர்

சூ-வது. சர்வேஷிநிதானமென்பது எல்லாத்துக் கு மாதிகாரணமென்றும். பரலோகபூலோகமொ ன்றுமில்லாதிருக்கையிற் சர்வேசுரன் தமதுமட்டி ல்லாவல்லபத்தினுற் சகலத்தையுமுண்டாக்கி எல்லா த்துக்கு மாதிமூலமுமாதிகாரணமுமாயிருக்கிறுர்.

இப்படிக்கொத்த இலக்ஷணங்களுள்ள சர்வேசு ரனைவணங்கி நம்பியிருக்கத்தக்கதொழியமற்றதெல்

லாந்தெய்வமுமல்ல, ஆராதனைக்குப்பாத்திரமுமல்ல. பொய்த்ம்தவர்களைக்குறித்தெத்தனைதபசுதானதர்மஞ்செய்தாலும்வியர்த்தமாய்ப்போம். அதனால் மோக்ஷபேறுகிடையாமல் நரகமேசித்திக்கும்.

இவ்வாறிலக்ஷணங்களுந் தெய்வத்துக் கிருக்கவேணுமென் றெப்படிக்கொத்தவர்களும் ஒத்துக்கொள்ளுவார்களொழிய இதையங்கிகரியாத புத்திமானொருவனுமில்லை. காரிருட்டுள்ள வீட்டிலொரு பெரிய தீவட்டியைக்கொளுத்திக்கொண்டு நுழைந்தால்திலுள்ளவஸ்துக்க ளின்னதென்றுதெளிவாய்க் கண்டுபிடிக்கலாமே. அப்படியே யிந்தஆறுஅடையாளங்களின் வெளிச்சத்தினாலே நிசமானதெய்வமாமொன்றும்பொய்த்தெய்வமானொன்றும்பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கலாம். இத்தெய்வஇலக்ஷணங்கள்மும்மூர்த்திகளுக்குணடோவில்லையோவென்றுபரிசோதித்தறிவதற்கு அவர்கள்சரித்திரங்களிலுங்குணகுண சுபாவங்களிலுஞ்சிலவிசேஷங்களையெடுத்துக்காட்டுவோம்அதினால்அவர்களைப்பழிக்கிறோமென்று உரோசமுங்கோபமுமனதிலேவருவித்துக்கொள்ள நியாயமில்லை. ஏனென்றால் மும்மூர்த்திகளைக்குறித்து வேதங்கள் புராணங்கள் முதலியசாஸ்திரப்புஸ்தகங்களிலுள்ள விருத்தாந்தங்களையெடுத்துக்காட்டுகிறோமேயல்லாமல் நவமாயுண்டுபண்ணினதொன்றுஞ் சொல்லப்போகிறதில்லை. மெய்யானதெய்வ மின்னதென் றெல்லாருக்கும்பகாரமாய் வெளிப்படுத்தநமக்குத் தாற்பரியமொழிய ஒருவர்மனது நோகப்பண்ணுதற்குப் பரிச்சேதம் அபிப்பிராயமில்லை.

மும்மூர்த்திகள் வரலாறு.

மும்மூர்த்திகள் தெய்வமோ அல்லவோவென்று நிச்சயிக்கும்பொருட்டு அவர்களுடைய சரித்திரங்களைப் பரிசோதித்தாராயவேண்டும். அப்படிபரிசோதித்துப்பார்த்தால் அவர்களுக்குப்பிறப்புந்துவக்கமுமுண்டென்றுதெரியவரும். மீளவுமவர்கள்பிறந்தவிதம் விபரீதமான நானாவிதமாயித்தேசத்தாருடைய புராணங்கள்முதலான சாஸ்திரப்புஸ்தகங்களிற் சொல்லியிருக்கின்றது. அதெப்படியெனில் ஒருஸ்திரீயுண்டென்றுமவளுக்குப்பேர் பராசத்தியென்றும், ஆதிசத்தியென்றுஞ்சொல்லியிருக்கின்றது. அந்தச்சத்தியின்விசேஷதன்மை மகிமையென்ன, வுற்பவமென்ன, ஸ்திரீயுருபமாகவிருக்கிறதற்குக் காரணமேதென்றுகேட்டா லதற்கு ஒருபிரதியுத்தரமுமில்லை. இந்த ஸ்திரீயானவளுக்குப் பிரமாவிஷ்ணு உருத்திரன்பிறந்தார்களென்றும், பின்னுமவள்ந்தப்பிள்ளைகள்மேலே மோகித்துஅவர்களை விவாகம்பண்ணிக்கொண்டநுபோகஞ்செய்தாளென்றுஞ் சிலபுராணங்களிற் சொல்லியிருக்கின்றதாம். மேலும்ஆதிசத்திமயம், பீசம். பீசசத்திமயம, சிவம். சிவசத்திமயம், விஷ்ணு. சருவம் விஷ்ணுமயஞ் செகத்து என்னுஞ்சுலோகத்திற் சொல்லியிருக்கிறபடி ஆதிசத்திக்கு ஒருவித்துபிறந்ததென்றும் அந்தவித்தினால சிவன்பிறந்தானென்றுஞ் சிவனாலே விஷ்ணுபிறந்தானென்றும் உலகமெல்லாம்விஷ்ணுவினாலுண்டானதென்றும்வேறேபுஸ்தகங்களிற் சொல்லியிருக்கின்றது.

பாகவத மொன்பதாம்படலத்திலேயோவெனில் விஷ்ணுவானுடையதொப்புளிலேதாமரைப்பூ பிறந்ததென்றும் அந்தத்தாமரைப்பூவிலே நாலுமுகப்பிரமா பிறந்தானென்றும் எழுதியிருக்கின்றது. இப்படி முதல்முறையிற் பிரமா விஷ்ணு உருத்திரனகூடப்பிறந்தவர்களாகவு மிரண்டாமூனறுமுறையில் மகனதகப்பனபாட்டனாகவும் வேண்டும். மீளவுந் தத்துவத்திற் சொல்லப்பட்டிருக்கிறதாவது: பராபரமாகிய பரமேசுரன தராதலம்படைக்கத்தாணினைத்தருளிப் பராபரத்திற்பரந்தோன்றி, பரத்திற் சிவனதோனறி,சிவனிற் சத்திதோனறி,சத்தியில் நாதந்தோனறி, நாதத்திலவிந்துதோனறி, விந்துவிற் சதாசிவந்தோனறி, சதாசிவத்தில் மகேசுவரனதோனறி,மகேசுவரனிலுருத்திரனதோனறி, உருத்திரனில் விஷ்ணுதோனறி, விஷ்ணுவிற் பிரமாதோனறி, பிரமாவில்ஆகாசந்தோனறி, ஆகாசத்தில் வாயுதோனறி, வாயுவில் அக்கினிதோனறி, அக்கினியில்அப்புத்தோனறி,அப்புவில் பிரிதிவுதோனறி, பிரிதிவில் அனனந்தோனறி, அனனத்தில்நாய்மிருகம்பட்சி மச்சந் தாபரசங்கம் அனைத்துந் தோன்றிற்றென்பதாமே. இவ்விதமற்றதுகளுக்கு எவ்வளவோ தூரவித்தியாசமா யிருக்கின்றது. இப்படிப்பட்ட விபரீதமானகதைகளைப் பார்க்கும்போது புத்திமானுக்கு என்னதோன்றுமென்றால் ந்தப்புராணங்களினுண்மையுஞ்சரி,மும்மூர்த்திகளுடைய தெய்வத்துவமுஞ்சரி. அதைப்பற்றிப்பிரமா ஆருடையமகன், விஷ்ணு ஆருடையமகன், சிவன ஆருடையமகன? இவர்கள்தேவர்களல்லவென று வேமணனிகழந்துபாடினன. பினனையொருபி

ரபந்தத்திலேமும்மூர்த்திகள்ஒருபலஸ்திரீக்குக கல்லாய்ப்பிறந்ததாகச்சொல்லியிருக்கின்றது. எப்படியென்றாற்கண்டிகையெனகிறவேசிஅந்தந்தத்தினந் தனனண்டைக்குவரும்புருஷனெவனோ அவனுக்கு அன்றையதினம் புருஷனுக்குப் பெண்சாதியிருக்கிற பதிவிரதைமேனாயா யிருப்பாளென்றுமவளைச்சோதிக்கிறதுக்குப் பிரமாவிஷ்ணு உருத்திரன வெவ்வேறேவேஷங்களைத்தரித்துக்கொண்டு அவளிடத்தில்வந்து அநேகஞ்சேஷ்டைகளைச் செய்தார்களென்றுங்கடைசியாய்ப்படுக்கையிலேவிஷ்ணுவயிறுபேதித்து அவளுடையபிடவைசீலையெல்லா மசுத்தமாக்கவே அதெல்லா மனம்பொறுத்தாளென்று மதினாலேயவள்கண்டகிநதியாய்ப்போக அதிலேமும்மூர்த்திகள் மூன்றுவகைக்கல்லுக்களாய்ப் பிறந்தார்களென்றும், பிரமாவிரணியகருப்பமும், விஷ்ணு சாலக்கிராமமும், உருத்திரன சிவனுமமுமாமென்றுஞ் சொல்லியிருக்கின்றது. மூன்றுவகைக்கல்லுக்களுக்கு இந்தநாமங்களையிட்டு அதுகளைப்பூச்சியமாய்வைத்துக்கொள்ளுகிறார்கள். அநேகசனங்கள் அதுகளைச்சம்பாதித்து அதுகளுக்குப்பூசைபண்ணிக்கொண்டு வருகிறார்கள்.

விஞ்ஞானேசுரமெனகிற பிரபந்தத்திலே அந்தக்கண்டகிநதியைப்பற்றிச் சொல்லியிருக்கிற வெட்கக்கேடுள்ள சுலோகமாவது: வேசியாதரிசனம், புண்ணியம். சுவாசனம், பாவநாசனம். சும்பனம் (முத்தம்) சர்வதீர்த்ததானம். மைதுனம், மோக்ஷசாதனமென்றும். இப்படிக்கொத்தவவலட்சண அசுசியான சுலோகத்தைப் பாடம்பண்ணிக்கொண்டு சிலபிராமணர்வெட்கமின்றிச் செபித்துக்கொண்டு வருகிறார்கள்.

மேற்சொல்லிய உதாரணங்களினால்திரிமூர்த்திகளுக்குப் பிறப்புண்டென்று நிச்சயமல்லவோ? அப்படியிருக்கக்கொள்ள அவர்களைச் சுயம்புவென்று சொல்லக்கூடுமோ? அவர்களுக்கெப்போது சென்னமுண்டாச்சுதோ அப்போதுதானே துவக்கமுமுண்டாயிற்று. ஆகையால் அநாதியெனகிற இலக்ஷணமு மவர்களுக்கில்லை. பின்னும் மும்மூர்த்திகளுக்கு முடிவுமுண்டென்று இத்தேசத்தார் சாஸ்திரப்புஸ்தகங்களிலே விளங்குகின்றது. அதெப்படியென்றால் நூறு சதுர்யுகம் பிரமாவுக்கு ஒருதினமாகிய கற்பமாமென்றும், அப்படிப்பட்ட தினக்கற்பங்கள் - ௩௬௰ - பிரமாவுக்குஒருவருஷமாமென்றும், இப்படிப்பட்டவருஷங்களில் நூறு பிரமாவுக்கு ஆயுளாமென்றும், இருநூறுவிஷ்ணுவுக்கு ஆயுளென்றும், முந்நூறு ஈசுரனுக்கு ஆயுளென்றுங் கடைசியிலே பிரம்பட்டத்துக்கு மார்கட அநுமந்தனவருவானென்றுஞ் சொல்லியிருக்கின்றது. இப்படியஞ்ஞானிகள் மும்மூர்த்திகளுக்குஆயுசுகாலந்தங்களிஷ்டத்தினபடி பெருந்தொகையாகப்பெருக்கியிருந்தாலும் அதுதீர்ந்தபிற்பாடு அவர்களுக்குமுடிவுண்டாகுகின்றதென றெத்துக்கொள்ளுவார்கள். மீளவும் அவர்கள் ஆயுள் நீட்சி மிகவும் வித்தியாசமாகையி லவர்களிலே ஒருவனுயிர்வாழ்ந்திருக்கமற்றவர்கள் மரித்திருப்பதால் மும்மூர்த்திசிதைந்திருக்குமெனபதற்குச் சந்தேகமுமில்லை. அசரீரியெனகிறஇலக்ஷணமாவது அவர்களுக்குண்டோ இல்லையோவென்று விசாரித்துப்பார்த்தால் அவர்கள்சரீரமுள்ளவர்களென்று அநேக திஷ்டாந்தங்களினாலேவிளங்கும். அதெப்படியெனில் தேகமும்பசி

தாகமும் அன்னபானமுஞ் சரீரத்துக்குச்சம்பந்த
மான மற்றப்பலவிஷயங்களும் அவர்கள்சரித்திரங்
களிலே யெங்கும் விவரித்திருக்கின்றது. சமுசா
ரிகளாய்ப் பெண்சாதிபிள்ளைகளைக் கொண்டிருந்
தார்களென்றும், பலஸ்திரீகளோ டநுபோகஞ்செ
ய்தார்களென்றுஞ் சகலர்க்கும் பிரசித்தமானதல்ல
வோ? மேலுந்தன் தன் பெண்சாதியைநம்பாத்தைப்
பற்றிப்பிரமா தன்னாவினபேரிலும்விஷ்ணு தன்மா
ர்பிலேயுஞ் சிவன்தன்சிரசிலேயுந்தன்தன்தேவியை
வைத்திருந்ததாகஇத்தேசச்சாஸ்திரங்களி லெழுதியி
ருக்கின்றது. இதெல்லாம்ப்படியிருக்க அவர்களைஅ
சரீரிகளென்றெப்படிசொல்லலாம்? அவர்களைச்சக
லநன்மைச்சுரூபிகளென்று மெங்கும்வியாபிகளெ
ன்றுஞ் சர்வத்துக்குமாதிகாரண மென்றும் பரிச்
சேதஞ் சொல்லவுங்கருதவுங் கூடாதென்று இப்
போதுசொல்லப்போகிற வர்த்தமானத்திலேவி
சேஷமாய்த் திஷ்டாந்தமாகும்: தத்தாத்திரையசத
கத்திலே சொல்லியிருக்கிறதாவது: அத்திரிமுனிபெ
ண்சாதி யனுசூயையென்கிறவள் பதிவிரதை சுகி
ர்தத்தில் மகாமேன்மையுள்ளவளென்று மிதிலே எ
ந்தத்தேவர்களிலு மதிகரித்தவளென்றும் முனீசு
ரர்சொல்லக்கேட்டுத் திரிமூர்த்திகள் அவளுடைய
பதிவிரதாத்தனத்தைக் கெடுக்கவேணுமென்றாலோ
சனைபண்ணிப்பெரியவிரிஷிகளைப்போல்வந்துஅவ
ளைப்பிச்சைகேட்டார்கள். அவள்பிச்சைபோடவ
ந்தபோது எங்களுக்கிந்தப்பிச்சைவேண்டாம், நீநி
ருவாணத்தோடெங்களுக்கெதிரேவந்துநின்றாலது
வே யெங்களுக்கு வேண்டியபிச்சையென்றார்கள்.
அந்தவார்த்தையைக்கேட்டு அவள்மிகுதியான நாண

முங் கோபமுமடைந்து தீர்த்தத்தையள்ளி யவர்க
ள்மேலிறைத்து அவர்களைச்சபித்து, மூனறுகுழந்
தைப்பிள்ளையாக்கி, அவர்களுக்குமுலைப்பால்கொடு
த்தாளாம். (†) இப்படி திரிமூர்த்திகள்ந்தஸ்திரீயினு
தீனத்தில்கப்பட்டிருக்கிறதை மற்றத்தேவர்கள்கே
ட்டுப்பயப்பட்டு எல்லாருங்கூடி யனுசூயையிட்
டவந்து, திரிமூர்த்திகளுக்காகமன்றாடி யவர்கள்சி
றையைவிடுவித்தார்களென்று சொல்லியிருக்கின்ற
து. திரிமூர்த்திகளுடைய சரித்திரங்களிலேயிப்படி
க்கொத்த நடத்தைகளையும் அக்கிரமங்களையும் பல
வீனத்தையுங்காண்கிறபோதே அவர்களை அசரீரிக
ளென்றுஞ் சகலநன்மைச் சுரூபிகளென்றுஞ் சர்
வவியாபிகளென்றுஞ் சர்வத்துக்குமாதிகாரணமா
கியகர்த்தரென்றுஞ்சொல்லுவதெப்படி? இவ்வண்
ணமே தேவ இலக்ஷணங்க ளவர்களிடத்திற்பரிச்
சேதமில்லை. ஆதலா லவர்கள் பரிச்சேதந்தேவர்க
ளல்லவென்பதுறுதி.

இந்தமட்டுந் திரிமூர்த்திகளைக்குறித்துச் சொன
னவிஷயங்களினாலே யவர்களெப்படிப்பட்டவர்க
ளென்று மவர்களுக்குந் தெய்வத்துவத்துக்கும் வெ
குதூரவித்தியாசமுண்டென்றும் பிரத்தியக்ஷமா
ய்க் கண்டுபிடிக்கலாமே. ஆகிலு மிவ்விராச்சியத்
தாரிற் சிலருக்கொருசந்தேகமுண்டு. அதேதென
றால் இராசாக்கள் துரைகள் சாஸ்திரிக ளநேகர்அ
ந்தத்தேவர்களை நம்பிவணங்கி அவர்களுக்குமிகுதி
யான ஸ்துதி வெகுமானபூசையாராதனை நடத்துகி
றார்களே. இதெல்லாம்விருதாவோ? இவர்கள்நியாத

(†) அவர்களைப் பசுக்கன்றாக்கினாளென்றுஞ்சொல்லுகிறார்கள்.

புத்தி நாமறிந்தோமோ, திரிமூர்த்திகளிடத்திலே
தெய்வத்துவமகிமைதிராணி புத்தி ஞானந்தயைச
த்திமுதலிய சகலசற்குணவதிசயங்க ளில்லாதிருந்
தால் அந்தவணக்கமெல்லா மவர்களுக்குச்செய்ய
ப்படுமோவென்று மயங்குகிறார்கள். ஆனால் அப்
பாச்சிமந்திரியின சரித்திரத்தினால் துரைகளுமிரா
சாக்களுமுதலாய் யோசியாமலுந் தெரியாமலுந்
துதிநமஸ்காரஞ்செய்கிறதுண்டென்று பிரத்திய
ட்சமாயிற்று. பினனும வயிற்றைவளர்க்கச்சூதுமா
ர்க்கமெல்லாம் பண்ணின கள்ளச்சாஸ்திரிகளுக்கு
ங்கள்ளஞானிகளுக்குங் கணக்குண்டோ? மேலுமி
த்தேசத்துச்சாஸ்திரிகளு ஞானிகளு மெழுதியொ
த்துக்கொண்ட புராணங்கள்முதலியபிரபந்தங்களி
லடங்கியசரித்திரங்களே திரிமூர்த்திகளுடையகுண
குணங்களை வெளியாக்கி யவர்கள்பொய்த்தேவர்க
ளென்று காட்டுகின்றது. அதைப்பற்றி வேமணன்
முதலிய இத்தேசத்துப்புத்திமானகளுஞ் சாஸ்திரிக
ளு மநேகரந்தத்தேவர்களையிகழ்ந்துபாடினார்கள்.
ஆதலால் ஒர்கல்லுக்கு எத்தனையாடம்பரமான ஆ
ராதனையைச்செய்தாலும்து தெய்வமாகாத்துபோ
லே திரிமூர்த்திகளுக்குச் செய்யப்பட்டஆராதனை
யாலவர்கள் தெய்வமாகமாட்டார்கள். ஆனபடியி
னாலே நியாயந்தப்பியவர்களுக்காராதனை செய்கிற
வர்களின மாதிரிகையை யநுசரியாமல் அவர்களு
க்கடுத்தசாஸ்திரப்புஸ்தகங்களினாலுமற்றநேகதிஷ்
டாந்தங்களினாலுந்தெளிகிற மெய்ஞ்ஞானத்தைய
நுசரித்து மெய்யான எக்கடவுளைமாத்திரந்தெய்வ
மென்றாராதிக்கவேண்டும். வேறேசிலர் சொல்லு
கிறதாவது: சர்வத்துக்குமேலாகவுஞ் சகலர்க்குமதி

ஏ

பதியாகவும் பரப்பிரமமுண்டு. ஆகிலுமந்திரிபிரதானிதளவாய்மணியக்காரர்சம்பிரதிமுதலானவுத்தியோகஸ்தரெப்படி யோரிராசாவினகீழேயிருந்து இராச்சியத்திலந்தந்தக்காரியங்களை நடத்துகிறார்களோ அப்படி திரிமூர்த்திகள்பரப்பிரமத்தினகீழே சிஷ்டி ஸ்திதிலயத்துக்குக் காரணகர்த்தாக்களாயிருக்கிறார்களென்று சொல்லுவார்கள். ஆனாலவர்கள்சொல்லுகிறது புத்திஞானத்துக்குச் சரிப்படாது. ஏனெனில் தெய்வபரிபாலனத்துக்குமனுஷபரிபாலனத்துக்கு மநேகவித்தியாசமுண்டு. உலகத்திலே இராசாக்களுக்கு மந்திரி தளவாய் மணியக்காரர் கணக்கர் முதலான வுத்தியோகஸ்தர்வசரந்தான. ஏனென்றால் விராசாக்களுக்குச் சொந்தபலம் போதாதபடியினாலே தங்கள் சேவனைக்காப்பாற்றுதற்கு மிராச்சியத்தைநடத்துதற்கு மிப்படிப்பட்ட வுத்தியோகஸ்தரு மிராணுவங்களும்வேண்டும். இல்லாவிட்டாற் சத்துருக்கள்வந்து அவர்களைச்செயித்து வெட்டியெறிந்து இராச்சியத்தைக்கட்டிக்கொள்ளுவார்கள். மீளவுந் தங்களிராச்சியத்திலேநடக்கிற சகல வர்த்தமானங்களையுங் கணக்குக்காரியங்களையுந்தாங்களாய்ப்பார்த்தறிவதற்காக இராசாக்களுக்கவகாச மில்லாதபடியினாலே அதற்காகவு மவர்களுக்குப் பிறருதவிவேண்டியதாமே. சர்வேசுரனுக்கொவெனி லளவில்லாதவல்லப மிருக்க ஆராவது அவருக்கெதிராளியாய் நிற்கக்கூடுமோ! உலகத்திலுள்ள வஸ்துக்களெல்லா மவருக்கு விரோதமாய்க்கூடினாலு மவனையேதாகிலுஞ் செய்யக்கூடுமோ? அவராலேபடைப்புண்டவஸ்துக்களுக்கு அவனைவெல்லத்திராணியுண்டோ? பரிச்சேதமில்லை. அவரிந்தப்பரலோகபூலோகமெ

ல்லா மொருக்ஷணத்திலே படைத்தார், ஒருக்ஷண த்திலேயழிப்பார். தமதுசித்தத்தால் ஓர்பவருத்த மின்றிச்சகலத்தையுநடத்தலாமே. இறந்தகாலநிகழ் காலமெதிர்காலமென்னு முக்காலவர்த்தமானமெ ல்லாமுமவருக்குவெகவெளிச்சமாயிருக்கின்றது. சக லமனுஷிருடைய அந்தரங்கங்களு மபிப்பிராயங்க ளுமவருக்குப்பிரத்தியக்ஷமாய்த தெளிகிறதொழிய மற்றப்படியல்ல. ஆதலாலுலகபரிபாலனத்துக்கா க அவருக்குப்பிறருதவி யிலவலேசமும் வேண்டி யதல்ல. மேலும், அவருலகபரிபாலனமுதவிய பர மதொழில்களுக்கு யாதாமொருவரை நியமித்தேற் படுத்தச் சித்தமாயிருப்பாரேயாகில்துகளுக்குப்பு ண்ணியவான்களை நியமிப்பாரொழிய, துர்மார்க்க ரையுந் தமக்குத்துரோகிகளானவர்களையு மேற்படு த்தமாட்டார். உலகவிராசாக்கள்முதலாய்த் தங்களி ராச்சியத்தி லுத்தியோகஸ்தரை வைக்கவேணுமா னால் நல்லவர்களைத் தெரிந்துவைப்பார்கள்ல்லாதே தங்களுக்குவருகிற ஆதாயத்தைப்போக்கடிக்கிறவர் களுக்குந் தங்கள்காரியங்களைக் கெடுக்கிறவர்களுக் கு முத்தியோகங் கொடுப்பதில்லையல்லவோ! ஆத லால் திரிமூர்த்திகள் புண்ணியநெறியையநுசரித் தவர்களோ, சர்வேசுரனுக்குகந்தவர்களோ, அல்ல வோவென்றுஇன்னமும்பரிசோதிக்கக்கடவோம். இதைஅவர்களுடையசரித்திரங்களைக்கொண்டுசுரு ககத்திலே வெளிப்படுத்தித் தெளிவிப்போம். இ தனுலவர்கள்தெய்வமுமல்ல, தெய்வத்துக்குகந்தவர் களுமல்லவென்றுமேன்மேலும் விளங்குவதாமே.

பிரமாவின் நடைபடி.

பிரமா பிறந்தவிதத்தை முந்திச்சொனனதினுல்

அவனுடையவுருபத்தையு நடைபடிகளையுமிப்போ
துசுருக்கத்திலே சொல்லிக்காட்டுவோம். ஒரும
னுஷனுக்கு ஒருதலைபோதுமானாலும் பிரமா ஐந்
துதலையோடேபிறந்தானும் அதினாலவனுக்குப்ப
ஞ்சமுகப்பிரமாவெனகிறபேருண்டாயிற்றும். ஒ
ருநாளோவெனிலவனசிவனுடையபெண்சாதியா
கிய பார்வதியினபேரிலே மோகித்ததுரோகத்தை
ப்பொறுக்கமாட்டாமற் சிவன பிரமாவின ஐந்து
தலையிலொன்றைக கிள்ளிப்போட்டானும். சிவனுக
கும் பிரமாவுககும் அஞ்சுதலைகளிருககையிற் பார்
வதி தனபுருஷினகுறிப்பை யறியாமையாற் சிவன்
தலைக கிள்ளிப்போட்டானெனறும் பிரமா தனமக
ளாகிய ஊர்வசியோடே முறைகேடுசெய்ததைப்
பற்றியாவது நானுனனையுண்டாககினேனெனறு
பிரமா சிவனைப்பார்த்து சொனனதைப்பற்றியா
வது சிவன்தலை வெட்டிப்போட்டானெனறுஞ்
சொல்லுகிறார்கள். பிரமா அத்தலையை மறுபடி
பெற்றுககொள்ளஇனனுந்தபசுபண்ணுகிறானும்.
அனறுமுத லவனுக்குச் சதுர்முகப்பிரமாவென
னும் பேர்வழங்கிவருகிறதாம். இச்செய்திகிரிசக
வியாணத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கினற
து. பிரமாதன்மகளாகியசரசுவதியினபேரில்துரா
சையைவைத்து மனுரூபமாய்வளோடே மைது
னம்பண்ணக்கூசித் தானுங்கலையுருபமாகி, அவளை
யும் பெண்மானுருபமாக்கி யநுபோகஞ்செய்தா
னெனறு மிப்படியவளைத்தனக்குப் பெண்சாதியா
க்கிக்கொண்டானெனறு மிந்தப்பாவாக்கிரமத்தி
னாலே பிரமாவுக்குப் பூசை பலி தேர் திருநாள்
கோயிலில்லாமற்போச்சுதெனறும் புராணங்களி

லெழுதியிருக்கின்றது. மீளவும் பிருகுமுனி சத்தி
யலோகத்துக்குப்போனபோது பிரமா அவனுக்கா
சாரக்குறை செய்தபடியினாலேமுனியிட்டசாபமு
ம் பிரமா சிவனுக்குச்சொன்ன பொய்யால்வந்த
சாபமும் அவனாராதனையினொழிவுக்குக்காரணமா
யிற்றென்று வேறேயிடங்களிற் சொல்லியிருக்கின்
றது. இப்படிவெட்ககேடான அக்கிரமத்தைச்
செய்ததினாலும் ஓர்முனியிட்டசாபத்தினாலும் பூ
சை பலி கோயிலில்லாமற்போனவனைத் தேவனெ
ன்றுந் தெய்வத்துக்குகந்தவனென்றுஞ் சொல்ல
க்கூடுமோ? சிஷ்டிக்கிறதும் வரங்கொடுக்கிறதுந்
தலையிலெழுதுகிறதுமாகிய இம்மூன்றுத்தியோக
ங்களும்அவனுக்குண்டென்றுசொல்லுகிறார்கள். இ
ம்மூன்றுத்தியோகங்களுக்கும் வல்லவன் றன்சிர
சைத் திரும்பவுண்டாக்கிக் கொள்ளுகிறதுக்குவல்
லமையில்லாமற்போனதென்ன? இம்மாத்திரத்துக்
கு வல்லபமில்லாதபோதே யிப்பிரபஞ்சத்தையெ
ப்படியுண்டாக்கியிருப்பான். இரணியாக்ஷனிரணி
யகசிபன்பலிச்சக்கரவர்த்திஇராவணன்முதலானவ
ர்களுக்குத் தேவர்களாலேமுதலாய்ச் சாவுவாராதப
டிக்குவரங்கொடுத்தவன் றனக்கேசாடமுஞ் சிர
ச்சேதமும் வராதபடிக்குபாயஞ்செய்யாமற்போ
னதென்ன? மேலும் பிரமா ஆதிமனுஷனைப்ப
டைக்கிறபோது குசவனைட்போலே மனுஷசரீரத்
தையுருவாக்கி அவனுக்கொருகாலைமாத்திர முண்
டாக்கினானென்றும், பின்னு மவன்குந்திக்குந்தி ந
டக்கிறதையும் விழுகிறதையுங்கண்டு மூன்றுகா
லோடேயவனையுண்டாக்கினானென்றும், மறுபடியு
மதுசரிப்படாதென்றுபார்த்து மனிதனையிரண்டு

காலுள்ளவனாகச்சிஷ்டித்தானென்றும், வேறொரு புராணத்திற் சொல்லியிருக்கின்றதாம். இப்படியிருக்க, தெய்வீகஞானம் பிரமாவுக்குண்டென்றெப்படிநினைக்கக்கூடும்? ஒரு அனனப்பட்சியி னுருபமெடுத்துச்சிவனுடையமுடியைத்தேடிக காணாதிருந்தாலுங்கண்டேனென்று பொய்சொனனானாம். மீளவும் அவன ஒருநாள் காயத்திரி சாவித்திரி சரசுவதியெனகிற ஸ்திரீகளோடே கூடியிருந்துந் தாம்படைத்த திலோத்தமைபேரிலாசைவைத்து அவளைப்பினதுடர அவள்ஒருகிளிப்பிள்ளையாயோட, பிரமாவும்ஆண்கிளியுருபமாய்த்தொடர்ந்தானெனறுசொல்லுகிறார்கள். இதெல்லாம் பரமதேவனுககு யோககியமான நடத்தையோவெனன? ஆதலாற்பிரமாதெய்வமுமல்ல, கடவுளுக் குகந்தவனுமல்லவென்றெப்பிக்கஅவன்சரித்திரங்களிலேயிம்மாத்திரமெடுத்துக்காட்டினது போதுமென்றிருக்கிறோம்.

சிவன் நடைபடி.

ஈசுரனென்றும் உருத்திரனென்றுஞ் சதாசிவனென்றும் பரமேசுரனென்று மிவைமுதலியபல நாமமுடைத்தானசிவன ஆண்டிவேஷமாய்ச்சரீரமெல்லாஞ்சாம்பலைப்பூசிக்கொண்டு சடைகளைத் தரித்துத்திரிசூலத்தைககையிலேபிடித்துச்சர்ப்பங்களையாபரணமாகப்பூண்டுகொண்டு பிரமகத்தியினிமித்தமாகப் பிரமாவின கபாலங்கையிலேந்திப் பிச்சையிரந்துமசானக்கரைகளிலே விசேஷமாய் வாசம்பண்ணிக்கொண் டிருக்கிறானாம். சிட்சைபொருந்தினதும் வெருட்டுக்குரியதுமாகிய அப்ப

டிப்பட்டவேஷந் தேவனுக்குயோக்கியமோவெ
ன்ன? சிவனுக்கைந்துசிரசு மதுவினாற்சிவந்தமூன்
றுகண்களுமுண்டென்றும் நெற்றியிலுள்ளகண்வி
சேஷமாய் மகாஉக்கிரமுள்ளதென்றும் அவன்ச
கலத்தையுமெரித்தழித்துப்போடவுஞ் சிஷ்டிக்கவு
ம்வல்லவனாயிருக்கிறானென்றுஞ் சொல்லுகிறார்க
ள், இதைத்தானிப்போதுபரிசோதிக்கவேணும். ப
ஸ்பமாசுரன் சிவனைநோக்கி வெகுகாலந்தபசுபண்
ணிக்கொண்டிருக்கிறபோது சிவனவனுக்குப்பிரத்
தியட்சமாகியுனக்குவேண்டியவரத்தைக் கேளென்
றான். அதற்குப்பஸ்பமாசுரன் நானாருடையசிரசின்
பேரிலேகையைவைக்கிறேனோ அவர்களைப் பஸ்ப
மாயெரித்தழிக்கும் வரங்கொடுக்கவேணுமென்று
கேட்க, சிவனப்படியேவரங்கொடுத்தான். அந்தவர
த்தைப்பரிட்சைபார்க்கவேணுமென்று அசுரன்சி
வனைத்தானேதொடர்ந்தான். அப்போது சிவன்பஸ்
பமாகப்போகிறேனென்றுபயப்பட்டு அங்கலா
ய்த்து நாலுதிக்குமோடித்திரிந்து கடைசியிலே ஐ
விரவிக்காயிலேயொளித்துக்கொண்டான். இதைக்க
ண்டுவிஷ்ணுமோகினிவேஷமாய்வந்து தந்திரம்
பண்ணியசுரன்கையை அவன்தலைமேலேவைத்து
அவனைபஸ்பமாயெரிந்துபோகும்படிசெய்தானா
ம். அப்படி பரமதேவனென்னப்பட்டவன புத்தி
தப்பிக்கொடுத்தவரத்தால் தானேசங்கரமாகத்திரி
ந்தான. தன்னைக்காக்கக்கூடாமற் பயந்தொளிந்து
ஓர்மோகினிதந்திரத்தாற்காப்பாற்றப்பட்டுத் தப்பி
த்துவெளியில்வந்தான. ஆனாற்சர்வத்தையுஞ்சங்கரி
க்கிறவல்லமை யவனுக்கிருந்தால் தன்னை நாசமாக்
கவருகிறசத்துருவைச் சங்கரிக்கக்கூடாமற்போன

தெனன? வேறொருசமயத்திலேசிவனபார்வதியோ
டேகூட காவற்காரனாய்வாணாசுரனெனனும்பலத்
த விராட்சதனுடையவாசலைக் காத்திருந்தான. இ
ராட்சதரோடே யநேகவிசையுத்தம்பண்ணிச்செ
யமும்வசெயமுமடைந்தான. சிவனுடைய இனப
ஸ்தலமாகிய கைலாசகிரிஇராவணனெனனுமிராட்
சதன தனகையிலெடுத்துக்குலுக்கினானாம். ஓர்யுத்த
முகாந்தரமாகப் பூமியை யிரதமாக்கி, பிரமாவை
ச்சாரதியாக்கி, வேதங்களைக்குதிரையாக்கி, விஷ்ணு
வையம்பாக்கி, மகாமேருவைவில்லாக்கி,ஆதிசேஷ
னைவில்நாணாக்கியிந்தப்பிரகாரமிரதத்தினபேரிலே
றிக்கொண்டு பாணங்களைக்கொளுத்தித் திரிபுரத்தி
னபேரிலேயெறிந்து அந்தமூனறுகோட்டைகளை
யுமதிலிருந்த இராட்சதர்களையுநீர்த்தூளியாக்கிவிட்
டானாம்.புத்திக்கொவ்வாதவிந்தவிஷயங்கள்பாகவ
தமுதலியபுஸ்தகங்களிற்சொல்லியிருக்கினறது.சிவ
னுக்கொருபெண்சாதிகிடைப்பதுமகாபிரயாசமா
யிருந்ததாம். ஆதலால்தனக்கொருபெண்சாதிவே
ணுமெனறு மந்தரபர்வதத்தினருகில் நெடுநாள்
கடினதவசுபண்ணினான.அதைப்பற்றி மந்தரபர்
வதமவனுடையதபசினாற் சந்தோஷிப்பட்டுத்தன
மகளாகுகிறபார்வதியையவனுக்குக் கொடுத்ததாம்.
ஆயினும் பார்வதியவனுடையகாமத்துக்குப்போ
தாமையினாலேயாக்குங் கெங்கையுமவனுக்குப்பெ
ண்சாதியானதுமனறிவிபசாரமார்க்கமாயுந்திரிந்தா
ன. ஒருநாள்வளையற்செட்டிவேஷமாய் வளையல்க
ளைத்ம்தாளினபேரிற்போட்டுக்கொண்டு ஓர்கிரகஸ்
தனவீட்டிற்போய்அக்காள்தங்கைச்சிஎழுபேரைக்
கெடுத்தான. இதைத்தாய்தகப்பனறிந் தங்கலாய்த்

துமுறையிட்டதினிமித்த மேழுபேரையுங் கலியாணம்பண்ணிக்கொண்டானும். வேசிகளிருக்கிறசிவபுரத்துக்கு அவனபோனதினிமித்தம் பார்வதிகாய்மகாரங்கொண்டு அவனோடேசச்சரவுசெய்தாள். வேறொருசமயத்திலே யொருபெண்பிள்ளையிடத்திற்கூழுக்காகக்கூலிவேலைசெய்துபிட்டுக்குமண்சுமந்தானும். மீளவும்வரூடின அறுபத்துநாலுதிருவிளையாடல்கள் சொக்கநாதமகத்துவத்திலே யெழுதியிருக்கின்றது. இப்படிக்கொத்தசரித்திரங்களைக் கூச்சமும் வெட்கமுமில்லாமற்சொல்லவுங்கேட்கவுங்கூடாது. இதெல்லாமிப்படியிருக்கச் சிவன தேவனாகவாவது தெய்வத்துக்கு உகந்தவனாகவாவது இருப்பானென்று நினைக்கக்கூடுமோ! மட்டில்லாவல்லபமகிமைபரிசுத்ததனமுள்ள தெய்வத்துக்கு மவனுக்குமெவ்வளவோவித்தியாசமுண்டு.

இலிங்கவரலாறு.

இலிங்கத்தினுடைய உரூபமு மர்த்தமும் வருமாறு மிகவும்வெட்கத்துக்குரியதாயிருந்தாலு மதின்மயக்கத்திலகப்பட்டவர்களுக்குப் புத்திதெளியும்பொருட்டு அதனைவிளக்கக்கடவோம். இலிங்கப்புராணமுதலியபுராணங்களி லதின்வரலாறு பலவிதமாய்ச்சொல்லியிருந்தாலும் எல்லாத்திலுஞ் சிவனுடையவெட்கக்கேடுவிளங்குகிறதாமே. ஒருபுராணத்திற்சொல்லியிருக்கிறதாவது: சிவன்மோகவெறிகொண்டு தபசுசெய்கிற சந்நியாசிகள்முன்பாகப்போய்அவலட்சணமோகச்சேஷ்டைகளைச்செய்தமையாலதையவர்கள்பொறுக்கமாட்டாமலுன்னுண்குறியற்றுவிழக்கடவதென்று சபித்தார்கள்.

அதுஅப்படியேஅற்றுவிழுகிறபோது பார்வதிபெ
ண்குறியாகவந்து அதையேந்திச் சேர்ந்துகொண்
டாளாம். இப்படி இந்தச்சாபம்பலித்தபிறகு தப
சிகள்வந்து இனி சிவனுக்குப் பூசைநடத்தால் இ
லிங்கத்திலாண்குறியாக நமஸ்கரிக்கப்படக்கடவா
னென்றார்களாம். சிவன்தாருகாவனத்தில் இரிஷிப
த்தினிகளைக் கற்பழித்தபோது பிருங்கிரிஷிகொடு
த்தசாபத்தினாலே மேற்சொல்லிய சேதஞ்சம்பவி
த்ததென்றுஞ்சொல்லுகிறார்கள். இலிங்கத்துக்குக்
காரணமானகதை புராணங்களிற்சொல்லியிருக்கிற
வேறேஅசுசியானபிரகாரமாவது: ஒருநாள் பிர
மாவும் விஷ்ணுவும் வசிஷ்டன்முதலிய முனிவர்க
ளுங் கைலாசத்திற் சிவனைச்சந்திக்கப்போனசம
யத்திற் சிவன்தன்பெண்சாதியோடே அநுபோக
ஞ்செய்துகொண்டிருந்தான். அப்போதவன்கொ
ண்டிருந்தமதுமயக்கத்தைப்பற்றி வந்ததேவர்களை
யுமுனிவர்களையுமறியாமல் அவர்களுக்குமுன்பாக
வே தன்மோகவெறியை யநுசரித்துக்கொண்டா
ன். ஆதலாலவர்கள் அப்படிப்பட்ட வெட்கக்கே
டுள்ளநடக்கையைச்சயிக்காமல் அவனைச்சினந்து
தூஷித்துச்சபித்தார்கள். புத்திதெளிந்தபின் சிவ
ன்நடந்தசெய்தியெல்லாந் தன்சேவகராற் கேட்ட
றிந்து தானுந்தன்பெண்சாதியும் வெட்கி இருவரு
முனிவராற்காணப்பட்ட நிலையிலேதானே துக்கத்
தினாற்செத்து இலிங்கத்தில் மறுபடிசீவித்தார்களா
ம். ஆதலால்தன்னைவெட்கப்படுத்தித் தனக்குச்சா
வும் வேறுசீவமும் வருவித்தசெய்கை மனிதராற்
கொண்டாடப்படவேணுமென்றுவிரும்பி இலிங்
கந்தான்தானேயென்று இலிங்கரூபமாகத்தனக்கு

ப்பூசையாராதனைசெய்யக்கற்பித்தானும். சொல்ல
வுங்கேட்கவு மகாஅசங்கியமுள்ளது மித்தேசமுனி
வர்களுக்குந் தேவர்களுக்குமுதலா யரோசிகமான
துமாகிய இந்தஅசுசியானநடத்தையா லுண்டா
னஇலிங்கத்தைச்சுகிர்தநாணமும்புத்திஞானமுமு
ள்ளமனிதர் எப்படிவணங்கலாமென்று கண்டுபிடி
ப்பதரிது. கற்புடையோர் வெட்கத்தினாலேகூசா
மல்தைப் பார்க்கவுங்கூடாதே. இதெல்லாஞ் சற்று
வதுயோசித்தால்தின்மேல் வெட்கமு மரோசிகமு
ம் வராதிருக்கக்கூடுமோ? ஆனாலிதெல்லாம்யோசி
யாமல் அஞ்ஞானமருளினாலும் பாவமயக்கத்தாலு
ம் வெட்கமற்றுப்போனவர்கள் கற்புக்குமுழுதும்
விரோதமுஞ் சயிக்கப்படாதஅசுசி அவலக்ஷணமு
மாகிய இவ்வடையாளத்தைக் கையிலேயுங் கழுத்தி
லேயுந் தலையிலேயுங்கட்டிக்கொண்டு மகாபூச்சிய
மாகவணங்கிப் பூசைசெய்துவருகிறார்கள். சற்று
ம்வெட்கமில்லாமல் இதுவேதெய்வமென்று மிது
வேகதியென்றும் பாராட்டி விசுவசித்து மோசம்
போகிறார்கள். பின்னையும் இலிங்கதாரிகளிலேயா
ராயினுந் தான்கட்டியிருந்த இலிங்கத்தைப்போக்
கடித்தால்வனுயிரோடேயிருக்கலாகாதென்றுஞ்சீ
வனைவிடவேணுமென்றும் போதிக்கிறார்கள். அ
தைநம்பினபைத்தியத்தாலநேகரவலமாய்ச் செத்
தார்கள். அப்படிப்பட்டமதியீனத்தைத் தீர்க்கத்த
க்க ஓர்சரித்திரமுண்டு.

காஞ்சிபுரத்தில இலிங்கதாரியொருவன் ஆழ்த்
தகுளத்தங்கரையிலிருந்து தன்னிலிங்கத்துக்குப்பூ
சைபண்ணுகிறபோது இலிங்கத்தவறிக்குளத்திலே
விழுந்தது. எத்தனை பிரயாசப்பட்டுத் தேடினாலும்

அது அகப்படாமற்போயிற்று. ஆதலால்தன்குருவண்டைக்குவந்து இதுக்குப் புத்தியென்னசுவாமீயென்றுகேட்க, இலிங்கம்போக்கடித்த குளத்திலே தானே யுன்சிவனையும்போக்கடிக்கவேணுமொழிய வேறேயடைமானமில்லையென்று குருசொன்னான். அதற்குச்சீஷன சுவாமீ உமதுசொற்படியாகட்டும்,நானசாகுமுனனே யும்மையொருமனருட்டுமாத்திரங்கேட்கிறேன,இனனமொருவிசைஇலிங்கப்பூசைபண்ண ஆசையாயிருக்கிறேன அதன்பின சாகத் துணிந்திருக்கிறேன , தேவரீர்தயைசெய்து உமது இலிங்கத்தைச் சற்றுநேரத்துக்குத்தரவேணுமெனறுகேட்க,அப்படியேகுருகுளத்தங்கரையில்வந்து அதைஅவிழ்த்துக்கொடுத்தான. சீஷன்தற்குப்பூசைபண்ணுமேரையாய்ச்செய்துவருகையில் இலிங்கத்தைக் குளத்திலேநழுவவிட்டுச் சுவாமீ யுமது இலிங்கமுங் கைந்நழுவிக் குளத்திலேவிழுந்துபோச்சுதே, இருவருங் குளத்திலேவிழுந்து சாவோமெனறு சொனனன, அதற்குக்குருசினந்து அடாபாதகா,இதையொருவரோடேயுஞ் சொல்லாதே,இருவரும் வேறேயிலிங்கங்களைக் கட்டிக்கொள்ளுவோம், அந்தஇலிங்கம்போனால்தானெனன, கடையில் வேறிலிங்கமில்லையோவெனறான. அப்படியே வேறேயிலிங்கங் கட்டிக்கொண்டார்களாம். ஆதலால் இலிங்கத்தைப்போக்கடித்ததினிமித்தஞ்சாவது வியர்த்தம்.

விஷ்ணுநடைபடி.

சிவனைவிட விஷ்ணு நல்லவனோ தெய்வீகமகிமையிலக்ஷணமுள்ளவனோ வெனறறிவதற்கு அவ

னுடைய நடைபடிகளைக் கொஞ்சஞ் சோதித்துப் பார்க்கக்கடவோம். விஷ்ணுமதத்தார் பலவிதமாயிருக்கிறதுமன்றி அவர்களுக்குப் பற்பலபேர்களுமுண்டு: தத்துவாதிகள், வைஷ்ணவர், இராமாஞ்சிகள், எம்பெருமான்மதத்தார், சாத்தினவர், சாத்தாதவர், தாதர்முதலியவர்களுமிருக்கிறார்கள். அவரவர்களுக்குப் பலபலமந்திரதந்திரங்களு முத்திரைஇரகசியதானங்களுமுண்டு. அவர்களெல்லாரும் விஷ்ணுவை யுலோகவிரட்சகராகப் பாராட்டி ஆதிவிஷ்ணு, சர்வம்விஷ்ணுமயமென்று ஸ்துதிக்கிறார்கள். அவனுலகத்தை யெந்தப்பிரகார மிரட்சித்தானென்றுகேட்டால்நேக அவதாரமெடுத்து இரட்சித்தானெனபார்கள். அவனெடுத்ததாகச் சொல்லப்பட்ட அவதாரங்களில் மச்ச, கூர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராம, இராம, பலபத்திரராம, புத்த, கற்கியவதாரமெனனப்பட்ட விந்தத் தசவவதாரங்கள் விசேஷமாய் மகாபிரபலியமாயிற்று. ஆதலாலிதுகளை யொவ்வொனறாய்ப்பரிசோதித்தாராயவேண்டும்.

௩௰-வது. மச்ச அவதாரம்.

பிரமாதேவனெனனப்பட்டாலும்பூர்வகாலத்திலே யிளைப்பினால்நித்திரைபோனானாம். அப்போது வேதங்கள் நித்திராபோகிறவனகிட்டவிருக்கலாகாதென்றுபுறப்பட்டுப்போய்வழியில் (†) அயக்கிரிவனெனகிறகள்ளவிராட்சதனகையிலே யகப்பட்டதாம். இவன்துகளைச் சமுத்திரத்துக்குள்ளே யொளித்திருகக விஷ்ணு அதுகளை மறுபடிபிடி

(†) சிலர் இலங்காசுரனென்று சொல்லுகிறார்கள்.

த்துககொள்ள மச்சஅவதாரமெடுத்தானும். அந்த
மீனெப்படிககொத்ததெனறாற்சிறுசெவுளும், பெ
ரியமீசையும், குறைந்தவாலும், பச்சைநிறச்செதி
ளும், வளைந்தமூககும், ஒளிவுள்ள கண்ணுமுள்ள
தாம். அந்தவடிவாய் விஷ்ணுசலத்திலேயூர்ந்துஉட
லையாட்டித்தலையைச்சாய்த்து மீசைகளையசைத்து
த் தாண்டித்தாண்டிவிழுந்து மச்சச்சேஷ்டைய
நேகஞ்செய்துகொண்டு அயககிரிவனைத்தேடிப்பி
டித்துச் சங்கரித்து வேதங்களைச் சிககறுத்துககொ
ண்டுவந்துபிரமாவின்கையிற்கொடுத்தானும். இந்த
கதையினவரலாறு பாகவதத்திற்சொல்லியிருககின
றது. ஆனால் வேதமெப்படி நடந்துபோச்சுது?
அதுநடந்ததெனறாலுங் கண்ணுககுத்தெரியாமல்
மாயையாய்ப்போகிறவேதத்தை இராட்சதனெப்
படிகண்டுதிருடினான? மேலுமிந்நிமித்தம் ஆதி
தேவனசொற்பசீவனாய்ப்பிறககவேணுமோவென
ன? இதெல்லாம்பரியாசமும் விளையாட்டுககுச்சமா
னமுமாயிருககிறதல்லாமல் தெய்வீகத்துககுயோக
கியமாய்க காணமாட்டாது.

உ-வது. கூர்மஅவதாரம்.

பாகவதத்து அஷ்டமஸ்கநதத்திலே சுகயோகி
சொனனபடி தேவர்களெல்லாரும் பலிச்சககரவர்
த்திமுதலானவிராட்சதராலே யலைககழிந்துபோய்
உபத்திரம்பொறுககமாட்டாமற் சிறிதுகாலம் ப
லிககுககீழ்ப்படிந்துகொண்டிருந்தார்கள். பினனு
மவர்கள் விஷ்ணுவினாலோசனையின்பேரிலே மந்
தரமலையை யடியோடேபிடுங்கியெடுத்துச் சமுத்
திரத்துக்குக்கொண்டுபோகையில் அதைச்சுமக்க

யோட்டாமல் தத்தளித்தசமயத்தில் விஷ்ணுவந்து
அவர்களுக்குச்சகாயம்பண்ணி அதைப்பாற்கடலி
லேதிருத்தினாரும். ஆதலால் தேவர்களும் அசுரர்க
ளு மந்தரமலையைமத்தாக்கி வாசுகிச்சர்ப்பத்தைக
கயிறாக்கிப் பாற்கடலைக்கடையத்துவக்கினார்கள். ஆ
னால் வாசுகிப்பாம்புவருத்தப்பட்டு நஞ்சைக்கக்கி
னதால் அவர்கள்திகைத்துக் கைவிட்டு நடுங்கியோ
ட, பர்வதமிதந்து தாழ்ந்துபோச்சுது. பின்பு
தேவர்கள் விசாரப்பட்டு விஷ்ணுவைமன்றாடவே
விஷ்ணு ஆமையவதாரமெடுத்துச் சலத்திலேமுழு
கிப்போய்ப்பர்வதத்தையெடுத்து முதுகிலேதாங்கி
நிறுத்தினாரும், இதைத்தான கூர்மஅவதாரத்துக்கு
க் காரணமாகச்சொல்லுகிறார்கள். மேலுமப்படி
பாற்கடலைக்கடைகிறபோது வாசுகி கக்கின ஆலகா
லவிஷத்தைச் சிவனெடுத்துமுழுங்கினதினாலே ஆ
லகண்டனென்கிறபேரவனுக்குண்டாயினதாம். மீ
ளவுமுன்போலே தேவர்களு மசுரரு மறுபடிகூ
டிப் பாற்கடலைக்கடையவே அமிர்தம்பிறந்ததென
று மதிலே இலட்சுமிமுதலான ஸ்திரீகள்பிறந்தார்
களென்று மிவைமுதலிய அபத்தகதைகள்நேகமு
ஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னுமமிர்தத்தி
னிமித்தந் தேவர்களுக்கு மசுரர்களுக்கும் வழக்கு
ண்டானதை விஷ்ணுகண்டு அமிர்த மிராட்சதருக்
கப்படாதபடிக்கு எவர்களையுமயக்கத்தக்க சௌ
ந்தரியமுள்ள மோகினிவேஷமெடுத்துக்காமச்சா
டையினாலுமொழிகளினாலும்அவர்களிடத்திலெழு
ப்பினமோகவாசையா லமிர்தநினைப்பை மறக்கடி
த்துத் தன்னையாலிங்கனம்பண்ணப் போட்டியால்
ஒருவரொருவரையெதிர்த்துக் கொல்லும்படிசெ
ய்து தேவர்களுக் கமிர்தத்தைப்பகுத்துகொடுத்தா

ளும். இந்தச்செய்தியை நாரதமுனியாற் சொல்லி கக்கேட்டுச் சிவன பார்வதியோடேகூடவந்து மறுபடிவிஷ்ணு அந்தமோகினிவேஷமெடுக்கும்பொருட்டுமன்றாடி அதைகக்கண்டவுடனே தனமோகவெறியடக்கமாட்டாமல் விஷ்ணுவைத்துரத்திப்பிடித்து ஒருசெடி மறைவில்வஞ்ஞேடேபுணர்ந்ததினுல்அரிகரபுத்திரனென்னும் ஐயனூர்பிறந்தாளும்.இப்படிக்கொத்ததுர்நடத்தை மனுஷருக்குமுதலாயிடாத அக்கிரமமாயிருக்கக்கொள்ள, தேவர்களுக்குத்தகுமென்றுவெட்கமில்லாமற்சொல்லக்கூடுமோ? இப்படிசெய்பவர்களைத் தேவர்களென்றெண்ணலாமோ? இந்தச்சரித்திரமானதுஎல்லாஅக்கிரமத்திலு ம்க்கிரமமுஞ்சகலஅபத்தத்திலும்அபத்தமுமாயிருக்கிறதொழியவேறல்ல.

௬-வது. வராகஅவதாரம்.

வராகஅவதாரமென்பது பன்றியவதாரமாமே. இரணியாக்ஷனென்கிற இராட்சதனைவதைக்கிறதுக்குவிஷ்ணு இந்தஅவதாரமெடுத்து அவன்வயிற்றைப்பீறி அவனைச்சங்கரித்தபின் பூமியிலுள்ளபன்றிகளின்மேலிச்சித்துக் கூடிக்கருவுண்டாக்கிஆண்பெண்விகற்பமான குட்டிகளைப்பிறப்பித்தும் வளர்த்தும் இப்படி அநேககாலமுலகத்திலிருந்தாளும்.அப்படியிருக்க ஒருகருடன் விஷ்ணுவுக்கு வாகனமாயிருக்கிறதைப்பற்றிக்கருடனெல்லாம் வணங்குகிறவர்கள் விஷ்ணுவுக்கினமுஞ் சந்ததியுமான பன்றிகளைவணங்காமற் போகிறதென்ன? பன்றியவதாரவடிவாகவிஷ்ணுவையாவதுஆராதிக்காமற்போகிறதென்ன? பன்றி அதிக அசுசியுமீனமுமானமிருக

மாயிருக்கிறதைப்பற்றி ஆராதனைக்கு அபாத்திரமானால் தெய்வத்தின் அவதாரத்துக்கு யோக்கியமாயிருந்ததெப்படி?

௪-வது. நரசிங்கஅவதாரம்.

இரணியனென்னுமிராட்சதனைச் சங்கரிப்பதற்கு விஷ்ணு பாதிசிங்கரூபமும் பாதிமனுஷரூபமுமாகியஇந்த அவதாரமெடுத்தானாம். அந்தஇரணியன் தன் சகோதரனாகியஇரணியாக்ஷனைவிஷ்ணுவதைத்ததினால்விஷ்ணுமேல வெகுபகையாய்வைகுண்டமுதலானஸ்தலங்களிற்போயவனைத்தேடுகையில் வன்கப்படாமலொளித்துக்கொண்டிருந்ததினால்வனுடையநமஸ்காரத்தையழிக்கநாராயணனென்கிற நாமமுலகத்தில்வழங்காமல் மாற்றித் தன் னாமமேவழங்கச்செய்ததுமன்றிச் சகலதேவர்களையுங் கீழ்ப்படுத்திப் பற்பலவுபத்திரவங்களையுஞ் செய்துவந்தானாம். மீளவுந்தன்புத்திரனானபிரகலநாதன் விஷ்ணுபத்தனாய்த்தன்கட்டளையைமறுத்து நாராயணாவென்றுசொல்வித்துதிப்பதை இரணியன்கேட்டுத் தன்குமாரனைக்கொல்லுகிறதுக்குத்தியோகமாயிருக்கிறசமயத்தில் விஷ்ணு ஒருதூணிலேயிருந்து நரசிங்க அவதாரமாய்ப்புறப்பட்டு இரணியனைப்பிடித்துத்தொடைமேலேகிடத்திக்கொண்டு நகத்தினால்வனுடையவயிற்றைப்பீறி யிரத்தத்தைக்குடித்துக் குடலைத் தோள்மாலையாகப் போட்டுக்கொண்டு போய்விட்டானாம். இப்படிக்கொத்தவுக்கிரமமான கோபவெறியு நிஷ்டூரகொடுமையுமிரத்தத்தாகமும்பரமதேவனுடையமகிமையிலக்ஷணமோ வென்ன இதுபுலியின்குணமல்லாதே கடவுளின் குணமல்லவென்பதற்குச்சந்தேகமில்லை.

ரு-வது. வாமன அவதாரம்.

மாவலியைச்சங்கரிப்பது வாமன் அவதாரத்துக்குக்காரணமாயினதாம். அந்தமாவலியென்கிறஇராட்சதன் அதிகபராக்கிரமமுள்ளவனாய்த் தேவர்களெல்லாரையுந் தனக்குக்கீழ்ப்படுத்தியுபத்திரவஞ்செய்து கொண்டிருந்தான். அவனையழிக்கிறதுக்கு விஷ்ணு குறள்பிராமணனாயவதரித்து மாவலிகிட்டவந்து அவனைவெகுவாய்ப்புகழ்ந்து தனக்கு மூன்றடிநிலம் பிச்சையாகக்கேட்கவே மாவலியளந்துகொள்ளச்சொன்னான். அப்போது விஷ்ணுமகாவுந்நதவடிவாகிப் பூமிபாதாள சுவர்க்கமுழுவதையும் ஈரடியாகஅளந்துகொண்டு, மூன்றாமடிக்குஇடமில்லாதபடியினாலே மாவலிசிரசின்மேலேகாலைவைத்து அவனைப்பாதாளத்திலே யிருத்திப்போட்டானாம். இப்படிக்கொத்த பிதற்றுதலை மெய்யாகவெண்ணிநம்புவதெத்தனையோ மூடமுள்ள அக்கியானமென்றுபுத்திமான்கள் யோசித்தறிந்துகொள்ளக்கடவார்கள்.

சா-வது. பரசுராம அவதாரம்.

விஷ்ணுசமதக்கினிக்கு மிரேணுகைக்கும் பரசுராமனென்கிறபுத்திரனாகப்பிறந்தானாம். கார்த்தவீரியார்ச்சுனன் சமதக்கினியினுடைய பசுவை வலுவந்தமாக வோட்டிக்கொண்டுபோனதினாலே பரசுராமன் கார்த்தவீரியார்ச்சுனனோடேயுத்தம்பண்ணியவனைச்சங்கரித்துப் பசுவையோட்டிக்கொண்டுவந்து தகப்பன்கையிலொப்பித்தானாம். பின்னுங் கார்த்தவீரியார்ச்சுனன் குமாரர்கள் பழிவாங்குகிறதுக்குவந்து சமதக்கினியைச்சங்கரித்தார்களே

ன் றுந் தகப்பனுடையசாவினிமித்தம் பரசுராம
னிருபத்தோரிராசாக்களையுஞ் சூரிய வமிசத்தில்
வ்தரித்தசத்திரியரையு மவர்களிற் சனித்துவரப்பட்
டபுத்திரபவுத்திரரையுஞ்சங்கரித்தானென் றுந் த
ன் தகப்பன் தனக்குச் சொல்லியிருந்தபிரகாரந்தன்
னைப்பெற்றதாயையும் அண்ணன்மாரையுங்கொன்
றானென் றுஞ் சொல்லியிருக்கின்றது. இதுவும்பர
மதெய்வத்தின் நடைபடியாமோ?

எ-வது. இராம அவதாரம்.

அங்கங்கேமுக்கியமாய்ப் படிக்கப்படுகிறதுஞ் சூத்திரருக்கொருவேதம்போலிருக்கிறதுமாகிய இராமாயணமென்கிறகாவியத்துக்குப் பொருண்மையான்கதை இந்தவவதாரந்தான். இந்த அவதாரத்தில் விஷ்ணுதசரதனுக்குங் கௌசலைக்கும் புத்திரனாகப்பிறந்து இராமனென்கிறபேர் தரித்துக்கொண்டு விசுவாமித்திரன்கிட்டப்படித்து மந்திரஅஸ்திரவரம்பெற்றுச் சீதையைக்கலியாணம்பண்ணினனும். ஒருநாள் அயோத்திக்குவருகிறபோது இராமனும் பரசுராமனுமிருவரும்வதரித்த விஷ்ணுவாயிருந்தாலு மொருத்தனையொருத்தனடையாளமறியாமல் நீவிஷ்ணுவோ நானேவிஷ்ணுவென்று தர்க்கித்தார்கள். பின்னும் இராமன் பிதாவினேவலால் தனபெண்சாதிசீதையோடேவனம்புகுந்திருக்கிறபோது இராவணன்மறைந்துவந்து அவளைக்கவர்ந்துகொண்டுபோனதினாலும்வளைவைத்தவிடந் தனக்குத்தெரியாமையினாலுமிராமன் திகைத்துப் பிரலாபித் தநுபவித்ததுக்கமித்தனை யத்தனையென்றுசொல்லக்கூடாது. அதன்பின் சுக்கிரீவனுடைய

உதவியினாலு மநுமானுடையசாக்கிரதையினாலு ஞ்சீதைசிறையிருக்கிறஸ்தலமறிந்து கடலைக்கடக்க க்கூடாமற் சிவாலயத்தையிடித்துச் சமுத்திரத்தி லெறிந்து அணைகட்டிக் குரங்குகளையுங்கரடிகளை யுஞ்சேனையாகக்கூட்டிக்கொண்டு இலங்கையைச் சாதிக்கப்போனானும். அப்போது இராவணன்வ ந்துதன்னைத்துதித்தபோது உன்னைச் சங்கரியே னென்கிறவாக்குத்தத்தங் கொடுத்தான். பின்னும் தைத்தள்ளி இராவணனுடையதம்பியாகிய விபூஷி ணன்தனக்குளவாயிருக்க அவனைச்சங்கரித்துப்பெ ண்சாதியைமீட்டுக்கொண்டுவந்தான். ஆனால் ஓர் வண்ணான்சொன்னவார்த்தையைக்கேட்டுச் சீதை தனக்குத் துரோகஞ்செய்திருப்பாளோ வில்லையோ வென்றுவெகுசந்தேகப்பட்டுக் கர்ப்பிணியாயிரு ந்த அவளை ஒருவனத்திலேகூட்டிக்கொண்டுபோ ய் உயிர்ச்சேதப்படுத்தக்கட்டளையிட்டான். இலட் சுமணனந்தக்கொடூரகட்டளையைநிறைவேற்றாமற் சீதையைவனாந்தரத்திலேவிட்டு ஒருமரத்திலெய்து அதினிரசத்தில்தோய்த்தஅம்பையிரத்தவண்ணமா கக்காட்டினதால் இராமன்தன்பழி தன்பெண்சா தியிராத்தத்தில்நிறைவேறினதென்று நினைத்தான். அ ப்படி இலட்சுமணனுடையவிரக்கத்தால் சீதைபி ழைத்துப்பெற்ற இரட்டைப்பிள்ளைகளால்இராம ன்தானும் அவனுடையசேனையுந் தோர்வைப்ப ட்டதாம். பின்னுஞ்சீதை உயிராயிருக்கிறதை இரா மன்றிந்து தான்செய்யக்கருதின எக்கியபலியினி மித்தம் இராசாக்களும் பிராமணருஞ் சொன்னபு த்திமதியைக்கேட்டுச் சீதையைமறுபடியழைத்து க்கொண்டான். ஆயினு மக்கினியால் அவளுடைய

கற்புநிலையைச் சோதித்தபின்பு மவள்பதிவிரதை
யென்று நம்பாதிருந்தான். அதினால் அவள் தன் துய
ரத்தைப்பொறுக்கமாட்டாமல் தன் தாயாகிய பூமி
யைத்தனக்குதவியாக அழைத்து அதின்பிளப்பிலே
அமிழ்ந்திமறைந்துபோனாளாம். கடைசியாயிராம
ன சரயுநதியில்விழுந்து அழுந்திப்போனானும். வா
ன்மீகியுங் கம்பனுமிந்தக்கதையைப் பெருங்காப்
பியமாக்கி அதைச்சகலவிதமும்வருணிக்கப்பிரயா
சப்பட்டிருந்தாலும் இராமனிடத்தில் தெய்வ
இலக்ஷணமொன்றும்விளங்காது. தனமனைவியெடு
படாதபடிக்குக்காப்பாற்றக்கூடாமையும், அவளி
ருக்கிறவிடம் பதிவிரதாத்தனமை முதலியவற்றைய
றியாமையும், அவளையநியாயமாய்க் கொலைப்படுத்
தக்கட்டளையிட்டகொடூரமும் இவைமுதலிய குறை
பாடுகளுமுள்ளவனைத்தேவனென றெப்படிசொ
ல்லக்கூடும்? ஆதலாவிராமாயணத்தினகவிகள் இனி
மையாய்த்தோனறினு மிராமனைவணங்குகிறது
மஞ்ஞானம், அவனைத்தெய்வமெனகிறதும்பத்தம்.

௮-வது. பலபத்திரராமஅவதாரம்.

இந்தஅவதாரத்தில் விஷ்ணுபலபத்திரராமனெ
ன்கிறபிள்ளையா யுரோகிணிவயிற்றிற்பிறந்து கிருஷ்
ணனுக்குத்தமையனாயிருந்தானென்றும் பெரியக
லப்பையை ஆயுதமாகவெடுத்துக்கொண் டநேக
விராட்சதரோடேயுத்தம்பண்ணிக்கொண் டிருந்
தானென்றுஞ் சொல்லியிருக்கின்றது. இதுபரம
தேவன்வதரிப்பதற்குத்தக்கமுகாந்தரமோவென்ன?

௯-வது. புத்தஅவதாரம்.

சிலரிந்த அவதாரத்தை யேற்றுக்கொள்ளுகிறதி
ல்லை. இதனைக்குறித்துச்சொல்லப்படுகிறதாவது: தி

வோதாசனென்பவன் சிவனிடத்திற்காசி நகரமுழு தும்பெற்று இராச்சியபாரஞ் செய்துவருகையில் விஷ்ணு புத்த அவதாரமெடுத்துத் தந்திரமாகவொ ருசாத்திரத்தைக்கற்பித்து அந்நகரத்தார் சைவசம யத்தைவிட்டுவிலகிப் புத்தசமயத்துக்குட்படும்படி செய்து திவோதாசனைக்காசிநகரினின்று நீக்கின னென்கிறார்கள்.

௰ - வது. கற்கி அவதாரம்.

கற்கிஅவதாரமென்பது குதிரையவதாரமென்ற ர்த்தமாமே. விஷ்ணு இந்த அவதாரமின்னமெடுத் ததில்லை, இனிமேலெடுக்கப்போகிறனென்கிறார்க ள். அப்படிவிஷ்ணு அவதரிக்குங்குதிரை ஆரையு தைக்குமோ ஆரைக்கடிக்குமோ ஆரதின்மேலேறி க்கொண்டு சவுக்காலடிப்பார்களோ இன்னந்தெரி யாதிருந்தாலு மந்தக்குதிரையினமேலே யமேநகயுத் தமுண்டாமென்று மப்போதுசூரியனுஞ் சந்திர னு மிருளடைந்து, நட்சத்திரங்கள்தாழவிழுமென் றுஞ் சொல்லியிருக்கின்றது. இந்த அவதாரத்து க்குஞ் சத்தியவேதத்திற்சொல்லியிருக்கிறபடி பர மகர்த்தருலகத்துக்கு நடுத்தீர்க்கவருமகிமைக்கும் எவ்வளவோ தூரவித்தியாசமுண்டு!

கிருஷ்ண அவதாரம.

இது தசாவதாரங்களுக்குட்பட்டதாயிராமற் பி ரத்தியேகமானாலும் விஷ்ணுவின்வதாரங்களில் மி கவுமுக்கியமாமே. இதிலே விஷ்ணுசெய்த அசுசி யானபாவாக்கிரமங்கள்முதலாய் விஸ்தாரமும் பா ராட்டுமாகப்பாகவதமுதலியபுராணங்களிற்சொல்

வியிருக்கின்றது. விஷ்ணு துவாரகாபுரியிற் கிருஷ்ணனாக அவதரித்தானாம். அங்கங்கே பால் தயிர் வெண்ணெய் திருடுகிறதுமடிபடுகிறதுங் கோபிகாஸ்திரீகளோடே மோகச்சேஷ்டைகளைச் செய்கிறதும் ஸ்திரீகள் குளிக்கிறபோது அவர்களுடையபிடவை சீலைகளையெல்லா மெடுத்து மரத்தின்மே லேறிக்கொண்டு அந்தஸ்திரீகள் தனக்கெதிரே நிருவாணத்தோடே நின்று கையெடுத்துக் கும்பிடக்கற்பிக்கிறதும் மோகப்பிரசங்கங்களைச் சொல்லுகிறதுஞ் சிறுபத்திற்கிருஷ்ணனுக்குத்தியோகமாயிருந்தது. வளர்ந்தபின்பு அநேகமுறையுத்தம்பண்ணி நாள்தோறுங்கிரமமாகச் சத்திரியரையும் அசுரரையுங் கொலைசெய்தும் அழகியஸ்திரீகளைத் தன்வசப்படுத்தி அவர்களோடே இலீலைவிநோதஞ்செய்துபோகித்துக்கொண்டும்வருவான். அவர்களுதரத்திற்பிறந்தபுத்திரர் புத்திரிகளுடனேயும் மற்றவர்களுடனேயும் பிரபாசகேத்திரமென்னும் ஸ்தலத்திற்போய் மதுபானத்தினலொருவரொருவரையறியாமற் போராடி அவர்களில் நாலைந்துபேர்தவிர மற்றயாவரு மிறக்கச்செய்தானென்றும், அருச்சுனனுக்கு இரதசாரதியாயிருந்தானென்றும், காந்தாரியாற்சபிக்கப்பட்டானென்றும், தன்குருவான இராயனகோஸ என்பவன்பெண்சாதி இரதையென்பவளைக் களவினாற்கொண்டுபோய் வனாந்தரத்திலவளோடே கூடியிருந்தானென்றும், தன்சொந்தத் தாயையுஞ் சகோதரிகளையும் பலவந்தமாய்க்கவர்ந்து அநுபவித்தானென்றும், விருந்தாவனத்திலநேகமிடைச்சியரைவசப்படுத்திக்கொண்டு ஆலிங்கனம்புரிந்தானென்றும், வடமதுரையில் இராச

னாகி அவ்விராச்சியத்திற் பதினாறாயிரம்ஸ்திரீகளைத்தி
ருடிமரணபரியத்தமிடைவிடாமற்சுரதலீலைவிநோ
தம்பண்ணினானென்றுஞ் சொல்லியிருக்கின்றது.
பின்னுந்தன்மாமனாகியகஞ்சனைக் கொல்லப்போ
கிறபோது ஓர்வண்ணானிடத்திற்போய் நிருவாண
மாய்நின்று வஸ்திரங்கேட்டான். அவனில்லையெ
ன்றதினிமித்தம் அவனைக்கொலைசெய்து வஸ்திரங்
களையெடுத்தணிந்துகொண்டு இராசசபையிற்புகு
ந்து கஞ்சனையு மற்றநேகரையுங்கொன்றானாம். மீ
ளவுந் தான்மதுபானம்பண்ணினதும், தன்புத்திர
ரையுந்தோழன்மாரையு மதுபானம்பண்ணுவித்த
தும், தருமரைக்கொண்டுபொய்சொல்லுவித்ததும்
பதினாறாயிரங்கோபிகாஸ்திரீகளை வைத்துக்கொண்
டதும் இவைமுதலியவநேகதுர்நடத்தைகளும் அ
வனைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாமே. கடைசி
யாய்க் கிருஷ்ணன் ஒருஆலமரத்திலேறிச் சயனி
த்திருக்கிறபோது ஒருவேடன் மிருகமென்றெண்
ணிஎய்த அம்புபட்டுச்செத்தானாம். அவன்சரீரம்ப
ட்சிகளாற்கொத்தவும் நரிகளாற் பிடுங்கவும்பட்ட
து. எலும்புகளையோவெனிற் சிலரெடுத்துக்கொ
ண்டுவந்தமையால் இந்திரதோமனனென்னு மிரா
சா செகநாதனென்கிற வோர்விக்கிரகத்தைச்செய்
து அதற்குள் அந்தஎலும்புகளைவைத்து நமஸ்க
ரித்தானாம். கிருஷ்ணன்பேரில்வழங்கிய அக்கிரம
சிற்றின்பபாட்டுக்களுக்குமிதமில்லை. கற்புடையோ
ர்துகளைக்கூச்சமின்றிக்கேட்கவேகூடாது. இந்தச்
சரித்திரங்களெல்லாம் பரிசுத்ததெய்வத்துக்குப்
பொருந்துமென்று சொல்லவுங்கருதவுங்கூடுமோ?
கிருஷ்ணன் நடந்தவகையாய் எவனாகிலுமிப்போ

து நடப்பானேயாகில் அவனையென்னென்றுசொல்லுவார்கள்? அப்படிப்பட்டவனைத்தெய்வமென்றாராதிக்கலாமோ? அவதரித்ததெய்வம் நெறிகெட்ட துர்மார்க்கரிலும் பாவச்சேற்றிலமிழ்ந்திப்போமெனறெண்ணலாமோ? இதெல்லாமபுத்திஞானத்துக்குப்பரிச்சேதமொவ்வாது.

மீளவும் கருடாசலமென்கிற பிரபந்தத்திலே சொல்லியிருக்கிறதாவது: விஷ்ணுவொருவேடச்சியைக்காட்டிலேமோசம்பண்ணிக்கெடுத்தான், இந்தச்செய்தியை யிலட்சுமிகேட்டுக் கோபித்துக்கொண்டுதன்புருஷன் வீட்டுக்குவந்தாலுள்ளேவரவிடவேண்டாமென்றுவாசற்காரரைக் கட்டுப்பண்ணிஞள், ஆதலால் விஷ்ணுவந்துவாசலிலேயநேகநேரமபோராடினும் ஒருவருந்திறக்கவில்லை, கடைசியிலே வரவுத்தரவுகொடுத்தாளாம். அதன்பின்விஷ்ணுதன்பெண்சாதிக் கெத்தனைபிரியவார்த்தைசொன்னும் அவள்சட்டைபண்ணுமல்மவுனமாயிருக்கிறதைக்கண்டு, அவளுடையகாலைப்பிடித்துக்கொண்டு, அடியேன் தாசன், நான் செய்தகுற்றத்துக்காகத் தண்டனிடுகிறேனென்று சொல்ல, இலட்சுமி மனதிரங்கிப் பரஸ்திரீயைச்சேர்ந்து புத்திரசந்தானமுண்டாக்கி வர்த்திக்கக்கடவாயென்று வாழ்த்தினுளென்று சொல்லியிருக்கின்றது. விஷ்ணுபாரவதிசாபத்தினுற் பாம்பாய்ப்போனுனென்றுங் கபந்தரனுடைய பெண்சாதியோடேயு மற்றநேகரோடேயுந்தானே விபசாரம்பண்ணினதுமன்றித் தன்பெண்சாதியை இராவணனுகிய விராட்சதன் கொண்டுபோக விடமும் பண்ணினுனென்றுஞ் சொல்லுகிறுர்கள். இதெல்லாஞ் சுகிர்தவொழுக்க

த்துக்குப் பொருந்துகின்றதென்று சொல்லக்கூடு மோ?

பின்னுந்திரிபுரத்திற் பதிவிரதையாயிருந்த ஓரி ராட்சதஸ்திரீயையழிக்கிறதுக்கு விஷ்ணு அநேகமு பாயஞ்செய்திருந்தாலுங் கூடாமற்போனதினால் ரசமரமாய்நின்று அவளையழித்தானும். அதுநிமி த்தமாக இத்தேசத்தார் அரசமரத்தை முக்கியப்ப டுத்திப்பிரதக்ஷிண நமஸ்காரம்பண்ணுகிறதுமன்றி அதுக்கும் வேப்பமரத்துக்குங்கலியாணஞ் செய்து இவ்விரண்டுமரத்தையும் ஏகமாய்ப் பயிராக்குகிறு ர்களல்லவோ? இதுவுந்தெய்வத்துக்கு யோக்கியமா னசரித்திரமோ அல்லவோவென்று யோசித்துப் பாருங்கள்.

திரிமூர்த்தியின்சரித்திர நடைபடிகளைப் பரிசோ தித்துஇவ்வளவுஞ்சொல்லிக்காட்டினதுபோதுமெ ன்றிருக்கிறேம். அவர்களைத் தேவர்களாகவுந்தெய் வத்துக்குகந்தவர்களாகவுமெண்ணுவதற் கிலவலே சவிடமு மில்லையென்று பிரத்தியக்ஷமாயிற்றல்ல வோ! இப்போதுசில்லறையானமற்றத்தேவர்களின் நடைபடிகளிலேயுஞ் சிறிதுசொல்லிக் காட்டவே ணடும்.

தேவேந்திரன் நடைபடி.

தேவேந்திரன் இரண்டாமந்தஸ்துள்ளதேவர்க ளுக்கெல்லா மிராசாவாயிருக்கிறுனும். அவன்பெ ண்சாதி இந்திராணி யென்னப்படுகிறுள். அரம்பை,உருவசி,திலோத்தமை, மேனகையென்கிறஸ் திரீகள் தேவேந்திரனுக்குநாட்டியப்பெண்களும் வனுடையஇன்பஸ்தலமாகிய சுவர்க்கத்தில்தேவதா

சிகளுமாயிருக்கிறார்களாம். அவர்களுடனே அநுபோகஞ்செய்கிறதே பரமபாக்கியமென்றுபாராட்டி அதற்குப் பாத்திரவான்களாகும்பொருட்டுப் பலபலதர்மங்களைச் செய்யவேணுமென்று மதிமயங்கினவர்களாய்க் கற்பித்துக்கொண்டுவருகிறார்கள். வேசிமார்க்கமானது துர்மார்க்கமென்றும் புண்ணியத்துக்குங்குடும்பத்துக்கு மற்றச்சகலத்துக்குங் கேடென்றும்யாவராலுமிகழப்பட்டிருக்கையி லந்தத்தேவதாசிகளின் சங்கத்தைப் புண்ணியத்துக்குச் சம்பாவனையும் பரமபாக்கியமுமாகக்கூறுவது எவ்வளவோமதிகெட்டதப்பறையாம். தேவேந்திரனுடைய நடத்தையிலுந் தெய்வீகத்துக்கொவ்வாதபலவிசேஷங்களுண்டு. அதுகளிற்சிலதுகளைக்காட்டுவோம். தேவேந்திரன் கௌதமமுனிபெண்சாதியகலிகையின்மேல் துராசைவைத்து அவளை அநுபோகிக்கவுபாயந்தேடி யோரிராத்திரியிற் சாவலாய்வந்துகூவினான், கௌதமன் பொழுதுவிடியுநேரமாயிற்றென்று ஸ்நானமுதலிய சுத்திகரகர்மங்களைச் செய்யப்போனான். அப்போது தேவேந்திரன் அகலிகையென்கிறவளைக்கெடுத் தநுபவித்தானாம். கௌதமமுனி மறுபடிவீட்டுக்கு வந்து நடந்தசெய்தியையறிந்து தன்பெண்சாதிகல்லாய்மாறவுந் தேவேந்திரனுக்கு ஆண்குறியற்றுவிழவு மவனுடையசரீரமெல்லாம் யோனிரூபமாய்ப்போகவுங்கடவதென்று சபித்தமையா லப்படியே சம்பவித்ததாம். இதைக்கேட்டுத் தேவர்கள்கூடி யாலோசனைபண்ணித் தங்களிராசாவுக்கு ஆண்குறிபோனதினிமித்தம் ஆட்டின்சிசனத்தையறுத்துக்கொண்டுவந்து ஒட்டினார்களாம். இந்தவ

லட்சணமானசங்கதி இராமாயணத்துப் பாலகாண்டத்திலேவிசுவாமித்திரன் இராமனுககுச்சொன்னதாகவெழுதியிருக்கின்றது. மீளவு மந்தஇரிஷியின்சாபத்தால் தேவேந்திரன் பூனையாய்ப்போனானென்றும் அவனுக்கு ஆயிரங்கண்ணுண்டாயிற்றென்றுஞ் சொல்லுகிறார்கள். இப்படிமுனிகளிடுஞ்சாபத்துக்குட்பட்டவர்கள் தேவர்களென்றெப்படி சொல்லக்கூடும்?

விக்கினேசுரன் நடைபடி.

மிகவும்விகாரரூபமுள்ள மற்றொருதேவன் இவ்விராச்சியத்தில் மிகவும்வணங்கப்படுகிறான். விக்கினேசுரன், பிள்ளையார், விநாயகன், கணேசன் முதலியபேர்க ளவனுக்குவழங்குகிறதாமே. அவனுக்கு ஆனைமுகமும் பெரியவயிறும் நாலுகைகளுமுண்டு. அவன்சிவனுக்குமூத்தகுமாரன். துர்க்கையின் அழுக்கிலேநின்றுபிறந்தானும்.அவனுக்குயானைமுகமிருப்பதின் முகாந்தரத்தைப் பலவிதமாய்ச்சொல்லுகிறார்கள். அதுகளில்முதல்விதமாவது: துர்க்கையவனைப் பிரசவித்தபோது அவனைக்காண மற்றத்தேவர்களோடே வந்தசனியின் திருஷ்டிப்பட்டுப் பிள்ளையின்தலைசாம்பலாய்ப்போயிற்று. அப்போது வடபுறத்தைநோக்கிக்கொண்டிருக்கு முதல்மிருகத்தின்தலையை யறுத்துக்கொண்டுவந்து, ஒட்டிவைக்கும்படி பிரமாகற்பித்ததின்படியே சனிபோய் ஆனைத்தலையைக்கொண்டுவந்து ஒட்டினானும். இத்தச்சங்கதிசொல்லப்படுகிறவேறுவிதமாவது: வற்மத்தினால் குமரனதன்சகோதரன்தலையை வெட்டிப்போட்டானென்றும், விக்கினேசுரனு

டையதாயார்தான் அவனைக்கண்டமுதல்விசை அவ
ள்பார்வையினொளி அவன்தலையைச்சாம்பலாக்கிப்
போட்டதென்றுஞ்சொல்லுகிறார்கள். சிவன்வந்து
அத்துரதஷ்டமறிந்து மிகவுமங்கலாய்த்து அதை
ப்பரிகாரஞ்செய்யத் தன்னூழியர்களையனுப்பி மு
கம்வடக்கேநோக்கி நித்திரைசெய்வதாக வகப்படு
முதல்வஸ்துவின்தலையை வெட்டிக்கொண்டுவரக்க
ட்டளையிட்டான். ஆனையவ்விதமாய் முதல்வஸ்து
வாகவகப்பட்டதினால் அதின்றலையையவர்கள் வெ
ட்டிக்கொண்டுவரவே சிவன் அதைவிக்கினேசுரன்
முண்டத்திலொட்டினானாம். பின்னும் உனக்குக்க
லியாணமாகஎப்படிக்கொத்தபெண்வேணுமென்
றுதகப்பன்கேட்டதற்குத்தன்தாயாருக்குச்சமான
வழகுள்ளபெண் வேணுமென்று விக்கினேசுரன்
சொல்ல, அப்படிப்பட்டபெண்கிடைக்குமட்டுந்
தேடிக்கொள்ளென்றுசிவன்சொன்னானாம். ஆதலா
ல் ஸ்திரீகள்திரளாய்த்திரியுங் கிணற்றங்கரைகுளத்த
ங்கரை ஆற்றங்கரை சாலைவழிமுதலியவிடங்களிலே
அழகியபெண்ணுக்குக் காத்துக்கொண்டிருக்கிற
பாவனையாகப்பிள்ளையார்விக்கிரகம் ஸ்தாபிக்கப்ப
ட்டிருக்கின்றதாம். புத்திக்கொவ்வாதஇப்படிக்கொ
த்தவிபரீதகதைகள்தான் புராணங்களில்விஸ்தாரமா
யெழுதியிருக்கின்றது. திரளானபேர்கள்விவேகமி
ன்றி அதுகளை மெய்யென்றுவிசுவசிக்கிறார்கள். ஆ
னால் விக்கினேசுரனித்தனை துரதஷ்டப்பட்டுத்தன்
தலைக்கேநேரிட்ட விக்கினங்களையுஞ்சேதத்தையு நீ
க்கவுந்தக்கவிதமாய்ப்பரிகரிக்கவுங் கலியாணஞ்செ
ய்யவு மின்னங் கூடாமையாயிருக்கையில் விக்கின
ங்களை நீக்குகிறவனாக அவனையெண்ணிமன்றாடிக்க

வியாணம்படிப்புமுதலான எந்தெந்தக்காரியத்தி
ன் துவக்கத்திலேயும் அவனைவணங்கிப் பூசைபண்
ணுகிறதுமகா அதிசயமான குருட்டாட்டமல்லவோ?

பொது விஷயங்கள்.

இவ்விராச்சியத்துத்தேவர்களின் கோயில்களிலே பிரசித்தமாய் ஸ்தாபித்திருக்கிற மோகவிகாரப்பதிமைகளுங் கற்புக்குவிரோதமான விக்கிரகசிலைபடங்களும் பலஸ்திரீகளினுடல்டாடல்களு மெங்குமுக்கியமாயிருக்கிறதல்லவோ? ஆனாலிதெல்லா மெய்யானதெய்வத்துக்குப் பிரியமும் யோக்கியமுமென்றெண்ணலாமோ? மீளவுமந்தத்தேவர்களின் தேர்திருநாட்களில் நடத்துகிறதெல்லாம் மோகத்துக்குமற்றதுரிச்சைகளுக்குமடுத்தகாரியங்க ளல்லாமல் வேறொன்றுமில்லை. பூசாரிக்குக்காப்புக்கட்டுகிறதும், கன்னியாதானஞ்செய்கிறதும், இரசவர்க்கம் வெல்லந் தயிர்கலந்துகொடுக்கிறதும், திரைகட்டி அஷ்டமங்களங்களையுஞ் சிற்றின்பப் பாட்டுகளையும்பாடுகிறதும், தாரகம்வார்க்கிறதும், பாரிவேட்டையாடுகிறதும், வசந்தனடிக்கிறதும், புட்பயோகஞ்செய்கிறதும்இவைமுதலியதுகளந்தத்திருவிழாக்களின்பிரதான விசேஷங்களாமே. இதுவுமல்லாமற் சிவன்பெண்சாதியாயினும் விஷ்ணுபெண்சாதியாயினு மற்றத்தேவதையாயினுந் தன்புருஷனோடேபிணங்கி அவனுடையவாபரணங்களையெல்லாமெடுத்துக்கொண்டு அவனைத்தன் மார்க்கன்வேசிக்கள்ளனென்று ஏசிப்போகிறதும், கிட்டவரவொட்டாமல் கதவைமூடிக்கொள்ளுகிறதும், புருஷன் வந்து அறியாமற்செய்தேனென்று மன்றாடினபிறகு ஆபரணங்களைக்கொடுத்துச் சமாதானமாகுகிற

தும் யாவர்க்கும் பிரசித்தமானவிஷயமல்லவோ? இதெல்லாந்தேவர்களுக்கு யோக்கியமான நடத்தையென்று சொல்லக்கூடுமோ? இப்படிநெறிகேடான நடைபடிகளைத் தெய்வத்தின்மேற்சாட்டிப் புத்திக்கும்நியாயத்துக்கு மொவ்வாத நானாவிதகாரியங்களைச்செய்கிறார்கள். இதெல்லாம் உற்றுப்பார்க்கும்போது இத்தேசத்தேவர்களின்கோயில்களு மாராதனையும் பாவத்தைப்படிப்பிக்கிற பள்ளிக்கூடமாயிருக்கிறதல்லாமற் சத்தியத்தையும்புண்ணியத்தையும் அறிகிறதுக்குவழியாயிராதென்பதற்குச் சந்தேகமில்லை. இதுவல்லாமற் பிராமணர் மூன்று நேரமும் அஞ்சு ஸ்திரீகளைக்குறித்து மன்றாடுகிறார்கள். அவர்களாரென்றால் துரோகத்தைப்பற்றிப்பத்தாவின்சாபத்துக்குள்ளான கௌதமமுனிபெண்சாதி அகலியையும், பஞ்சபாண்டவர்பெண்சாதி துரோபதையும், புருஷனால்துரோகியாயெண்ணிக கொலைக்குநியமிக்கப்பட்ட இராமனபெண்சாதி சீதையும்,பிரகஸ்பதிக்குஞ் சந்திரனுக்கும் பெண்சாதி தாரையும், இராவணனுடையபெண்சாதி மண்டோதரியுமாம். இந்த அஞ்சுபேரையும் நினைத்துமன்றாடுவதினாலும், சிவசிவா நாராயணாவென்பதினாலும், அந்தத்தவகை உருத்திராட்சந்தரிப்பதினாலும், அந்தந்தத்திருநதியிலே முழுகுவதினாலும் பாவம்விமோசனமாய்ப்போமெனகிறதினாற் பயமில்லாமல் எந்தப்பாவமுஞ் செய்துகொண்டுவருகிறதுக்கு விசாலமானவழியைத்திறக்கிறார்கள்.

இவ்விராச்சியத்துத் தேவர்களுடைய துர்மார்க்கங்களுங்குறைபாடுகளு மின்னம்வேறநேக முண்டாயிருந்தாலு மிவ்வளவுவெளிப்படுத்தினது போதுமென்றெண்ணுகிறோமல்லாம லதிகஞ்சொல்வதி

ஞற் சலிப் பரோசிகம்வருமென்றஞ்சுகிறோம். பக்ஷபாதமில்லாம லிதெல்லாம்யோசித்துக்கவனிப்பவர்கள் அப்படிக்கொத்ததேவர்களை நம்புகிறது மோசமென்றும் அவர்களுடைய வேதநெறியானது சத்தியமார்க்கமல்லவென்றுங் கண்டுபிடித்தொத்துக்கொள்ளுவார்கள். ஆனாலுணர்ந்தசத்தியத்தையநுசரியாதபடிக்குச் சிலஅபத்தநியாயங்களினாலாவது அதைமறுத்துவிடுகிறதுக்கு முன்பின்பார்க்கிறவர்களுண்டு. அவர்கள்சொல்லுகிற தென்னவென்றால, காசி, சகநாதம், திருப்பதி, சுப்பிரமணியம், காஞ்சிபுரம், சீரங்கம், கும்பகோணம், இராமேசுர மிதுமுதலானஸ்தலங்களி லெத்தனையோவிந்தையற்புதங்கள் நடக்கின்றது, தேவர்களைக்குறித்துப் பிரார்த்தித்துக்கொண்டா லாரோக்கியமும் புத்திரசந்தானமுமுண்டாம்,தேவர்கள் சொர்ப்பனத்திலேவந்துதோன்றிப் பூசைகாணிக்கைவைக்கச்சொல்லுகிறார்கள், சொன்னதுபோலேகேளாவிட்டாலுபத்திரியம்வருவிக்கிறார்கள்,அவர்கள்சத்திவல்லமை யில்லாதவர்களாயிருப்பார்களேயாகி லிதெல்லாநடக்குமோவென்பார்கள். அநேகரதெல்லாமெய்யென்று நம்பிமயங்குகிறார்கள். ஆனாலிதி லுள்ளதந்திரங்களையு மதுகளின்முகாந்தரங்களையும் வெளிப்படுத்தினா லவர்களுக்கு அந்தமயக்கம் எளிதாய்த்தீருமென்றெண்ணி அதுகளிற்சிலதுகளைத் தெளிவிப்போம்.

அந்தந்தத்தேவர்கள் கோயிலுக் குத்தியோகஸ்தரானஸ்தானீகர் பூசாரிகள் ஊழியக்காரரி லநேகர் சொல்லுகிறதென்னவென்றால்:இங்கே எங்களுக்குச் சீவனம்நடக்கின்றமையா லிருக்கிறோமேயல்லா

மற் சீவனமில்லாவிட்டா லந்தவிக்கிரகத்தின்முகத்
திலே தண்ணீரிறைப்பவர்களாமென்பார்கள். இப்
படி பிரயோசனத்தைநாடிக்கொண்டிருக்கிறவர்க
ள் சும்மாயிராம லதற்குபாயமெல்லாந்தேடி, தா
ங்கள்சேவிக்கிறகோயிலை முக்கியப்படுத்தி அதிலே
யதிக அர்ச்சனை காணிக்கை சுவாத்தியம்வரும்பொ
ருட்டுப் பற்பல வேடிக்கைசம்பிரம ஆரவாரங்க
ளை நடப்பித்துத் தங்கள்தேவனைப்பாராட்டி, இந்த
த்தெய்வம் இப்படிக்கொத்தது, அப்படிக்கொத்த
து, நினைத்தகாரியம்பலிக்கப்பண்ணும், கேட்டவ
ரங்கொடுக்குமென்று போதித்து, மாயையாலுஞ்
சூட்சத்தாலும் பொய்யானபுதுமைகளையும் வீணா
ச்சரியங்களையுஞ்செய்து, சந்தடியுடனேயதுகளை
ப் பிரபலியமாக்கிப் புத்தியில்லாதசனங்களையேய்
த்துக்கொண்டுவருகிறார்கள். இதுக்குத்திஷ்டாந்த
மாகநடந்தவிரண்டொருவிருத்தாந்தங்களைச்சொ
ல்லிக்காட்டுவோம்.

காமாட்சிகோயில்
வர்த்தமானம்.

காஞ்சிபுரத்திலே காமாட்சிகோயிலொன்றுண்
டு. அதிலேநெடுநாள்நடந்த பெரியவாச்சரியமா
வது: அந்தக்கோயிலுத்தியோகஸ்தர் கரும்புதேங்
காய் வாழைப்பழமிதுமுதலானவஸ்துக்களைமிதமி
ல்லாமற்கொண்டுவந்து நைவேத்தியம்பண்ணி, அ
தெல்லாம் அந்தஅம்மன்பட்சிக்குமென்றுகூறி, எ
ல்லார்மனசிலேயு மப்படிதோன்றும்பொருட்டுச்
சகலபதார்த்தங்களையும்பிரசித்தமாய்அம்மன்சிலை
க்குமுன்பாகக்கோயிலிலேவைத்து, ஒருகுழந்தைப்

பிள்ளையைச்சுத்தம்பண்ணிக்கொண்டுபோயதை யுமந்தக்கோயிலிலேவிட்டுககதவுகளைப்பூட்டி முத் திரைபோட்டுப் போவார்கள். மறுநாள் விடிந் தபிறகு பிரசைகள் கோயில்வாசலிலே கூடிக்கொ ண்டிருக்கையிலே கதவுதிறந்துள்ளேபோய்ப்பார் க்கிறபோதுதேங்காய்ச்சிரட்டையுங் கருப்பஞ்ச க்கையும் பாக்குத்தம்பலமுமாத்திர மங்கங்கேகிடக் கும். இதுதான் அம்மனுடையபிரசாதமென்று ஒ ருவர்மேலொருவர்விழுந்து மகாபத்தியோடேயெ டுத்துக்கொள்ளுவார்கள். மேலும்பூசாரிகள்ந்தக் குழந்தையின்காலிலேயாற்றுமணவிருக்கிறதையெ ல்லாருக்குங்காண்பித்து, அம்மன இந்தக்குழந்தை யோடேகூட ஆற்றுக்குப்போய்ச் சலக்கிரீடைப ண்ணிவிளையாடினளென்றுசொல்ல, சகலசனங்க ளு மெய்யென்றுநம்பி, ஆச்சரியப்பட்டு, அந்த அம்மன்பேரில் வெகுவிசுவாசமாயிருந்தார்கள். இப்பிரகாரம்வெகுகாலமாய்நடந்துவருகையில் அ புரங்குசகுபாட்சா கோலகொண்டையைக்கட்டிக் கொண்டு காஞ்சிபுரத்துக்கு அல்லிமர்த்துகானை ய னுப்புவித்தான். அப்போது அந்தக்கோயிற்பூசா சாரிகளானவிரண்டுபிராமணர் கோயிலுடைமை யினிமித்தம் ஒருவனோடொருவன்சண்டையிட்டுக் கொண்டு அரமனைக்குவந்துமுறையிட்டார்கள். எ ற்கனவே அல்லிமர்த்துகான் அக்கோயில்வர்த்தமா னங்கேட்டுச் சந்தேகப்பட்டு எந்தவிதத்திலேயது வெளியாகலாமென்று யோசித்துக்கொண்டிருந் தான். ஆதலால் இதுவே நல்லசமயமென்று அந் தப்பூசாசாரிகளையழைத்து உங்கள்கோயிலில்நட க்கிறதத்திரவுபாயங்களை நீங்கள்வெளிப்படுத்தினு

லாச்சு,இல்லாவிட்டா லுங்களைக்கொஞ்சத்திலேவி
டுகிறதில்லையென்றுமிரட்டிச் சவுக்காலடிக்கச்சொ
ன்னான். அவர்க ளந்த அடிபொறுக்கமாட்டாமற்
சகலத்தையும்வெளிவிட்டார்கள். அதேதெனில் உ
ட்கோயிலில் விக்கிரகத்தின்பிறகே மற்றகல்லுக்க
ளைப்போலேபோட்டுப் படியவைத்திருக்கும்பார
மானகல்லையெடுத்து அதுமூடுகிறசுரங்கவழியையு
ம் அந்தச்சுரங்கம் ஸ்தானிகன்வீட்டுமட்டும்போ
கிறதையுங்காண்பித்து இராத்திரியிலே அந்தக்கள்
ளவழியாகமனுஷர்வந்து அவ்விடத்திலிருக்குஞ் சி
றுபிள்ளைகாலிலே யாற்றுமணலைத்தட்டி அங்குள்
ளபதார்த்தங்களிற் சிறிது அங்கேதான்சாப்பட்டுள
ச்சில்களைக்கோயிலிலேபோட்டு மிஞ்சினபதார்த்த
ங்களையெல்லா மந்தவழியாகவேவீட்டுக்குக்கொண்
டுபோய்ச்சேர்க்கிறதையும் வெளியாக்கினார்கள். அ
ன்றுமுதல் அந்தக்கோயிலுக்கு ஆடம்பரமும் பூ
சையுமொழிந்துபோயினதுமன்றி அதுநெடுநாள்
பாழாய்க்கிடந்தது. இந்நாளிலதைப்புதுப்பித்திரு
ப்பார்களோ என்னமோ தெரியவில்லை.

மன்னார்கோயில்வர்த்தமானம்.

மதுரைபட்டணத்துக்குவடக்கே மன்னார்கோயி
லொன்றிருக்கின்றது. அச்சீமையிராசா வருஷாவ
ருஷம்வந்து அதிலுள்ளவிக்கிரகத்தைச்சேவித்து
அநேககாணிக்கைகளை வைத்துப்போவான். அப்
போது பூசாரிகளுக்கு நல்ல ஆதாயமுண்டாயிரு
ந்தது. பின்பு இரண்டுமூன்று ருஷ மிராசாஅச
ட்டைபண்ணி அந்தக்கோயிலுக்குவராமற்போன
தைக்கண்டு, பூசாரிகள் ஒருபாயதந்திரம் பண்ணி

னார்கள். விக்கிரகத்தின்சிரசிலே சங்குதிருகியை யுண்டாக்கி யுள்ளேகுடைவாக்கி யிதுக்குங்கண்ணுக்கும் ஊசிநுழையத்துவாரம்விட்டுச் சீலையைநனைத்து அந்தகுடைவுநிறைய அடைத்து மேலே சங்குதிருகியாலேதிருகி மூடிப்போடுவதால் அந்தவிக்கிரகங் கண்ணீர்விடுகிறபாவனையாய்த் தண்ணீர்மாலைமாலையாகவடியும்படிசெய்தார்கள். பின்னும்பூசாரிகளிந்தக்கள்ளப்புதுமையை மெய்யானவற்புதமாகவெல்லாருக்குங்காண்பித்து,இப்படியழுகிற தேவனுடையதுயரையாற்றவேணும், இல்லாவிட்டா விந்தச்சீமைக்கு மிராசாவுக்கு மென்னகேடுவருமோதெரியாது,எச்சரித்தோம், எங்கள்பேரிற்குற்றமில்லையென்றுசொல்ல, சகலரும்வெகுஆச்சரியமும்பட்டுத் திகிலுமடைந்து இராசாவுக்கு அறிக்கையிட்டதினா லிராசாவும்பயப்பட்டு, அநேககாணிக்கைகளைக் கொண்டுவந்து தேவனுடைய கலிதியையுங்கோபத்தையுந் தணித்துமாற்றுதற்கு மிகவும்பிரார்த்தித்துச்சேவித்துக்கொண்டான்.அப்போது புத்திமானானவொருவ னிதிலுள்ள உபாயதந்திரம்யோசித்துணர்ந்து, சுவாமீ யிதிலேகபடமுண்டென் றிராசாவுக்குக்கெட்டியாய்ச்சொல்வி யிந்தத்திருட்டுத்தனத்தை வெளியாக்குகிறதுக்கு உத்தரங்கொடுக்கவேணுமென்று கேட்டுக்கொண்டான். உடனேயவன் இராசாவினுத்தரவினால் விக்கிரகத்தின்கிட்டப்போகவே பூசாரிகள்தங்களுக்கு வருகிற அவமானத்துக்குப்பயப்பட்டுக் கிட்டப்போகாதே, தொடாதே, உனக்குமோசமாகுமென்று எத்தனைபயமுறுத்தினாலும் அவன்கேளாமல் விக்கிரகத்தின்சிரசை யெப்பக்கத்திலும்பாரி

சோதித்துக் கண்ணிலுள்ள சின்னதுவாரத்தைக்கண்டு மேலேமூடியிருக்கிற சங்குதிருகியைக்கழற்றியதிலிருக்கிற ஈரச்சீலையையெடுத்து எல்லார்முன்பாகவும்பிழிந்தான். இப்படிகபடம்விளங்கவேபூசாரிகள்வெட்கங்கெட்டுப்போனார்கள்.

வீரபத்திரன்கோயில்
வர்த்தமானம்.

உத்தரகடப்பையென்கிறபட்டணத்துக்குவடக்கே வீரபத்திரன்கோயிலொன்றுண்டு. அதிலேநம்பியார்செய்துகொண்டுவந்ததந்திரமாவது: ஒருகுழல் வீரபத்திரன்விக்கிரகத்தின் வாய்த்துவாரமுதல் உள்ளங்கால்மட்டுஞ்சென்று,பின்னும்பூமிக்குள் நுழைந்து அப்புறத்துக்கட்டிலே சன்னகாரைபூசின ஓர்தொட்டியைச்சேரும். நம்பியார் அந்தவிக்கிரகத்தைமுக்கியப்படுத்துவதற்குத் தேவன்தனக்குக்காணிக்கையாகஒப்புக்கொடுக்கப்பட்டபானத்திற்பாதிகுடித்துப் பாதிசரியாய்ப்பிரசாதமாகவிடுகிறானென்றுகூறிப் பாலாகிலும் பானக்கமாகிலும் பத்திருபதுகுடங்கொண்டுவரச்சொல்லிவிக்கிரகத்துக்குப்பாதிகுடிப்பாட்டிப் பாதிகாணிக்கைகொண்டுவந்தவர்களுக்கு மீதியாக்கி வைப்பார்கள். அதெப்படியென்றால் விக்கிரகத்துக்குக்குடிப்பாட்டுகிறவன் பாதிவருமட்டு மெள்ளமெள்ளவார்த்துப் பாதியானமாத்திரத்திற் சீக்கிரமாகவார்ப்பான். துவாரஞ்சிறிதாகையால் உடனேநிரம்பித்தேங்கும். அப்போது பாதியாச்சுதே தேவன்வேண்டாமென்று கக்கிப்போடுகிறானென்று நம்பியான்சொல்லுவான். சகலருமிதைவிசுவசி

த்து, மகாபயபத்தியுடனேயநேககாணிக்கைகளைக் கொண்டுவந்துவைத்துவணங்குவார்கள். புதுமணியக்காரனொருவனுக்கு இதின்மேற்சந்தேகம்வந்தமையால் இந்தக்காரியத்தைச்சோதிக்கவேணுமென்று பானக்கம்பண்ணுவித்து நூற்றைம்பதுசெம்பு அளந்து ஒருபதலையிலேவார்த்துக்கொண்டுபோய்நம்பியாருடனே நூறுசெம்புபானக்கமென்றுதொகைமோசமாய்ச்சொன்னான். நம்பியான் விக்கிரகத்துக்கு ஐம்பதாஞ்செம்புவார்க்கிறபோது பாதியென்றுநினைத்துத்துரிதமாய்வார்த்துக்கக்கப்பண்ணினான். அதைக்கண்டுமணியக்காரனிது நம்பியார்பண்ணுகிறதந்திரமென்றறிந்து, விக்கிரகத்தைச்சுற்றிலும்வெட்டிச்சோதிக்கையில்அதிலுள்ளதுவாரத்தையுந்தொட்டியையுங் கண்டுபிடித்தான். அப்படி அவர்கள்பண்ணினதந்திரமுமோசமும் வெளியாயிற்று.

திருப்பதிவர்த்தமானம.

திருப்பதியில்நேகமுறைநடந்த வர்த்தமானமாவது: திருநாளுக்குவரும் அழகுள்ளஸ்திரீகளிலெவர்களை நம்பியார் அபேட்சித்திருப்பார்களோ அவர்கள் பேரில்தேவன் ஆசைப்பட்டானென்று அவர்களைக்கொண்டுபோய்த் தங்களுக்குப்பெண்டாய்வைத்துக்கொண்டு அவர்களுக்குவயதுசாய்ந்தபிறகுகவியுகஇலட்சுமியென்னும்பேரிட்டு அவர்களைத்தேசாந்தரிகளாயனுப்பிவிடுவார்கள். அப்படிஸ்திரீகளைக்கவர்கிறபோது உரோசக்காரரானசிலபுருஷர் கோபித்துக்கொண்டு பெண்சாதிகளின்பேரிலே இந்தக்கல்லு ஆசைப்படுமோ? இதெல்லாம் நீங்க

ள்பண்ணுகிறமோசம்,இந்தத்தந்திரதிருட்டுத்தனமெல்லாமறிவோமென்று மிரட்டுவார்களேயாகில் நம்பியாரவர்களுக்குநல்லவார்த்தைசொல்வதினாலுங் கைக்கூலிகொடுப்பதினாலுஞ் சமாதானம்பண்ணிக்கொண்டுஅவர்கள்வழிபோகாதிருப்பார்கள்.ஆனாற்புத்தியீனரானஎத்தனையோபேர் பிள்ளைவேணுமென்று திருப்பதிக்குப்போயிருக்கும்போதுபெண்சாதியைப்பறிகொடுத்து அங்கலாய்த்துக்கொண்டு ஒன்றியாய்த்திரும்பிவீட்டுக்குவந்தார்கள். பின்னுஞ் சங்கிராந்திக்காலத்திலுஞ் சூனியமாசத்திலுந் தேவனுக்குச் சிரப்பாரந் தலைநோவென்று மிளகு மிளகா யேலஞ் சுக்கு ஒருமரக்கால்மட்டுமரைத்து விக்கிரகத்தின் சிரசிலேபற்றும்பூசிக்கண்ணுக்குக்கலிக்கமும்போட்டு விக்கிரகத்துக்குமுன்னேபலகஷாயமும்வைத்து அந்தமாதத்திலேவேங்கடேசுரனுக்குச் சரீரசொஸ்த மில்லையென்றுஞ் சொல்லித்தங்களையல்லாமல் ஒருவரையும் உள்ளே போகவொட்டாமற் கட்டுப்பண்ணுவார்கள். ஆயினு நல்ல கிரோஸ்தரான யாதாமொருவர் கைக்கூலி கொடுப்பார்களேயாகில் அவர்களைவரவிடுவார்கள்.

மற்றநேககோயில்ஸ்தலங்களிலே நடக்கிறதெல்லாம் நன்றாய்ப்பரிசோதித்துப்பார்த்தால் வயிறுவளர்க்கிறதற்குப் பூசாரிகள் பண்ணுகிறதந்திரவுபாயங்களுஞ் சொல்லுகிறகள்ளத்தன அபத்தங்களுமிவைமுதலிய அக்கிரமநடத்தைகளு மெத்தனையோ அகப்படலாம். அக்கியானவேதமதங்களில் விளைகிற பாவாக்கிரமங்களும் அபத்தங்களு மித்தனையென்று கணக்கில்லை.

வேறுமோசங்களின்வரலாறு.

மனுஷர்வயிறுவளர்க்கிறதுக்குச்செய்கிற உபா
யதந்திரமு மல்லாம லின்னம்வேறுசிலதப்பிதங்க
ளுமுண்டு. யாதோர்சமயத்தி லொருபீடையொரு
நோவுவந்தால் அந்தந்தப்பொய்த்தேவனுக்குப் பி
ரார்த்தித்துக்கொள்ளுவார்கள். அதுவியர்த்தமாகி
ச்சாவுமுதலியதின்மைவந்தால் நாமென்னகுற்றஞ்
செய்தோமோதேவன்பொறுத்துக்கொள்ளவில்லை
யென்பார்கள். மருந்தினாலேயாகிலுஞ் சுபாவமா
யென்கிலும் வியாதிநீங்கிப்போனால்தங்கள்பொய்
த்தேவன்செய்தசகாயமென்று குருட்டாட்டமா
ய்நினைத்து அவன்மே ல்திகநம்பிக்கைவைப்பார்க
ள். மெய்யானசர்வேசுரன் மிகுந்தகிருபையால்வர்
களுக்குச்செய்கிறநன்மைகளையும் பொய்த்தேவ
ன்செய்ததாகவெண்ணுவார்கள். இப்படியநேக
ர்தங்கள்புத்திக்குறைவினாலே மோசமாகுகிறார்கள்.
சிலசமயங்களிலே பசாசினால்நோவுவருகிறதும் நீ
ங்குகிறதுமுண்டு. பசாசு பற்பலமாய்தந்திரமும்
பண்ணித்தான்தெய்வமென்றுசாதித்துச்செத்தவ
ர்களுடையபேரிட்டுக்கொண்டு சொர்ப்பனமுத
லானவேளையில்வந்துதன்னைச்சேவிக்கவுந்தனக்குக்
கோயில்கட்டவுங் காணிக்கைவைக்கவுஞ்சொல்லு
ம். அப்படிசெய்யாவிட்டால் உபத்திரவஞ்செய்து
ம், ஆவேசமேறியுந்தலைசுற்றியு மற்றநேகதந்திரம்
பண்ணியும்வருகின்றதாம். இதெல்லாமின்னமுகா
ந்தரத்தினாலேசம்பவிக்கின்றதென்றுதெரியாம வி
த்தேசத்தார் பசாசின்சொற்படிநடந்து கெட்டுப்
போகிறார்கள். இந்தக்குருட்டாட்டம்நீங்கும்பொ
ருட்டு இதின்பேரிற் சிலவிவரங்களைச் சொல்லித்
தெளிவிப்போம்.

பசாசுகள் நடைபடி.

சர்வேசுர னுலகத்திலே முவ்விதவஸ்துக்களை யுண்டாக்கினார். அதுகளேதெனில்மனுஷருக்குபகாரமாகவுமவர்களூழியத்துக்காகவுஞ்சிஷ்டிக்கப்பட்டுச்சங்கமுந்தாவரமுமாகவகுக்கப்படுகிற மிருகசெந்துக்கள் பஞ்சபூதியங்கள்சந்திரசூரியநட்சத்திரங்களிவைமுதலான ஞானமில்லாதவஸ்துக்களும்,ஞானச்சுரூபமாகியசீவாத்துமத்தோடேகூடிய ஓர்சரீரமுமுள்ளமனுஷனுஞ் சுத்தஞானச்சுரூபிகளாகிய அரூபிகளுமாமே. அப்படிசுவாமியெண்ணிறந்த சுத்தஅரூபிகளையுண்டாக்கி அவர்களுக்கு மேலானபுத்தி திராணிமுதலியவரங்களைக் கொடுத்தபடியினாலே அவர்கள்மனுஷர்களினு முயர்ந்தசுபாவகுண வல்லபமுதலான மேன்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். சுத்தஅரூபிகளுக்குப் பிரகாசம் அட்சயம், இலகு, சூட்சமிந்நாலு விசேஷ இலக்ஷணகுணங்களும் பரமகர்த்தரால்தந்தருளப்பட்டது. பிரகாசததால்வர்களுக்கு மிகுந்தஞானமும் பிரதாபமுமுண்டு. அட்சயத்தாற் சாகாதவரத்தைக்கொண்டிருக்கிறார்கள். இலகுவினாலொருநொடிக்குள்ளே எந்தெந்தத்தூரவிடத்துக்கும்போய்வரச்சத்துவமுண்டு. சூட்சத்தினாலெப்படிக்கொத்தஅடைப்புள்ளஸ்தலத்துக்குந் தடையில்லாமற் போய்வருவார்கள். கடவுளிடத்தி லித்தனை மேன்மையானவரங்களைப்பெற்ற அரூபிகள்லே நகர்தங்களையுண்டாக்கினசுவாமியுடைய சித்தத்தின்படியே நடந்து மோக்ஷபதவியைஅடைந்தார்கள். சிலரோவெனில் தங்கள்மகிமையைப்பார்த்து ஆங்காரித்துச் சர் வேசுரனுக்கேற்காத துரோகிகளானார்கள்,

ஆதலால் மகிமைமுதலான நன்மைகளையிழந்து கர்த்தரால்தள்ளுண்டு நரகத்திலேவிழுந்தார்கள். இவர்கள்தான்பசாசுகள், அவலட்சணரூபிகளாய்த்தோன்றுகிறவர்கள், உலகத்தைக்கெடுக்கிறவர்களாமே. இவர்கள் தாங்கள்போக்கடித்த மோக்ஷத்தை மனுஷிரடையப்போகிறார்களென்கிற வற்மத்தினாலேயுந் தங்களுக்கு ஆக்கினையிடுகிறசுவாமிபேரிலே வைத்தபகையினாலேயும் மனுஷிரை மோட்சத்திற்சேரவொட்டாதபடிக்குச் சுவாமியைமறக்கடிக்கப்பிரயாசப்பட்டு அவருக்குச்செய்யத்தக்க ஆராதனையைத் தங்களுக்குச்செய்யச்சொல்லி அதற்காகப் பற்பலதந்திரவுபாயம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். இந்தப்பசாசுகள்தா னிவ்விராச்சியத்திலே திரிமூர்த்திமுதலான பலபேரைத்தரித்துக்கொண்டு மற்றஅஞ்ஞானவிராச்சியங்களிலே வெவ்வேறேபேர்களையிட்டுக்கொண்டு சத்தியவேதத்துக்குப்பதிலாக அசத்தியவேதங்களையும், மெய்யான மந்திரவுபதேசத்துக்குப்பதிலாகப் பொய்யானமந்திரவுபதேசங்களையும், நல்லதபசுக்குப்பதிலாகக் கள்ளத்தபசுகளையும், திவ்வியபூசைக்குப்பதிலாகத்தகாதபூசைகளையும், உண்மையுள்ளகுருக்களுக்குப்பதிலாக அபத்தகுருக்களையுமேற்படுத்தினது. வைரவம், சார்வாகம், காபாலிகம், புத்தம், வைஷிணவம், சைவம், உலகாயதமுதலியமதங்கள்துகளினேவுதலினாற் பிறந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிஅந்தந்தவிராச்சியங்களிலே வெவ்வேறேநாமங்களைத் தரித்துக்கொண்டு வெவ்வேறு அபத்தங்களைப்போதித்து ஒவ்வாதமதங்களையுண்டாக்கியிருந்தாலும் அதெல்லாத்துக்கும் அதுகள்

தான்காரணமென்பதுறுதி. அதுகளுக்கு மனுஷ
னைக்கெடுக்கக்கருத்தொன்றே, அதற்குச்செய்கிற வு
பாயங்கள்பலவுண்டாம். மெய்யானவேதத்துக்கு
த்துரோகஞ்செய்விப்பதற்காகப் பசாசுகள் மனு
ஷரிடத்திலே தங்கள்மட்டிற்பிரியமும் பயமுமி
வ்விரண்டும் பிறப்பிக்கச் சகலவிதமுந்தேடும். பிரி
யம்வருவிக்கிறவகையேதெனிற் சிலவேளைகள்ளச்
சகாய உபகாரஞ்செய்யும், மாயையான அதிசயங்
களையும் வீண்புதுமைகளையுங்காண்பிக்கும், சில இ
ரகசியங்களைவெளிப்படுத்தும், தான் வருவித்த ஆ
பத்தைநீக்கும், இப்படிமனிதர் தூண்டிலையிரை
யால்மறைத்து மீன்பிடிக்கிறதுபோலேயும், வலைக
ளைக்கட்டிமறைத்துத் தீனிகளைத்தெளித்துப் பட்
சிகளைப்பிடிக்கிறதுபோலேயும், பசாசுகள் கள்ள
உபகாரங்களினாலே மனுஷர்களைமயக்கித் தங்கள
டிமைத்தனத்தி லகப்படுத்தும். மனுஷரிந்தத்தந்
திரத்தைக்கண்டுபிடியாமற் பசாசுகள் தங்களுக்கு
நன்மைசெய்கிறதாகநினைத்து அதுகள்கொண்ட
பெயர்களாலேஅதுகளுக்குக்கோயில்குளங்கோபுர
ங்களைக்கட்டுவித்துச்சகலவிதசம்பிரமத்துடனேப
லிஆராதனை நடப்பிக்கிறார்கள். இவ்வண்ணமேஏக
கடவுளுக்குத்துரோகம்பண்ணி மோக்ஷபாக்கியத்
தையிழந்து பசாசுக்கடிமைகளாய் நரகத்திலே வி
ழுகிறார்கள். மெய்யானஅற்புதங்களைச்செய்யப்ப
சாசுகளுக்குவல்லமையில்லை. தாங்களேவருவித்த
வியாதி கஸ்தி விக்கினங்களை மாத்திரம் போக்கடிக்
குமொழிய சுபாவமாயிருக்கிற குருடு முடம் மல
டு இதுமுதலானதுகளை நீக்க அதுகளுக்குத்திராணி
யுமில்லை, சுதந்தரமுமில்லை. மேலும் மனிதர்பாவத்

துககாககினையாகச் சர்வேசுரனிடுமுத்தரவளவாக
மாத்திரம் பசாசின்வல்லமைசெல்லுமொழிய மற்
றப்படியல்ல. தங்களைச்சேவிககப்பணணுவதற்கு
ப் பசாசுகள் மனுஷரைமிரட்டிப் பயம்வருவிக்கி
றவிதமேதென்றால் ஆவேசமேறிச்சொரணைதட்டு
வித்து மயககி அந்தந்தப்பொய்த்தேவர்களுடைய
பேரைச்சொல்விககொககரித்துககூட்பிடுகிறதும்,
பற்பலகோரணிசேஷ்டைகளைச்செய்கிறதும், தலை
சுழற்றியாடப்பணணுகிறதும், செத்தவர்களுடை
யபேரைச்சொல்விச் சோறுமுதலானதுகளைப் ப
டைக்கக்கற்பிககிறதும், பலபல உருபங்களெடுத்
துவெருட்டுகிறதும், நித்திரையிலேதோன்றி அந்த
ந்தக கோயிலுக்குப்போய்க காணிககைவைககச்
சொல்லுகிறதும், அப்படிசெய்யாமற்போனு உ
பத்திரியப்படுத்துகிறதும்,வியாதியிககட்டுமுதலா
னதின்மைவருவித்து எருமைககிடா ஆட்டுககிடா
கோழிமுதலானதுகளைப் பலியிடஏவுகிறதும், கா
ருடவித்தை கண்கட்டுவித்தை பில்லிசூனியமுதலா
ன கெட்டதொழில்களுககு உதவியாயிருககிறதுமி
வைமுதலியதந்திரங்களுமாமே. அப்படி சிதம்ப
ரசககரம் அநுமந்தசககர முதலானசககரங்களை
யெழுதுவித்துச் சிலசூனியமந்திரங்களை யுச்சரிப்
பித்து இவன்வனுக்குப்பொல்லாப்புட்டணணவுமி
வன்வனைககொல்லவு முதவிசெய்யும். சூரியனாணை
சந்திரனாணை ஆகாசவாணி பூமிதேவியாணையென்
றிதுமுதலான ஆணையிடுவித்துப் பயங்கரமானகா
ட்சிகளைககாட்டித் தனககுப்பலி யாராதனைசெய்ய
ககற்பிககும். இவ்வணணமேதிருடர்பயமுறுத்திப்
பொருளைப்பறிப்பதுபோலே பசாசுகள்பயப்படு

த்தித்தங்களுக்குநமஸ்காரகாணிக்கைசெலுத்தப்ப
ண்ணும். அதற்காக அதுகள்செய்யுந்தந்திர உபா
யங்களுக்குக்கணக்கில்லை. பின்னையுஞ் சிலரிடத்தில்
அவபத்தியையுங் கள்ளஞானத்தையுமெழுப்பிக கீ
ர்த்தி பெருமை பொருளிச்சையையுங்கிளப்பிவா
ய்ப்பூட்டவும் அரிகண்டமாட்டவுந் தீர்த்தயாத்தி
ரையாய்ப்போகவும்பண்ணும். அதிகவெளிதாய்ம
னிதரையேய்க்கும்பொருட்டுச் சத்தியவேதமுறை
மைகளிற்சிலதுகளைக் கண்டுபாவித்து, ஒருசந்திய
பவாசமுதலிய தவக்கிரியைகளைச்செய்வித்து,அது
களோடேகூடிய தகாஅநுசாரங்களைவைத்தச் சுகி
ர்தசெய்கைகளைக்கெடுக்கும். முத்திரைத்தானம்பெ
றுகிறதும், செடிலாடுகிறதும், ஓடுகிறதேர்ச்சக்க
ரங்களின்முன்வலியக்கிடந்து சாகிறதும்,வெட்கங்
கெட்டுநிருவாணத்தோடேதிரிகிறதும், பசாசினே
வுதலா லாகுகிறதொழியமற்றப்படியல்ல. இப்படி
பசாசு பலவிதமாய் மனிதரையலைக்கழித்துக்கொ
ண்டு நரகத்திலிழுத்துக்கொள்ளும். ஆயினுமித்தே
சத்தார் பேயாராதனையிலுள்ள மதிகேடு,பாவாக்கி
ரமம்,ஆத்துமச்சேதமிவைமுதலான தின்மையெல்
லாங்கவனியாமல் அசுத்தத்துக்குமஞ்சாமல்தினே
வுதலெல்லாம் நுசரிக்கிறார்கள். அதற்கொரு திஷ்
டாந்தமாவது: மைசூர்சீமையிலே நஞ்சன்கூடெ
ன்கிறவூரிலே ஈசுரன்கோயிலொன்றுண்டு. அந்தக்
கோயிலண்டையிலே ஒருவாய்க்காலோடும். அவ்வா
ய்க்காலோரத்திலே சகலசனங்களுங் குளத்துக்கு
ப்போவார்கள். புத்திரசந்தானம் வேணுமென்று
சிவனைப்பிரார்த்தித்துக்கொள்ள அக்கோயிலுக்கு
வந்தவர்கள் ந்தவாய்க்காலோரத்திற்கிடக்கிற மலத்

தை யெடுத்துத் தலையிலேவராட்டியோலத் தட்டிக் கைகழுவாமல் அப்படிதானே நாலைந்துசிறங்கை தண்ணீரள்ளிக்குடித்துப்போய் மூன்றுநாள் வந்து அந்தவராட்டியைத்திருப்பித்திருப்பிப் பார்ப்பார்கள். அதிலேபுழுவிருந்தாற் பிள்ளையுண்டாகுமென்கிற நல்லடையாளமென்று நம்பிச் சந்தோஷிப்பார்கள். அநந்தவிசை அப்படிப்பட்ட நம்பிக்கைதப்பி விருதாவாய்ப்போயிருந்தாலு மந்தக்குருட்டாட்டமின்ன மநேகரிடத்திற் காணப்படும். இப்படிபசாசுகள்மனுஷரைச்சகலவிதமுமோசம் போக்கித் தங்களுக்கு அடிமையாக்கிக்கொள்ளும். மனுமக்களையிவ்வுலகத்தில் தந்திரம்பண்ணி அவர்களையேய்க்கிறதும், பற்பல உபத்திரவப்படுத்துகிறதும், நரகத்திலேபாவிகளை நித்தியமாய் வாதிக்கிறது மிதுகளுக்குத்தியோகமாமே. ஆனாலிதிலேசில பேருக் கொருசந்தேகமுண்டு. அதேதெனிற்பராபரவஸ்துவினுத்தரமில்லாம லொன்றும் நடக்கிறதில்லையே. அப்படியிருக்க, பசாசுகளாலித்தனைகேடுவருகிறதை அவரேன்விலக்கவில்லையென்பார்கள். பசாசின் தந்திரசோதனைகளாலே தீயோர்களுக்குத் தக்கவாக்கினையும் நல்லோர்களுக்கு அதிகபுண்ணியசம்பத்து முண்டாகுகின்றமையாற் சர்வேசுரனதுகளை விலக்காமலிருக்கிறதுமிகவுநியாயமாமே. மேலுமதுகளைச்செயித்துவிலக்கிப் புண்ணியபேறடைவதற்குச் சகலவிதவுதவியுஞ் செய்தருளுகிறார். அவ்வுதவியை ஆசை பிரமாணிக்கபத்தியோடேகைக்கொள்ளுகிறவர்களுக்குப் பசாசினால்தோர்வையுமில்லை, தின்மையுமில்லை. ஆனாற்சுவாமி மனுஷரைச்சிஷ்டித்தவருமிரட்சித்தவருமாகியதம்மை

யறிந்துசேவிப்பதற்குப் புத்தியும் ஞானமுங்கொ
டுத்திருக்கையில் அவரைச்சட்டைபண்ணாமற் பி
றக்கணித்து நிந்தித்துத் துரோகஞ்செய்கிறவர்களு
க்குச்சிட்சையாகஅவர்களைப்பசாசின்வலுமையுப
த்திரியதந்திரங்களுக்குவசமாய்க் கைவிட்டிருப்ப
து நீதியல்லவோ? சத்தியவேதப்பிரகாரமாய்நட
க்கிறவர்கள்பேரிலோவெனிற் பசாசுகளுக் கிப்படி
க்கொத்தவல்லமை யதிகாரமில்லை. அதுகளின்தந்தி
ரசோதனைகள்வர்களிடத்திற்பலிக்காது. மேலு நி
றைந்தபத்தி பரிசுத்ததனமுள்ள சத்தியவேதத்தா
ருக்குப்பயப்பட்டுப் பசாசுகள்நேகமுறை யவர்க
ள்கட்டளையால் தங்கள் ஆவேசசேஷ்டை தந்திர
மெல்லாம்விட்டு ஓடிப்போம். ஆதலாற் பசாசு ந
யங்காட்டினாலும் பயமுறுத்தினாலு மதின்தந்திர
ங்களினாலேமயங்காமல் அதுமனிதர்க்குப் பிராண
சத்துருவென்று மனதிலுறுதியாயெண்ணி அதற்
குப்பலிகாணிக்கையாராதனை யொன்றுஞ் செலுத்
தாமல் ஏகசர்வேசுரனைப்பத்தியோடே விசுவசித்
துநம்பி மன்றாடி அவருடைய அநுக்கிரகத்தைக்
கொண்டு பசாசின்தந்திரஞ்செயித்து இரட்சணி
யமடையக்கடவீர்கள்.

சத்திபூசை.

அஞ்ஞானநிறைந்த பேயாராதனையினாலும் பா
வாக்கிரமத்தினாலு மிவ்விராச்சியத்தார் அதிகமதிக
மாகக்கெட்டுப்போம்பொருட்டுப் பசாசினாலேவ
ப்பட்டகள்ளக்குருக்கள் பலபலதுர்மதங்களை யுண
டுபண்ணினார்கள். ஒன்றோடொன்றொவ்வாத அந்
தவெவ்வேறுமதங்கள் படைப்புண்டவஸ்துக்களு

க்குச்செலுத்தும் விபரீதமானபூசைகளை நுணுக்கமாய்ப்பரிசோதித்தால் மெய்ஞ்ஞானத்துக் கேற்காத அநேகதப்பறைகளுமக்கிரமங்களும்விளங்கும். சத்திபூசைவிசேஷமாய்வெட்கத்துக்குரியசகலதுர்நடத்தைகளால் எங்கும்பிரபலியமாயிற்று. அந்தச்சத்தியேதென்று அப்பூசையில்திரிந்தவர்களைக்கேட்டாற் கள்ளு சாராயமேசத்தியென்பார்கள். இப்படி நீசரும்வெட்கி யிரகசியமாய்க்குடிக்குங்கள்ளு சாராயமேஅதிலேயாராதிக்கப்படுகிற வஸ்துவாம். சத்திபூசைசெய்கிறவித மெப்படியென்றால் நடுவீட்டிலேயானு மூலைவீட்டிலென்கிலுஞ் சாணியாலேதரையைமெழுகி யதின்மேலேஅரிசியைப்பரப்புகிறார்கள். பின்னுமதின்பேரில் உலொட்டிக்குடத்தைவைத்து அதுக்குச்சீவக்கலைகொடுக்கிறோமென்று மந்திரித்து, அந்த உலொட்டிக்குடத்துக்குப் பத்திரிக்குடமென்கிறபேரிட்டு, அதற்குப் பூமாலைசூட்டிக் குங்குமஞ்சந்தனங்கெந்தாட்சதைபோட்டுப் பூசைசெய்கிறார்கள். அதன்பின் சாராயம் மூன்றுகொட்டாங்கச்சியிலேவார்த்துப் பற்பலமாங்கிஷக்கறிகளை யந்தப்பத்திரிகுடத்துக்குமுன்வைத்து நைவேத்தியஞ்செய்து, அங்குள்ள கட்டுகழுத்திகளை யெழுந்திருக்கச்சொல்லி, அவர்களுடையகால்களைக்கழுவி, அந்தக்கால்களிற் பூவுங் கெந்தாட்சதையும்போடுகிறார்கள். அதன்பின் பூசாரி அந்தப்பூவையுங்கெந்தாட்சதையையும் பிரசாதமென்று தன்சிரசின்பேரிலேயும் பத்திரிகுடத்தின்மேலேயும் சபைமேலேயும்போட்டு, ஸ்திரீகளையுட்காரச்சொல்லி யவர்கள்கையிலே பங்கிப்பொடியைக்கொடுக்கிறான். ம

ற்ற ஆணபெண்ணடங்கலும் பங்கித்தூளைவாயி லேபோட்டுக்கொள்ளுகிறார்கள். அப்போதுபூசா ரி அந்தமூன்றுகொட்டாங்கச்சியிலேயிருக்கிறசா ராயத்தைக் கட்டுகழுத்திகளுக்குக்குடிப்பாட்டி, மீ ந்ததைத்தானேகுடித்து, மற்றவர்களுக்கெல்லாம் ந் த எச்சிற்கொட்டாங்கச்சியிலே சாராயம்வார்த்து மும்மூன்றுவிசைகுடிக்கச்சொல்லுகிறான். அதன் பின் ஓர்மந்திரஞ்சொல்லி, இடதுகையிலேசாரா யமும் வலதுகையிலே மாமிசமும் பிடித்துக்கொ ண்டுசாராயத்தையுங்குடித்து, மாமிசத்தையுந்தின் கிறார்கள். பினனும் ஒருவனசோற்றைப்பிசைந்து ஒருபெரியமொத்தையாக்குகிறான். அதையெல்லா ருங்கொஞ்சங்கொஞ்சமாய்க்கடித்துத் தின்கிறார்க ள். பிற்பாடுபெரியபள்ளையமாகிலும் பெரிய இலை யாகிலுமெடுத்துஅதிலேமாமிசக்கறியையுஞ் சோ ற்றையும்போட்டு, எல்லாரும் ஏகமாய்ச்சாப்படு கிறார்கள். பூசாரி அடிக்கடிசாராயம்வார்க்கிறான். திருத்தியாய்ச்சாப்பட்டு இலாகிரியெடுக்கிறவேளை யிற் கைகழுவாமலும், எச்சில்மாற்றியிருந்தவிடஞ் சுத்தம்பணணமலும், மிருகங்களைப்போலேஆணு ம்பெணணும் ஏகமாய்ப்படுத்துக்கொள்ளுகிறார்க ள். பின்பந்தவிராத்திரியிலெனனென்னபாவாக்கிர மநடந்தாலுந்தோஷமில்லையெனபார்கள். பூசாரி தானே யெந்தெந்தஸ்திரீபேரில் விஷடம்வைக்கிறு னோ அவள்கிட்டப்போய்ப் பஞ்சமம்வேணுமெ னறநுபோகிக்கக்கேட்பான். அவள்துகருச்சம்ம திககிறதே அவ்வககிரமபூசையின்முறையாம். அந் தப் பூசையிலே பறையர் பள்ளர் சககிலியரோடே மற்றச்சகலசாதியாரும் ஏகமாய்ககலந்திருககிறார்

கள். அதற்குப்பிராமணர் விசேஷமாய்த்திரளாய் வருகிறதுணடு. அதிலே பூசாரிதொழிலையவர்கள் தானசெய்கிறுர்களாம்.

இனனும் வேறெருசத்திபூசையுமுணடு: அதிலெசாராயத்துககுப்பதிலாகப் பகருவமான ஒரு பெணணை நிருவாணத்தோடேநிறுத்துகிறுர்கள். அந்தஸ்திரீயை வைககிறவிதமுஞ் சகலருமிருககிறமுறையும் பூசைசெய்கிறவகையு மதைச்சேர்ந்தமற்றநடத்தைகளுமகாவெட்கக்கேடுள்ள அககிரமங்களாயிருககிறபடியினுலே யதுகளைவிவரித்துச்சொல்லுகிறதுயோககியமல்லவெனறு விடடுவிடடோம். இப்படி அககியானமும் பொய்த்தேவர்களினுராதனையுஞ் சகலபாவாககிரமங்களுககுஞ் சர்வவெட்கக்கேடுககும்வழியாமே. அதுவும்திசயமல்ல, ஏனென்றுல் மனிதர்தாங்களாராதிக்கிற தேவர்களின் நடத்தையை யநுசரிக்கிறதியல்பாம்.

நாமதாரிகள்.

அப்படிப்பட்டபூசைக்கு நாமதாரிகள் தங்களுக்கிருக்கும் விஷ்ணுவிக்கிரகங்களைஸ்தாபித்து உலோட்டிப்பானையையும் நாளுவிதமாயிசக்கறிசோற்றையும் விக்கிரகங்களுக்குநைவேத்தியம்பண்ணுவார்கள். பின்னுஞ் சபையின்சிரேஷ்டனுடைய கால்களைக்கழுவிக்கழுவினதண்ணீரைப்பிரசாதமெனறு எல்லாருங்குடித்து அஸ்மத்குருபியோநமவென்கிறமந்திரத்தைச்சொல்லிப் பங்கியும் வாயிலேபோட்டுக்கொண்டுமிகுதியாய்ச்சாராயமுங்குடித்து நாளுவிதகறிசோறுந் திருத்தியாய்ச்சாப்பிட்டுச் சகலரும் ஏகமாயெச்சிலுங்கலந்து எண்ணப்

படாத விகாரசேஷ்டையும் பண்ணுவார்கள். மிருகங்களிடத்திலேமுதலாய்நடவாதஅக்கிரமங்களையுமந்நேரத்திற்செய்வார்களாம். அங்கே தன்ஸ்திரீயென்றும்பரஸ்திரீயென்றுந்தன்சாதிபிறசாதியென்றுமின்னதுசாப்படலா மின்னதுசாப்படலாகாதென்றும்வித்தியாசம்பண்ணுகிறவர்களில்லை. பிராமணர்,அரசர்,வணிகர்,சூத்திரர்,வண்ணார்,பறையர், சக்கிலியர்முதலான எந்தெந்தச்சாதியாரும் அந்தப்பூசைக்குவந்தாலும் எல்லாரும்பேதகமில்லாமல்எச்சில்கலந்து ஏகமாயிருக்கவேணுமென்றும், எருமைக்கிடாக்கறி மாட்டுக்கறிமுதலாய்க் கூட்டவேணுமென்றும்,பறக்கிறதிலேகாற்றாடியும்ஊருகிறதிலே வண்டியுந்தவிரமற்றதெல்லாஞ்சாப்படலாமென்றுந்தங்கள்சாஸ்திரமாகச்சொல்லுவார்கள்.மோக ஆசையினாலும்போசனப்பிரியத்தினாலுமிலாகிரிவிருப்பத்தினாலு மநேகசனங்களிந்தச்சத்திபூசைக்குட்பட்டார்களாம். இப்படி சகலபாவாக்கிரமங்களும் வெட்கத்துக்குரிய அலங்கோலங்களுஞ்சொல்லப்படாதஅநாசாரங்களுநிறைந்தஅந்த அவலட்சணபூசையிற் சகலரோடேயுங்கலந்து நீசரிலும் கடைகெட்டநீசராய்ப் போனவர்கள் பொழுதுவிடிந்தமாத்திரத்திற் கள்ளஞானிகளாய்த் தங்கள் சுத்ததன்மையையும் ஆசாரமேன்மையையும்பாராட்டி மற்றவர்களைப்பிறக்கணிக்கிறதென்ன? இத்தனைநெறிகேட்டுக்குள்ளான பிராமணர் முதலானவர்கள் தங்களுக்குக்கீழ்த்தரமானசாதியார்நிழல்முதலாய்த் தங்கள்பேரிலே படப்போகாதென்பதென்ன? அப்படிப்பட்டவர்கள் தங்களைவிட நல்லொழுக்கவாசாரங்களையநுசரிக்கிற சத்தி

யவேதத்தார்பேரிற் குறைசொல்லத்துணிவ தெப்படி? மீளவுந்தங்களாசாரத்தவறுகளைமறைத்து மனிதரையேய்ப்பதற்குத் தங்களுக்குள்ளேமாத்திரம்வழங்கு மாறுபாஷையுண்டாக்கிக்கொண்டார்கள். அதெப்படியெனில் தங்களைமயேசுரரென்றும், பாகவதஞானிகளென்றும், தங்கள்மதத்துக்குட்படாதவர்களைப் பசுக்களென்றும், பிறகடுசுத்திகளென்றும், இறைச்சியைப் பொதுப்பெயராகத் திவித்தியமென்றும், சுத்தியென்றும், கோமாங்கிஷத்தைப் பெரியவஸ்துவெனறும், பனறியைப் பூசனிக்காயெனறும், காட்டுப்பனறியைக் காட்டுப்பூசனிக்காயெனறும், ஆட்டைப்பசுக்கம்பளியெனறும், மீனை நீர்வாழைக்காய், தண்டுகள், பாதாளசுத்தியெனறும், கோழியைக்கிளைக்கட்டையெனறும் காலஞானியெனறும், முட்டைகளைவிபூதியுண்டை திருமணியுண்டையெனறும், வெங்காயத்தை நசியமெனறும், வெள்ளுள்ளியைப் பெருங்காயமெனறும் இரகசியபெயரிட்டுக்குறிக்கிறார்கள். அப்படியே யநேகபொருட்களினபெயர் மாற்றிக்கொண்டிருக்கிறார்களாம்.

அசத்தியகுருக்கள்.

இவ்விராச்சியத்திலே எங்கேபார்த்தாலும் எண்ணிறந்தபாவாக்கிரமங்களும்அந்தகாரமான அக்கியானமுமூடிக்கொண்டிருக்கிறதுமனறி நிர்ப்பாக்கியதுனபங்க ள்திலே மிதமினறிப் பலுகினதாமே. அதெல்லாத்துக்கும் பிரதானகாரணமேதெனறால் அசத்தியகுருக்களின்மிகுதியாமே. எனெனில் அசத்தியகுருக்களால் அஞ்ஞானமும், அஞ்

ஞானத்தாற்பாவமும், பாவத்தால் தேவநீதிக்கோ பாக்கினையும் விளைகிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆதலாற்சத்தியகுருஆரொன்றும்,அசத்தியகுருஆரொன்றுநன்றாய் யோசித்தறியவேண்டும். மெய்யானபரமகர்த்தராலேற்படுத்தப்பட்ட குருப்பட்டத்தைத்தக்கமுறையாய்ப்பெற்று,உண்மையாய்ச்சர்வேசுரனையாராதித்து, மோக்ஷவழியைக்காண்பிக்கிறவர்களைக் குருவென்று நம்பவேணுமல்லாதே தங்கள்வயிற்றைவளர்க்கப் பொய்ச்சாஸ்திரங்களையும் அபத்தமதப்போதனையையுஞ்சொல்லி ஆதாயத்துக் குபாயதந்திரம்பண்ணுகிறவர்களைக்குருவென்று நம்பலாகாது. குருவானவரீடேற்றத்துக்குரிய சுகிர்தநெறியைத் தானுமறிந்தநுசரித்துச்சத்தியவேதபோதனையா லதனைமற்றவர்களுக்குங்காண்பித்துச் சகலபுண்ணியங்களுக்கும்மாதிரிகையாயிருந்து, பாவத்தைப்போக்குகிற மெய்யானவிதத்தையுங் கற்பித்திடக்கடவான. இவ்விராச்சியத்துப் பற்பலமதக்குருக்களுக்கோவெனி லிதெல்லாங்கவையில்லை. குருவெனகிறபேர்மாத்திரமிருந்தாற்போதுமென்றிருக்கிறார்கள். அதுவுமதிசயமல்ல. ஏனெனிற் பொய்த்தேவர்களுக்கு ஆராதனைசெய்கிறவர்கள் பொய்க்குருக்களா யிருப்பார்களேயல்லாமற்பரிச்சேதமெய்யானகுருக்களா யிருக்கமாட்டார்கள். ஆதலால் மும்மூர்த்திகளும் இத்தேசத்தேவர்களாகவெண்ணப்பட்ட மற்றவஸ்துக்களுந்தேவர்களல்லவென்று திஷ்டாந்தமாய் ஒப்பிக்கப்பட்டிருக்கையி லதுகளைச் சேவிக்கிறபூசாரிகள்முதலானவர்கள் மெய்யானகுருக்களல்லவென்ப துறுதி.

வைஷிணவருக்குள்ளே பிரதானசிம்மாசனங்களை க்கொண்டிருக்கிற நாலுவகைக்குருக்களும் அவர்களுக்குக்கீழே எழுபத்தேழுபீடங்களு மற்றநேக குருக்களுமுண்டெனபார்கள். இலிங்கதாரிகளுக்குள்ளேயோவெனறால் மொட்டைத்தலையரும் விரத்தரெனனப்பட்டவர்களுஞ் சமுசாரிகளுமற்றப்பல விதமுள்ளவர்களுமாகிய குருக்களுண்டு. ஸ்மார்த்தபிராமணர்களுக்குந் தத்துவாதிகளுக்குஞ் சந்நியாசிகளெனனப்பட்ட வெவ்வேறுகுருக்களிருக்கிறதாம். ஆயினும் பிராமணர் சகலசாதிகளுக்குந் தாங்களேகுருக்களெனறு சாதிப்பார்கள். சைனகுருக்களும்வேறுண்டு. அக்கியானத்திற்பிரிந்த இத்தனைவிபரீதமதககுருககளிருகக அவர்கள்போதிககும் ஒனறேனறெவ்வாதபோதனை அபத்தமெனபதற்குச் சந்தேகமில்லை. ஆதலா லவர்களினாலே யுண்மைககும் ஆத்துமவீட்டேற்றத்துக்கும் பற்பலவிககினம்வருகிறதொழிய ஒருபிரயோசனமுமில்லை. பினனும் வழககமாய் ஒவ்வோர்வமிசத்திற்குருத்துவப்பரம்பரியமாவதுகள்ளஞானமாவது நாலுவார்த்தைபிரசங்கித்து அவரவருககுப்பிரியங்காட்டுகிற வாசாலகமாவது இவைமுதலான முகாந்தரங்களாவது பற்பலஅஞ்ஞானமதங்களிற் குருவாகவேற்படுத்தப்படுவதற்குக காரணமாகும். அப்படிப்பட்டகுருககளைத்தானதெய்வமெனறும் மோக்ஷசாதனமெனறும் பாராட்டுவார்கள். குருவில்லாதிருககலாகாதெனறுங் குருவில்லாமலிருககிறது மகாகுறையெனறும் ஈனமெனறும் அநாசாரமெனறுஞ் சொல்லுவதுசரி. ஆனா லிது சத்தியகுருககளைப்பற்றி மெய்யாயிருப்பதொழிய மற்றப்ப

டியல்ல. குருவினபெயர் மாத்திரங்கொண்டிருக்கிற அஞ்ஞானக்குருக்களொருவனாக இருந்தாலுஞ் சனங்களுக்குத் தீதொழிய நன்மையல்ல. அதிகாரிகள பிரபுக்கள் பெரியவுத்தியோகஸ்தர் முதலானவர்கள் எத்தனையநியாயக்கொடுமைகளை நடத்தினாலும் அப்படிப்பட்டகுருக்கள் அதுக்குச்சம்மதித்தாற்போலே அவர்களுக்கிஷ்டமானபடி நடந்து அவர்கள் தங்களைக் குருவுத்தியோகத்தில் நிலைப்படுத்தும்படிக்குமாத்திரந் தேடுகிறார்கள். சனங்களுக்குச்சுகிர்தபோதனை சொல்லாமலும், பரகதியினெறியைக் காட்டாமலும்அஞ்ஞானவிருளிலும்பாவச்சேற்றிலும் அதுகளை யிளக்காரமாய்விடுகிறார்கள். ஆகையாலப்படிப்பட்டவர்கள் கள்ளக்குருக்களொழிய மெய்யானகுருக்களுடைய லிலட்சணங்கள் அவர்களிடத்திற் பரிச்சேதமில்லை. அவர்கள் மெய்யானசர்வேசுரனுடையமுத்திரைமனுஷருமல்ல, அவரையறிந்தவர்களுமல்ல. அவர்களபடித்தசாஸ்திரத்தைப்பரிசோதித்தால் அபத்தநிறைந்த அற்பசாஸ்திரமொழியவேறல்ல. மும்மூர்த்திகளுடைய அசுசி யசத்தியமானசரித்திரங்கள் முதலியகதைகளைப்படித்துச்சொல்லுவார்கள. சீஷர் அந்தக்கதைகளைக்கேட்டநுசரிப்பதினாலவர்களுக்குக்கேடொழிய வேறல்ல. ஆனாலிதெல்லா மித்தேசத்தார் யோசியாமற் குருவெவ்வளவு மூடனாயிருந்தாலு மவனசொல்வது எவ்வளவபத்தமாயிருந்தாலும்அதுகுருச்சம்பிரதாயமென்றநுசரிப்பார்கள. அந்தக்குருக்களிரகசியமாய்ச் சீஷருக்குக்காதிலேசொல்லுகிற பிரதானவுபதேசமென்னவென்றால் அஸ்மத்குருபியோநமவென்பதாம். அப்படி மெய்யானசர்வேசுரனையா

ராதிக்கக் கற்பியாமல் தங்களை நினைத்துத் தங்களை விசேஷமாய் நமஸ்கரிக்கச்சொல்லுவார்கள. இதுககுச்சரியானவாங்காரமும் பாவமு முலகத்திலுணடோ? இப்படிககொத்தவாங்காரத்தினாலே யல்லோ பசாசுகள நரகபாதாளத்திலேவிழுந்தது. மேலும் ஞ்ஞானககுருககள் நேகர்தாங்களே சகலபாவங்களிலேயு மமிழ்ந்தியிருந்தாலும் அந்தப்பாவங்களையுந் தங்களசுபாவ வீனத்தையுநினையாமல் தங்களைககுருவிராயனென்றுங் குருச்சககரவர்த்திகளென்றுந் தெய்வங்களையழைப்பிககிறவர்களென்றுஞ் சொல்லித் தங்களுககுப்பூசைசெய்வித்துந் தங்களபாதங்களைககழுவினதண்ணீரைக குடிப்பித்துஞ் சீஷர்களசிரசினபேரிலே தங்களபாதங்களைவைத்துந் தங்களெச்சில்தம்பலமுதவிய வெச்சில்களைத்தினனச் சீஷர்களுககுககொடுத்துககொண்டும் வருவார்கள. மீளவும் எந்தச்சமயத்திலுந் தங்களுககுப் பாதகாணிககைவைககச்சொல்லுகிறதும் விசேஷமாய்த் தீட்சைகொடுககிறபோதும் விவாகம்முடிககிறபோதும்பிளளைபிறககிறபோதும்யாதொருவர் சாகிறபோதுந்தட்சணை தானங்கொடுககவேணுமென்கிறது மவர்களுககுமுறை. இதுதான்வர்கள சொல்லுகிறஉபதேசமும் பிரசங்கமுமாமே. சீஷர்களசெய்கிறபாவபுண்ணியங்களை அவர்களவிசாரிககிறதுமில்லை, தாங்களுஞ் சத்தியசுகிர்தநெறியைத்தேடுகிறதுமில்லை. சீஷர்களகையிலே பணமுண்டோ இல்லையோவென்று அறியவு மதனைககைககொளளவுமாத்திரஞ் சுறுசுறுப்பாய்த்திரிவார்கள. ஒருவன் எத்தனைகுடியைககெடுத்திருந்தாலும் பிறருடைமையைத்திருடிவந்தாலுந்தங்களுககுககொடுத்

தால்நல்லவன். கொடாதவனைச் சாதிக்குப்புறம்பாய்த்தள்ளுகிறதுஞ் சாணியைக்கரைத்து அவன்தலையிலேயூற்றுகிறதும் இதுமுதலான அவமானங்களுஞ்செய்கிறது மவர்களுக்குவழக்கமல்லவோ? கடன்வாங்கியாகிலுந் தங்களுக்குக்கொடுக்கவேணுமென்று கற்பிப்பார்கள். எத்தனையவதூறுபட்ட ஸ்திரீயானாலுந் தங்களுக்குப்பணங்கொடுத்தாற்போதும், வைஷ்ணவரானால் அவளுக்குமாரிலே கெருடமுத்திரையையும், இலிங்கங்கட்டிகளானால் தொடையிலே இலிங்கமுத்திரையையும்போட்டுப் பரிசுத்தமாயிருக்கிறாளென்று நிச்சயிப்பார்கள். பிற்பாடு அவளபலஸ்திரீயைப்பார்க்கக் கடைகெட்டவளாய்த்திரிந்தாலும் பாவமில்லையென்பார்கள். பின்னுமெப்போபார்த்தாலும் அபராதநாடிச்சீஷர்கள்பேரிலே குற்றந்தேடிக்கொண்டுதிரிவார்கள். ஒருஅற்பகுற்றங்கட்பட்டா லதைப்பெரிதாக்கி மிரட்டிப் பணம்பறிக்க வழிபண்ணிக்கொள்ளுவார்கள். யாதோர்ஸ்திரீபேரிலே யிச்சைப்பட்டாற் குருப்பிரசாதமென்றெளிதாயவளைப் பாவத்துக்குள்ளாக்குவார்கள். இப்படிப்பட்டவர்களைக் குருவென்று நம்பிப்பின்சென்றாற் குருடன் குருடனுக்குவழிகாட்ட இருவரும் பள்ளத்திலேவிழுகிறதுபோலே குருவுஞ்சீஷனு நரகத்திலேவிழுவார்களென்பதே நிச்சயம். ஆதலால்

திருபஹீனந்தியச்சேத்தேசம்
விஸ்நேகம்பாந்தவந்தியச்சேத்
தியச்சேத்குரூமுகாம் பாரியாம்
ஞானஹீனங்குருந்தியச்சேத்

என்னும் சுலோகத்தில்அரசனில்லாத்தேசத்தை விடவும், சினேகிதமில்லாதவுறவனைவிடவும், குருர

மூகமுள்ளபெண்சாதியைவிடவும், ஞானமில்லாதகுருவைவிடவுஞ் சொல்லியிருக்க, அதைப்பார்க்கிலும் அஞ்ஞானப்போதகத்தைப்போதித்து நரகத்திவிழுத்துக்கொள்ளுங் கள்ளக்குருக்களைவிட்டுச் சத்தியநெறியிற்சேருவதே அதிகவவசரமாமே. யாதாமொருவர் அஞ்ஞானத்தைவிட்டுச் சத்தியவேதத்தைப்பற்றிக்கொண்டாற் சிலஅஞ்ஞானக்குருக்கள தங்களசீவனங்குறைந்துபோகின்றதெனறெண்ணி வைராக்கியம்பண்ணி அவர்களுக்குநேகதுனபமுதலானபொல்லாப்புவருவித்து அவர்களபிழைப்பைக்கெடுத்து அவர்களூரைவிட்டோடிப்போகும்படி தந்திரமெல்லாம்பண்ணுவார்கள. இதிலுள்ளபெரும் அநீதத்தைப்பாருங்கள. ஒருவைத்தியனகொடுக்கிறமருந்தினால் நனமையாகாமல் உயிர்ச்சேதம்வருமெனறு ரோகஸ்தனகண்டு வேறேநல்லவைத்தியனைத்தேடிக்கொணடானால் பழையவைத்தியன உரோகஸ்தனைக்கோபித்து நிந்தித்துப் பழிவாங்கத்தேடுவது நியாயமோவெனன! பாவத்தைப்போக்கிமீட்டேற்றமாட்டாத அஞ்ஞானக்குருவைவிட்டு உத்தமஞானவைத்தியராகிய மெய்யானகுருக்களைத்தேடி இரட்சணியத்துக்குரிய நன்னெறியிற்சேருகிறவர்களுக்குப் பொல்லாப்புச்செய்கிறது அதைவிட அதிகஅநியாயமல்லவோ? ஆதலாலிப்படிப்பட்ட அநீதத்தைப்பற்றித்தேவபழிவருமென்பதற்குச் சந்தேகமில்லை.

இற்றைவரைக்குங்காண்பித்த திஷ்டாந்தமானநியாயங்களினால் இவ்விராச்சியத்திலேவணங்கப்படுகிறதேவர்கள பொய்த்தேவர்களாகவும், அவர்களைச் சேவிக்கிற பூசாரிகளமுதலிய அஞ்ஞானக்குருக்கள கள்ளக்குருக்களாகவும் விளங்கினதாமே. அப்ப

டியிருக்க இத்தேசத்தாருக்கு மோக்ஷமார்க்கங் காண்பிக்கிற மெய்யானகுருக்களில்லையோ? கரையேறுகிறதுக்குவழியில்லையோவென்று கேட்பார்களாக்கும். சகலமனிதருங் கரையேறுதற்கு ஏகவழியாகிய சத்தியவேதமு மதின்கட்டளையின்படியேமெய்யானகடவுளையாராதிக்கிறசத்தியகுருக்களுமுண்டென்று சகலருமறியக்கடவார்கள். எப்போது சர்வேசுரன் மனிதரையுண்டாக்கினரோ அப்போதுதானே சத்தியவேதத்தையு முண்டாக்கினர். பின்னு நன்னெறிதவறின மனுமக்களுக்கு அதனை மோக்ஷவழியாகக்காட்டுகிறதுக்குத் தம்முடையமுத்திரைமனுஷராகிய சத்தியகுருக்களைக் கட்டளையிட்டருளினர்.

சத்தியவேதஇலட்சணம.

சத்தியவேத இலட்சணமேதென்றால் ஏகமெய்யானசர்வேசுரனாற் கற்பிக்கப்பட்டுஅவராலொன்றுதெளிவித்து,அவருடையசுபாவஇலட்சணங்களும்,அவர்பரலோகபூலோகத்தையு மதுகளிலடங்கியவஸ்துக்களையும்படைத்தவிதமும், அதுகளைச்சிஷடித்தற்கான முகாந்தரங்களும், பாவத்தைவிலகிச்சகலபுண்ணியங்களையு மநுசரிக்கவேண்டியமுறையும்,பாவம்வந்தவிதமும், அதனைப்பரிகரிப்பதற்குரியபிரகாரமும், பாவபுண்ணியங்களுக்கு நியமிக்கப்பட்ட நரகமோக்ஷசம்பாவனையு மின்னின்னவென்றறிவித்து வெளிப்படுத்துகிறதும்பொய்க்கலப்பின்றிச் சுகிர்தசத்தியத்தையுடதேசிக்கிறதும் அதினிலக்ஷணமென்னத்தகும். இந்தச்சத்தியவேதமான ஆதாரமகர்த்தராற் சகலசனங்களுக்கும் பொது

வாகக்கற்பிக்கப்பட்டது. இத்திருவேதம் பூர்வீகந்துவக்கி யிடைவிடாமலிவ்விராச்சியத்திலும் பிரசித்தமாய்வழங்கிவருகிறதாமே. அநேககாலம் பசாசின்தந்திரங்களினாலுங் கள்ளக்குருக்களு மிவர்கள்முதலானவர்களும் உதரநிமித்தஞ்செய்த கபடதந்திரவிக்கினங்களினாலு மித்தேசங்களி லக்கியானமிகுந்திருந்தாலுந்தேவகிருபையாற்சத்தியமார்க்கமதிகபிரபலியமாகுங்காலம்வந்திருக்கின்றதென்கிறநம்பிக்கையுண்டு. இவ்வெல்லாஞ்சத்தியவேதபரிட்சையென்கிறபுஸ்தகத்தில்விரிவாயுந்திஷ்டாந்தமாயுஞ் சொல்லப்பட்டமையால் இங்கே சுருக்கமாய்ச்சொன்னதுபோதுமென்றிருக்கின்றோம்.

சததியகுருக்கள்.

சத்தியவேதத்தைப்போதிககிறவர்களுடைய இலக்ஷணங்களேதெனறால் வெகுதூரதேசத்திற்பிறந்திருந்தாலு மிவ்விராச்சியமெல்லா மூடிககொண்ட அககியானஇருளை நீககவும, பசாசிண்டிமைத்தனத்திலகபபட்டவர்களை மீட்கவும், நரகத்தில்விழத்திரிகிற இத்தேசத்தாருககுமோக்ஷவழிகாண்பித்து, கடவுளுககுத்தோத்திரமாக அவர்களையீடேற்றவுமாசைபபட்டுத்தங்கள்சன்மதேசத்தையும, உற்றார்பெற்றார்சிநேகிதரையும, உலோகசுகசெல்வபாககியமெல்லாவற்றையுந்துறந்து, இத்தனை தூரத்தினினறிவ்விராச்சியத்துககுவந்துவிரத்தராய்ச்சுகிர்தநெறியையநுசரித்துக்கொண்டிருக்கிறதுஞ்சீவிர்கையிற்பிரயோசனந்தேடாமலும், எந்தப்பிரயாச ஆபத்துக்கு மஞ்சாமலும், அங்கங்கேமடங்களைக்கட்டி அதுகளில் தபசுசெய்கிறதுஞ் சத்தியவேதத்தைப்போ

திக்க அங்கங்கேசுற்றித்திரிகிறதுஞ் சகலருடையஆ
த்துமவிரட்சணியத்தைநாடி யிடைவிடாம ல்தற்கு
ப்பிரயாசப்படுகிறதுமாமே.

அக்கியானத்திலுள்ள கபடங்களும் அபத்தங்க
ளுஞ்சத்தியவேதத்தினால் வெட்டவெளியாகுகின்ற
மையாற் கள்ளக்குருக்களும், அஞ்ஞானம்வளர்க்
கிறபாவங்களில்மிழ்ந்திருக்கிறவர்களும் இததிவ்
வியவேதத்தையநுசரியாம ல்தற்குவிரோதமாய்ப்ப
ற்பல தூஷணங்களைச்சொல்லி யநேகதந்திரங்களை
ப்பண்ணுகிற த்திசயமல்ல. ஆனாலவர்களென்னப
ண்ணினாலுமோக்ஷகரையேறஉறுதிமனதுள்ளவர்
கள்சத்தியநெறியிற்சேராதபடிக்குவிக்கினஞ்செய்
வதற் கவர்களாலேகூடாது. சத்தியகுருக்கள்போ
திக்கிறதிவ்வியவேதநெறியா வீடேற்றங்கிடைப்பத
ல்லாமலதற்குவேறுவழி யில்லை யென்றுருப்பித்ததா
யிற்று. ஆதலால் மனிதராலென்னவிக்கின உபத்திரி
யங்கள்நேரிட்டாலும் அதுகளுக்கஞ்சாமல்தைரிய
மா யிதுகளைச்செயித்துச் சத்தியத்தையநுசரிக்க
வேண்டும். அப்படிப்பட்டவுறுதியுள்ளோர்களுக்க
ந்தத்துன்பங்கள் தீவிரமாயொழிவதுமன்றி நித்தி
யபேரின்பபாக்கியம்பெறுவதற்குதவியுமாமே. ம
னிதர்க்குப்பயந்து சத்தியவேதத்தையநுசரியாதவ
னோவெனிற் பேரின்பவிராச்சியத்திற்சேராமல்நி
த்தியமாய்ப்பசாசுகளோடே நரகாக்கினையநுபவி
ப்பதற்காளாய்ப்போகிறான். ஆகையாலிதெல்லாம்
யோசித்துத் திடமானபத்திவிசுவாசத்துடனே ஏக
மெய்யானசர்வேசுரனைவணங்கிச்சேவித்துஅவரு
டையவேதகற்பனைகளின்படியேநடப்பீர்களாக.

பொருளட்டவணை.

பிழை திருத்தல்.

பக்கம்,	வரி,	பிழை,	திருத்தல்.
௫௭	௨௨	உரோகினி	உரோகிணி.
௯௮	௰௫	பிராத்தித்து	பிரார்த்தித்து.

முற்றிற்று முற்றும்.

3.-

Teyvapparitcai

தெய்வப்பரிட்சை

இஃது

புதுவையிலெழுந்தருளியிருக்

மகாகனம்பொருந்திய ஆண்டவராகிய

கிளேமென்சு பொனு

துரிசிப்பாரொன்னும

நாமதேயங்கொண்டிருக்கிற

மேற்றிராணியாரவர்கள் நுமதிய

உரோமாபுரியினின்றுவந்த

உத்தாரத்தின்படியே



1846

௲ அ௱சயசு ஞூ

புதுவையிற் சன்மவிராக்கினிமாதா கோயிலச்சேர்